294

No. M. 2210

வருஷ

PROPRIETOR } வை. மு. கோதைநாயகி அம்மாள்
(MRS. V. M. PARTHASARATHY IYENGAR.)

JEGAN MOHINI

ஜகன்மோகினி

மலர் 8 JUNE-JULY 1931 இதழ் 7-8

அணா 3.

ஜகன்மோகினி ஆபீஸ்,
26, தோடித் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

குறிப்பு:—ஒவ்வொரு மாதமும் கடைசித்தேதியில் சஞ்சிகை வெ

எட்டாவது ஆண்டு ! எட்டாவது ஆண்டு !!

ஜகன்மோகினி.

இதன் 8-வது ஆண்டு 1930ஹு டிசம்பர்மீ முதல் ஆரம்பம். இதில் **ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாளால்** எழுதப்பட்ட **சாமளநாதன்** என்னும் அற்புதமான நாவலின் தொடர்ச்சியும், ஹாஸ்ய விநோதங்களும், அனுபவ நீதிகளும், காவியங்களும், இன்னும் மற்ற ருசிகரமான விஷயங்களும் வெளிவரும். இதன் வருடச் சந்தா உள்நாடு, வெளி நாடு இரண்டிற்கும் தபாற்கூலி யுள்பட ரூ. 1-8-0 தான். "**சாமளநாதன்**" சென்றவாண்டின் ஏழாவது சஞ்சிகையிலிருந்து ஆரம்பமாதலால் புதிதாகச் சேரும் சந்தா நேயர்கள் அந்த ஆறு சஞ்சிகைகளுக்காக 12 அணு கூடச் சேர்த்து ரூ. 2¼ அனுப்பினுல், அவற்றை அனுப்புகிறோம்.

சந்தா விவரம்.

(1) சந்தாத் தொகையை நமக்கு நேரில் முன்பணமாக அனுப்பியாவது, வி. பியில் பணம் கட்டியாவது அல்லது நமது கௌரவப் பிரதிநிதிகளிடத்திலும் ஏஜண்டுகளிடத்திலும் கொடுத்தாவது பத்
திரி[illegible]ப் பெற்றுக் கொள்ளலாம். பத்திரிகையை வி. பியில்
[illegible]தால் சந்தா நேயர்களுக்கு மூன்றணு அதிக செலவுண்டாகு
[illegible] முன்பண மனுப்புவதே நலம்.

[illegible] சந்தா நேயர்கள் நமக்கு எழுதும் கடிதங்களில் **சந்தா**
[illegible]மறக்காமல் குறிப்பிடவேண்டும்.

[illegible] பிரதி ஆங்கில மாதமும் **கடைசித் தேதியில்** நமது பத்திரி
[illegible]ராம் எல்லா சந்தா நேயர்களுக்கும் அனுப்புகிறோம். ஒரு
[illegible] சஞ்சிகை அடுத்த மாதம் 15 **தேதிக்குள்** கிடைக்காவிட்
[illegible] தபாலில் தவறிவிட்டதென்று தெளிந்து உடனே நமக்
[illegible]வித்தால் வேறு சஞ்சிகையை அனுப்புவோம். அப்படிச்
[illegible]வர்களுக்கு, மூன்றணு ஸ்டாம்பு அனுப்பினுல்தான் வேறு
[illegible] அனுப்பப்படும். 15 தேதிக்குமுன் சஞ்சிகை வரவில்லை
[illegible] வரும் கடிதங்கள் கவனிக்கப்பட மாட்டா.

[illegible]) இடம் மாறும் சந்தா நேயர்கள் தமது புது விலாசத்தை
[illegible] நமக்குத் தெரிவிப்பதுடன், தங்களுடைய புது விலாசத்
[illegible]ஞ்சிகை சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடுசெய்து
[illegible]வேண்டும். அப்படிச் செய்யாது சஞ்சிகை தவறிவிடின்
[illegible] நாம் ஜவாப்தாரியல்ல.

[illegible]) நமக்கு ஏஜண்டுகள் இல்லாத விடங்களில் **ஐந்து சந்தா**
[illegible]ளைச் **சேர்த்துக் கொடுப்பவர்கள் ஒரு வருஷ சஞ்சிகையை**
[illegible]**கப் பெறுவதுடன் பரிசுப் போட்டியில் சேர்த்துக் கொள்**
[illegible]**வார்கள்.** **மானேஜர்.**

13 OCT 1931

8—வது அதிகாரம்

குடிவெறியின் கொடுமை

"மா பெரும் கூட்டத்தின் மத்தியில் இத்தகைய கோர சம்பவங்கள் நடக்கத் துவங்கியதும் எங்கும் அமைதியற்றது. ஸாவித்திரியை வெகு சுதந்திரத்துடன் அடித்தவன் அவள் புருஷன்தான் என்பதை எல்லோரும் எளிதில் உணர்ந்து கொண்டார்களெனினும் அவனுடைய அதிமூர்க்கமான செய்கையைக் கண்டு எல்லோரும் வெறுத்தும் கோபித்தும் எழுந்தார்கள். அவ்வாறு பொங்கி எழுந்த ஆத்திரத்துடன் வந்த ஜனங்கள் நாகசாமியின் இரு கரங்களையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, கண்கள் சிவக்க உக்கிரகமாகப் பார்த்துக் கொண்டே "ஐயா! சற்று நிதானியும். உம்மைப் போன்ற மடத்தனமானவர்கள் உலகத்தில் வேறெவரும் இருக்கமாட்டார்கள். இத்தகைய அதி மனோகரமான கூட்டத்தில் நீர் கேவலம் அநாகரிகமாய் நடந்து கொள்வது சற்றும் நன்றாக இல்லை. இந்த அம்மாளை நீர் இந்த பெரிய கூட்டத்தில் அவமதித்த செய்கையானது ராவணன், துர்யோதனன் முதலியோர் அடைந்த பலனையே உமக்கு அளிக்கும். பெண்களின் மகிமையை அறியாது இத்தனை நாள் அவர்களை நாம் அநியாயமாக சிறையில் வைப்பதற் கொப்பாக வைத்து விட்ட ஓர் கடுஞ்[illegible]லிருந்து உலகமெங்கும் கொண்டாடும் உத்தமன் [illegible]க் கண்விழிக்கச் செய்துள்ள இக்காலத்தில் [illegible]சம்போல இவ்விதம் மூர்க்கத்தன்மையைக் [illegible]ந. ஐயா! இந்த அம்மாள் தங்கள் மனைவியாக

[illegible]னுக்களில் எழுத முயன்றால் ஒரு எழுத்தக்கூட எ[illegible]னால் சிலர் வழக்கமில்லாத என்னென்னவோ வேலைகளை ஒரு வினாடியல சற்றும் யோசனை இன்றிச் செய்து முடித்து விடுகிறார்கள்.

JL
ഞ211, N24JM
N318.7,8
210034

விருப்பினும் நீங்கள் உமது அபிப்பிராயத்தை வீட்டில் தெரிவிப்பது அழகேயன்றி இவ்விதம் அவமதிப்பது அழகல்ல. உம்முடைய அருகில் வரும்போதே நீர் நன்றாகக் குடித்துவிட்டு வந்திருப்பதை விளம்பரம் செய்ய மணம் வீசுகின்றது. இத்தகைய அருவருப்பான குடியை மனஸ்கரித்துக் குடிப்பதினாலேயே உமக்கு எந்த காரியம் எவ்விதம் செய்யவேண்டும் என்கிற பகுத்தறிவே அடியோடு மறந்து விட்டதுபோல விருக்கிறது. கூட்டத்தை விட்டு வெளியே போங்கள் ஐயா!" என்று கையைப்பிடித்து தடதடவென்று இழுத்தார்கள்.

இதைக்கண்ட நாகசாமிக்குக் கோபம் பொங்கிவிட்டது. "ஹா! என்ன அனியாயம்! என் மனைவியை நான் என்ன செய்தால் உங்களுக்கென்ன வந்தது. அடீ! தடிக்கழுதை! இப்போதே விஷயமறிந்து கொண்டேன். நீ மகா கள்ளீ! கபடி! சோரம் செய்வதில் துணிபு பெற்ற துஷ்டை. உன் முகத்தில் விழித்தாலும் பாபமே! அடீ த்ரோகி! என்னை வஞ்சித்து மோசம் செய்து இத்தகைய தீத்தொழில்களை எத்தனை நாளாய் நடத்திக்கொண்டு வருகிறாயடீ! காந்தியாம்! கண்ராவியாம்! ப்ரசங்கமாம்! பரிபவமாம்! இதெல்லாம் என்ன செய்கையடீ! யார்செய்யும் வேலையடீ! "ஆமைகிணற்றைக்கெடுக்கும்; ஊமை ஊரைக் கெடுக்கும்" என்பதுபோல இந்த காந்தி உலகையே கெடுக்க வந்திருக்கிறான். அவனைப் போல கெடுமதி கொண்டவன் உலகில் இல்லை. ஒவ்வொரு குடும்பத்தையும் பாழாக்குகிறான். வீட்டு வேலையைக் கூட மறந்துவிடும்படி ராட்டினத்தில் நூற்கவும், தக்ளியில் நூற்கவும் வம்பு செய்கிறான். இத்தகைய துஷ்டர்களைக் கேட்பார் இன்றி அவன் பக்கத்தில் லக்ஷக்கணக்கில் ஜனங்கள் சேர்ந்து ஆடுகிறார்கள். இதென்ன அக்ரமச் செய்கை!" "என்று கத்துகிறான்.

தற்கால நிலைமையில் தங்களை நேருக்கு நேராக ஓர் அடி அடித்

சில சுபாவங்களுக்கு வெட்கம், மானம் ஒன்றுமே கிடையாது. சண்டை இடும்போது வாயில் வருவது தெரியாது கொட்டியளந்து விடுவது; பிறகு தானே வலுவில் பேசுவது. என்ன வெட்கக்கேடு.

தாலும் அதை ஆத்திரமின்றி ஜனங்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால் காந்தி வள்ளலை எவரேனும் ஒரு வார்த்தை கூறிவிடின் அது கண்ணில் முள் தைத்ததுபோலவே ஜனங்களுக்குப் படுகிறது, ஆகையினால் இந்தக் குடிகார நாகசாமியின் வார்த்தை அங்கிருந்த தொண்டர்களின் மனதில் தைத்துவிட்டது. அங்கு உபன்யஸிக்க வந்திருக்கும் பெண்களின் ;மனம் பதறுகின்றது. கண்ணீர் வடிகின்றது. தத்தளிக்கின்றார்கள், அன்று தலைமை வகித்த அம்மாளின் புருஷனுக்குத் தாங்கமாட்டாத கோபம் பிறந்து விட்டது. எனினும் அதை உள்ளடக்கிக் கொண்டு அங்கு நிற்கும் நாகசாமியின் அருகில் வந்து அவனிரு கரங்களையும் சேர்த்துப் பிடித்துக் கொண்டு "ஐயா! நீ எனக்கு நன்றாகப் பரிச்சயமில்லை எனினும் அடிக்கடி உன்னை நான் பார்த்திருக்கிறேன். எந்த இடத்தில் என்றால், கள்ளுக்கடையினின்றும் வெளியேறுகையில் நான் வயலிலிருந்து வெளிவரும் போது பார்த்திருக்கிறேன். பின்னும், தாசிகள் வீட்டிலிருந்து நீ வெளிவரும்போது, நான் கடையிலிருந்து சாமான் வாங்கிக் கொண்டு வீடுதிரும்புகையில் பார்த்திருக்கிறேன். இவ்விரண்டு இடங்களிலிருந்து நான் உன்னைப் பார்த்த போதெல்லாம் உனது குணானுபவமும், உனது யோக்கியதையின் மதிப்பும் நானும் எனது நண்பரும் நன்கறிந்து கொண்டோம். இத்தகைய உன் மனதில் காந்தி மகாத்மாவின் பெருமை தெரிவது அரிதிலும் அரிதுதான். அந்த புண்ணிய மூர்த்தியின் மகிமையைக் கண்டறியும் ஆற்றல் படைத்தவர்கள் இவ்வுலகில் ஒரு சிலரே இருப்பார்கள்; எனினும் அவரைப் போற்றாதோரும் புகழ்ந்தடி பணியாதோரும் உலகிலில்லை, என்றாலும் உன்போன்ற சிலர் இருக்கிறார்கள். அவருடைய மகிமையைக் கூறுவதற்குச் சாதாரண மனிதராகிய எங்களால் ஒரு போதும் ஆகாது. ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவின் மகிமை துர்யோதனன், சிசுபாலன், தந்தவக்ரன், ருக்மிணியின் அண்ணனை

பெற்ற தாயின் முகமறியாத குழந்தையாயிருக்கும் முதல் வெகு வாஞ்சையோடு பெற்ற தாயினும் பெரிதொரு தாயைப் போன்று பாலூட்டித் தாலாட்டிச் சீராட்டி, புத்தி புகட்டி வளர்த்த அன்னை அதிக வயதுமுதிர்ந்த பின் பரமபதவி அடைந்தாலும் தாயின் அன்பினால் தாங்காத துக்கமே வருகிறது. மீண்டும் தபம் செய்தாலும் அத்தகைய அன்பு யாரிடம் காணக்கூடும்.

31034

ருக்மி முதலியோர்களுக்குத் தெரிந்ததா! அவர்கள் அந்த புண்ணிய மூர்த்தியுடன் பேசவும் தரிசிக்கவும் பாக்கியம் செய்திருந்தும் அவர் இன்னார் என்று அறியாது அகந்தை கொண்டு செய்த செய்கையினால் அடைந்த பலன் யாது அறியமாட்டாயா! என்னப்பன் கிருஷ்ணபரமாத்மாவை அறிந்த பாண்டவர்களும், பாஞ்சாலியும், இன்னும் மற்ற பக்தர்களும் அடைந்த புண்ணியமும் பெருமையும் உலக மறிந்ததே யாகும். அதுபோல மகாத்மா காந்தியைக் காணவும், கண்டு பேசவும், பேசி மகிழவும் நாம் எல்லோரும் பாக்கியம் செய்திருந்துங்கூட அவருடைய அவதார மகிமையை அறிந்து கொள்ளும் திறன் இல்லாமலிருக்கிறோம். எந்த உலகத்திலாவது ஒரு மனிதன் வார்த்தையை ஏற்று அதற்கு பவ்யப்பட்டு நடந்தது உண்டா! அவதார மகிமை பொருந்திய மனிதர்களுக்கே, தெய்வாம்சம் பெற்ற புனிதர்களுக்கே இந்த மதிப்பும் கவுரவமும் நடைபெறுமேயல்லாது வேறு யாருக்கேனும் வருமா! ஒரு போதுமில்லை. சர்வலோக சரண்யனாகிய ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவின் தூதனாகவே தற்போது இக்கலியில் மகாத்மா காந்தி தேச முன்னேற்றத்தை அடையச்செய்யும் பொருட்டு அனுப்பப்பட்டு வந்திருக்கிறார் என்பதை அவருடைய ஒவ்வொரு செய்கையும் நன்றாக எடுத்துக் காட்டுகின்றது. கிருஷ்ணன் குந்திதேவியின் புத்திரர்களுக்கு நேயனாக விருந்தார். காந்தியோ, இந்து மக்களுக்கு நேயராக விருக்கிறார். கிருஷ்ணபரமாத்மா சக்ராயுதத்தினால் பாஞ்சாலிக்குத் துகில்வளரச் செய்து மானத்தைக் காத்தார். மகாத்மா காந்தியோ அக்கடவுளின் ஆணையினால் சர்க்காவென்னும் ஆயுதத்தினால் கதர் துகில் செய்து பாரத மக்களுக் களித்து தமது சுயமரியாதையையும், சுயமதிப்பையும் காத்துக் கொள்ளும்படியாகச் செய்கிறார். ஆதியில் தேவதைகள் எல்லாம் தமக்குள்ள துயரங்களைத் தீர்த்து ரக்ஷிக்கும் பொருட்டு கடலில் சென்று க்ஷீராப்தி நாதனையே வேண்டியதாயும் அக் கடலில் ஆநந்தமாக சயனித்துள்ள

இறந்த வீட்டின் இழவும் தடபுடலும் ஒரு புறமிருக்க அங்கு விசாரிக்க வருபவர்களைத் திருப்தி செய்து பக்ஷணம் பங்கிட்டுக் கொடுத்து அனுப்புவது ஓர் பெரிய போராட்டமாகி விடுகிறது.

எம்பெருமான் பூ பாரத்தை நீக்குவதற்காக ராம கிருஷ்ணாதி அவ தாரங்கள் செய்ததாயும் நாம் புராணத்தில் படித்திருக்கிறோம். அதேபோல இக் கலிகாலத்தில் இந்தியாவில் பிறந்துள்ள சகலமான மக்களும் கடவுளை வழிபட்டு வேண்டி அவர் பாதம் பணிந்து நமது அடிமைத் துன்பத்தை நீக்கும் படியாக வேண்டிக் கொள்ளும்படி நமக்கு உபதேசம் செய்யும் காந்தி வள்ளலின் மகிமையை நீ அறியத் திறமா! அவரை சாமானிய மனிதரென்று நினைத்து விட் டாயா! உண்ணு விரத மிருந்த பெருமையும், தேசத்திற்கு உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தம் செய்து விட்ட மகிமையும், ஆப்ரிகாவில் அவர் காட்டிய வீரமும், தீரமும், தியாகமும் கூறத் திறமா? அடாடா! அத்தகைய புண்ணிய மூர்த்தியை வீணாக வசை கூறிவிட்டு நீங்கள் அடையும் லாபம் யாதென்பதை சற்று கவ னித்துப் பாருங்கள். உலகெலாம் போற்றும் புனித வள்ளலான காந்தியடிகளை நீ தூஷிப்பதானது உனக்கு நீயே நரகத்தைத் தயார் செய்வது போலவே எனக்குத் தோற்றுகின்றது. வேசி மனையிலும், போதையை உண்டாக்கும் மதுக் கடையிலும் நீ நுழைவதால் அந்த துர்ப்புத்தியே உனக்கு மூண்டு விட்டது. வீணே சாதுக்களை வையாதே. இந்த விஷயத்தில் உனக்கு இஷ்டமில்லையேல் தூர விலகி விடு. அநியாய வார்த்தைகளைக் கொட்டியளப்பதில் பய னில்லை. பூசை வேளையில் கரடி புகுந்தது போல நீ இங்கு வந்து சேர்ந்து விட்டாய். இம்மட்டுடன் நீ மீள வேண்டுமாயின் மரியாதை யாய்ச் சென்று விடு. வீணாக அந்த அம்மாளை மன வருத்தமுறச் செய்வது அழகல்ல." என்றார். அதற்குள் அங்கு கண்ணீர் வடிய நின்றிருந்த ஸாவித்திரி தன் கணவனின் காலில் விழுந்து, "நாதா! தயவு செய்து என்னை மன்னிக்க வேண்டும். நாம் வீடு போய்ச் சேர்ந்த பிறகு பேசிக் கொள்வோம். நான் எதற்கும் உதவாத மகா பாவி. என் பொருட்டாக இங்குக் குழுமி இருக்கும் ஆயிரக்கணக் கான ஜனங்களுக்கு துன்பம் வேண்டாம். அவர்களின் ஆநந்தத்தை

ஒருவருக்காக ஒருவர் திட்டு கேட்பதென்பது மிகவும் கஷ்டமான காரியம். ஒருவரைப் பூஷித்து ஆகாயத்தில் உயர்த்துவதற்காக அவர்களின் முன்னிலையில் மற்றொருவரை தூஷித்துக் குழியில் வீழத்தவேண்டாம். அந்தச் செய்கை எத்தகையோரையும் புண்படவே செய்யும்.

நாம் அழிக்க வேண்டாம். என் தலை விதிப்படிக்கு யாவும் நடக்கட்டும். நாம் போவோம் வாருங்கள்." என்று வெகு பணிவாகக் கூறினள்.

இந்த வார்த்தையைக் கேட்ட நாகஸாமி, தடுக்க வியலாத ஆத்திரங்கொண்டு "அடி, துஷ்டே! என்னுடைய முன்னிலையில் இத்தகைய துஷ்ட காரியத்தைச் செய்யத் துணிந்த நீ எதற்குத்தானடீ அஞ்சுவாய்! உன் புருஷனிடத்தில் நீ உண்மையான மதிப்பும், பக்தியும் உள்ளவளாயின் என்னுடைய வார்த்தையை மீறுவாயா! அன்றி உன் புருஷன் குடிக்கின்றான். குதிரைப் பந்தயத்தில் பணத்தைக் கொட்டுகிறான் என்று தூற்றிக் கொண்டு மானங்கெட்டுத் தெருவில் கிளம்புவாயா! உனக்குள்ள மண்டைத் திமிர் இவ்விதம் செய்யும்படியாகத் தூண்டுகின்றதா! கள்ளீ!" என்று ஆத்திரத்துடன் பேசிக் கொண்டே இழுத்து ஒரே தள்ளாகத் தள்ளிவிட்டு அந்தக் கூட்டத்தினின்றும் ஒரே ஓட்டம் ஓடலானன்.

சற்றும் எதிர்பாராத விதமாக ஸாவித்ரியை இழுத்துத் தள்ளிய கோரமான சம்பவத்தைக் கண்ட எல்லோரும், "ஐயோ! கொலை! கொலை! பாவி அனியாயமாகத் தள்ளிவிட்டான். பிடி! பிடி!" என்று கூக்குரலிட்டார்கள். நாகஸாமி ஒருவர் கையிலும் அகப்படாது கூட்டத்தின் பின் பாகத்தில் அதிக ஜனமில்லாத விடத்தில் புகுந்து ஓட்டமெடுத்தான். வெகு விசையுடன் குடி வெறியினால் தலை கால் தெரியாமல் மதயானையின் பலத்தைக் கொண்டு இழுத்துத் தள்ளியதால் ஸாவித்ரி அங்கு வரிசையாகப் போடப்பட்டிருந்த மேஜையின்மீது தடாரென்று மோதுண்டு விழுந்தாள். தலையில் பலமான அடி பட்டு ரத்தம் பீறிட்டுக் கொட்ட வாரம்பித்தது. இதைக் கண்ட எல்லோரும் பயந்து விட்டார்கள். கால் கைகள் நடுக்கலுற்று

வேலையே ஒன்றுமில்லாது உட்கார்ந்திருப்பினும் சிலருக்கு அது சகஜமாக இருக்கிறது. அந்த நேரத்தை வீணாக்காது எழுத உட்கார்ந்தால் அந்த சிலர் கடுத்த முகத்துடனும், கர்ஜித்தவிஷ்டோ தொனியுடனும் "இந்த நேரம் தான் எழுதுவதற்குக் கிடைத்ததோ?" என்கிறார்கள். காலமே வீண்போக்கில் முழுகிக் கிடக்கின்றது. இவ்வித வீண்பொழுதிலே தேசசேவையை அடியோடு மறந்து விடுகிறார்கள்.

"ஹா! என்ன இது! என்ன செய்வது?" என்று கூக்குரலிட்டார்கள். திலோத்தமாவின் உயிர் துடிக்கின்றது. தான் ஸாவித்திரியை அழைத்து வந்ததனாலேயே இத்தகைய துன்பம் எதிர்பாராது நேர்ந்து விட்டதென்று எண்ணி மனந்துடிக்கின்றாள். இக் கூட்டத்தின் ஒரு பாகத்திலிருந்த மதனகோபாலன் இந்த கலவரத்தைக் கண்டு எழுந்து ஓடி வந்தான். அவன் வருவதற்குள் திலோத்தமாவும் இன்னும் சிலரும் ஸாவித்திரியைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு ரத்தத்தைத் துடைத்து ஜலத்தை முகத்தில் தெளித்துக் கொண்டிருந்தார்கள். உடனே மதனகோபாலன் ஓடி ஒரு வண்டி கொணர்ந்து அதில் ஸாவித்திரியை எடுத்துக் கடத்தி அருகில் திலோத்தமாவையும் ஏற்றிக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு நோக்கி வண்டியை வேகமாக ஓட்டச் செய்தான்.

அதன் பிறகு கூட்டம் கலகலத்துப் போய் விட்டது. ஆயினும் எல்லோரும் அமைதியாயிருக்கும்படியாகச் செய்து கூட்டத்தை நடத்தினார்கள். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்ற ஸாவித்திரிக்கு மூர்ச்சை தெளியவில்லையாகையினாலும், காயம் பலமாகப் பட்டு விட்டதனாலும் அவளை ஆஸ்பத்திரியிலேயே இருக்கும்படி டாக்டர் கூறி விட்டார். மதனகோபாலன் அவளை ஆஸ்பத்திரியிலேயே விட்டு விட்டு திலோத்தமாவை அவள் வீட்டிற்கு அனுப்பி விட்டுத் தான் மட்டும் திரும்பி ஆஸ்பத்திரிக்குச் சென்றான். மதனகோபாலனின் இருதயத்தில் அன்று நிகழ்ந்த சம்பவங்கள் மிகுந்த கலவரத்தை உண்டாக்கி விட்டன. அதே சிந்தையோடு தன் கதியையும் எண்ணி மிக்க விசனமடைந்து அபாரமான துக்கத்திலாழ்ந்தான். ஸாவித்திரியின் புருஷனை எந்த விதம் திருப்புவது. என்ன செய்வது. இவள் இவ்வித சிறுமைபட்டுச் சீரழிவதை விட உயிர் துறந்து விடுவதே மேல். நல்ல பதவியில் மேன்மையாக இருக்கக் கூடியவர்களைக் கடவுள் கண் திறந்து பார்த்து தன்னிடம்

நெடுமையும் கொடுமையும் வாய் ஓயாது பேசுவதிலேயே சிலருக்கு நாட்டம். அத்தகைய மூடர்களைத் திருப்தி செய்வதற்குக் கடவுளாலும் இயலாதென்றே கூறலாம். அவர்களுடன் பேசும் ஒவ்வொரு பேச்சிலும் பதத்தை அளந்தே வைக்க வேண்டும்.

இழுத்துக் கொள்கிறார். ஒரு விதத்திலும் பொருத்தமின்றி உலகோர் நகைக்கும் பிழைப்பில் உள்ளவர்களுக்கு ஒரு விதமான விமோசனமும் செய்யாது அக் கடவுள் நித்திரை செய்கிறார். "ஹா! என் பானுமதி உயிருடன் இருந்தால் நான் இவ்விதம் ஒண்டியாவேனா! தேசத்தின் நிலைமையையும் காந்திஜீயின் அவதார தெய்வத்தன்மையையும் அறியாத மூட ஜனங்களுக்கு....மூடப் பெண்மணிகளுக்கு—என் கண்மணியை விட்டு உபன்யஸிக்கச் செய்வேனே! மதியிலும் சூக்ஷ்மத்திலும் என்னாரவமுதை வெல்லுந் திறமுள்ளோர் உண்டா! இல்லையே! ஐயோ! மகா பாவியாகிய நான் ஏன் உயிர் வாழ வேண்டும்? பூ பாரமாயுள்ள எங்களை ஏன் படைத்து இவ்விதம் ஆட்ட வேண்டுமோ தெரியவில்லையே!" என்று மிக்க மனத்துயருடன் வீற்றிருந்தான்.

ஸாவித்திரிக்கு இரவு நடு நிசி சுமாருக்கு நன்றாகத் தெளிந்தது. கண் விழித்துப் பார்த்தாள். தன் புருஷனின் ஆத்திரமான மொழிகளும் குரூரமான பார்வையுமே கண்ணெதிரில் தோன்றுகின்றன. அப்போதும் "ஹா! நாதா! வேண்டாம்; அனியாயமாக இவ்விதம் காந்திமகானைக் குறை கூற வேண்டாம். என்னை என்ன வேண்டுமாயினும் செய்யுங்கள்" என்றாள். இதைக் கேட்ட மதனகோபாலன் "ஸாவித்திரி! நீ இப்போது இருக்குமிடம் ஆஸ்பத்திரி. இங்கு நூற்றுக்கணக்கில் நோயாளிகள் படுத்திருக்கிறார்கள். இந்த நடு நிசியில் நீ ஏதேனும் பேசினால் அவர்களுக்குத் தலை வேதனையாக இருக்கும். உன் நாதனும் இங்கில்லை. நீ நிம்மதியாக நித்திரை செய். பேசாதே; தலையில் அடி பட்டிருப்பதால் அதிர்ச்சி யுண்டாகும்." என்றான்.

இது கேட்ட ஸாவித்திரி "அண்ணா! என்னை ஏன் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வர வேண்டும்? நான் என்ன இறந்துவிடுவேனென்று பயந்து விட்டீர்களா! என் கண்ணானை பானுமதிக்குத் தான் இவ்வுலகத்தில் இடமில்லை. என் போன்ற பாவிகளைக் கண்டு பயப்படவும்

சில ஆத்திரக்காரப் பேய்கள் கோபத்தில் ஆழ்ந்திருக்கையிலும் பிறர் பேசும் பேச்சுகளை எல்லாம் தமக்கென்றே வைத்துத் தீர்மானித்துக் கொண்டு சண்டைக்குத் த்வஜாரோகணஞ்செய்து விடுகிறார்கள். அந்த வாய் மழைக்கு ஓய்வு மில்லை; சாய்வுமில்லை. பெருத்த அனர்த்தம் தான்.

வேண்டுமா! அண்ணா! எனக்குச் சிகிச்சை செய்ய அழைத்து வந்திருப்பதைப் பிறர் அறிந்தால் பரிகஸிப்பார்களல்லவா! ஐயோ! என்ன வெட்கங் கெட்ட பிறவி பிறந்தேன்.'' என்று மிக்க விசனத்துடன் கூறினாள். அதே சமயத்தில் இவளுக்கு எதிர்ப்பக்கம் கட்டிலில் படுத்திருந்த ஓர் மாதின் பக்கலில் கிழவி யொருத்தி உட்கார்ந்திருந்தாள். அந்தக் கிழவி அங்கு வியாதியாகக் கிடக்கும் பெண்ணை நோக்கி "கமலம்! வலி எப்படி இருக்கிறதம்மா! படுபாவியின் கையை ஒடிக்க, படுக்கையில் விழுந்து 10 தினங்களாயிற்றே; இன்னும் கால் சரியாக நீட்ட வா வில்லையே! என்ன அனியாய உலகம்! அவன் நாசமாய்ப் போக. அவன் நிர்மூலமாய்ப் போக. அந்த சோதா கம்மனாட்டிப் பயல் யாரென்று இன்று தான் விசாரித்துக் கொண்டு வந்ததில் தெரிந்தது. அந்தப் படுபாவிகள் ஒரு கூட்டமாக 4, 5 பேர்களிருக்கிறார்களாம். அவர்களெல்லாம் பெரும் சோதாக்களாம். அதில் ஒருவன் நமது எதிர்வீட்டு சிங்காரத்திற்கு உறவினளாகிய பானுமதி இறந்து விட்டாளே, அவளுடைய காத்தனாரின் புருஷனும், அவன் பெருத்த குடிகாரனும். அவன் செய்யும் அக்கிரமம் கணக்கில்லையாம். அன்று குடியின் வெறியினால் தான் உன்னை அவ்விதம் இழுத்துக் காலை உடைத்தானும். அப் படுபாவிகளை சும்மாவிடப் போவதில்லை. கடவுள் அந்தச் சண்டாளர்களைத் தண்டிக்காமல் விடமாட்டார். நீ அனுபவிக்க வேண்டிய வேளை இது போலும்'' என்று நிரம்பவும் வருத்தத்தோடு கூறினாள்.

இந்த வார்த்தை ஸாவித்திரி, மதனகோபாலன் இருவரின் செவிகளில் பட்ட மாத்திரத்தில் அவர்கள் நெருப்பின்மீது விழுந்த புழுவெனத் துடித்தார்கள். அவர்களுடைய அப்போதிய மனநிலைமையை விவரித் தெழுதுவதற்கே சாத்யமன்று. ஸாவித்ரியின் உயிர் நீங்கிவிடும்போலாய் விட்டது. "ஐயோ! இவர்கள் பேசுவது நம் புருஷனைப் பற்றி யல்லவா! இதைவிட அவமானம் எனக்கு

சில வம்பர்கள் வீதித் திண்ணையில் ஏறி உட்கார்ந்து கொண்டு வருவோர் போவோர்களை வலுவிலழைத்து வாயைக் கிளறி வார்த்தையை வாங்கிக்கொண்டு பிறகு அந்த மனிதர்களுக்குச் சம்பந்தப்பட்டவர்களிடம் சென்று தீயைமூட்டி, வினையை நாட்டி, விரோதத்தைப் பூட்டி, உயிரையும் வாட்டி விடுகிறார்கள்,

வேறு என்ன வேண்டும். இந்தப் பெண்ணை எதற்காக காலை முறுக்கி உடைக்கவேண்டும்? ஐயோ, பாவமே! நாம் இப்போது என்ன செய்வது. அண்ணு! அந்த அம்மாள் வார்த்தையைக் கேட்டீர்களா! என் வயிறு பற்றி எரிகின்றதே, இவர்கள் அவர்களை சும்மா விடுவார்களா! ஒருபோதும் விடமாட்டார்கள். எவ்வித மேனும் பழிக்குப் பழி தீர்க்காமல் விடவே மாட்டார்கள். அவருக்கு இந்த விஷயமாக நேரப்போகும் ஆபத்திற்கு நான் என்ன செய்வேன்? என் உயிர் ஏன் நீங்கவில்லை? அவரை குற்றவாளி என்று கைதியாக்கிக்கொண்டு கோர்ட்டில் நிறுத்தினுல் அதை நான் எவ்விதம் சகிப்பேன்? அதனுல் என்ன தண்டனை கிடைக்குமோ தெரியவில்லையே! அண்ணு! நான் இப்போது அக்கிழவியை அழைத்து விஷயங்களைத் தீர விசாரித்துக்கொண்டு உண்மையைக் கூறி நான் என் கணவனைத் தப்ப வைக்கும் வழியைத் தேடப் போகின்றேன். பதியின் மானத்தைக் காக்கவும், அவரை நல்வழியில் திருத்தவும் பத்தினிக்குச் சுதந்திரம் உண்டு; ஆகையினுல் நான் இனி ஒரு கணமும் சும்மா விருக்கமாட்டேன்," என்று கூறிக்கொண்டே மெல்ல எழுந்து தன் படுக்கையை விட்டு இறங்கினுள்.

தலையில் கட்டி இருக்கும் காயத்தின் வேதனை யொரு புறம் பலமாக வதைக்கின்றது. தலையை அசைக்கக் கூடவில்லை. 'தலை இரண்டாகப் பிளந்து விடும்போல விருக்கிறது. அந்த நோவையும் லக்ஷ்யம் செய்யாமல் அந்த கிழவியை மெல்லக் கூவி அழைத்து "பாட்டி! இங்கே வாருங்கள். ஒரே ஒரு விஷயம் தங்களுடன் பேசவேண்டும். ஒரு நிமிஷம் தயவு செய்து வாருங்கள்" என்றுள்.

இதுகேட்ட கிழவி "ஏனம்மா! என்ன சமாச்சாரம் உனக்கும், எனக்கும் பேச விருக்கிறது? குழந்தையை விட்டு விட்டு நான் வர மாட்டேன். என்ன விஷயமோ அதை இவ்விடத்திலேயே சொல்லு." என்று சற்று கடுகடுத்த பார்வையோடு கூறினுள்.

கல்யாணத்திற்காயினும் சரி- கருமாந்திரத்திற்காயினும் சரி சமயல்காரர்களும் மற்றவர்களும் சரியானபடி அமையாவிடின் பண்டமும் பாழே; பெயரும் குட்டிச் சுவரேதான். வகையாக அமைந்து விடினே, சண்டை பூசல் வந்தாலும் சமாசமாகவே முடிந்து விடுகின்றது.

இதைக் கேட்ட சாவித்திரி அவள் அருகில் சென்று "பாட்டி! நமக்குள் பேசவேண்டிய விஷயம் இதுவரையில் ஒன்று மில்லை எனினும் இப்போது நம்மிருவருக்கும் முக்கியமான விஷயம் ஒன்று இருக்கின்றது. எனக்கும் தலையைத் தூக்கவே முடியவில்லை. அந்த வலியுடன் நான் இதோ வந்திருக்கிறேன். இதோ என் கையைத் தொட்டுப் பார்; எவ்வளவு ஜுரம் அடிக்கிறது பார். அவைகளை எல்லாம் லக்ஷ்யம் செய்யாமல் நான் வந்திருப்பதி லிருந்து எனக்கும் உனக்கும் எவ்வளவு அவசியமான சங்கதி இருக்குமென்று யோசித்துப் பாரு. சற்று இப்படி வா!" என்று மீண்டும் வெகு பொறுமையோடு கூப்பிட்டாள்.

இதுகேட்ட கிழவி எழுந்து வந்தாள். இருவரும் வெளி வாராண்டாவின் பக்கமாகச் சென்றார்கள். ஸாவித்திரி கிழவியை நோக்கி "பாட்டி! நீ யாரு? எங்கிருப்பது? அங்கு படுத்திருக்கும் பெண் உனக்கென்ன வேண்டும்? அவளுக்கு என்ன உடம்பு? சற்று முன்னர் நீ தெரிவித்த சில விஷயங்களைக் கேட்டதும் என் மனம் திடுக்கிட்டது. அதனால் தீர விசாரிக்கும் பொருட்டு கூப் பிட்டேன். தயவு செய்து கோபியாமல் எனக்குப் பதிலளிக்க வேண்டும். இதனால் நம்மிருவருக்கும் பெரிய லாப மிருக்கிறது." என்றாள்.

கிழவி:—ஏதோ பெருத்த விஷய மென்று கூறிவிட்டு இப் போது என்னுடைய கதையையே கேட்கிறாய். அதிலும் லாப மிருப்பதாயும் தெரிவிக்கின்றாய். ஆகையினால் சொல்கிறேன். நான் சின்னத் தம்பி தெருவில் ஓர் சிறிய வீட்டில் வாடகைக்கு இருக்கி றேன். இங்கு படுத்திருக்கும் பெண் எனது பேத்தியாவள். இவளுடைய தாயாராகிய என் மகள் இறந்துவிட்டாள். அவள் இறக்கும்போது இந்தப் பெண்ணுக்கு ஒரு வயது ஆயிற்று. அன்று முதல் இவளை நான் எடுத்து வளர்த்து ஆயிரம் பாடும் பட்டு வருகி

பத்து மனிதர்கள் வேண்டிய விசேஷ தினங்களில் தான் ஒவ்வொருவ ராய் மூன்று தினத்து விடுமுறையில் விலகிக் கொள்கிறார்கள். வீடு படும் பாடோ கூறத் திறமன்று. ஆனால் வேலை நின்று விடுகின்றதா, இல்லை, நடத்தி வைக்கக் கடவுள் பின்னடைவதில்லை.

றேன். இப்போதே 13 வயதாகிறது. இன்னும் பெரிய மனுஷியாக வில்லை. நாங்கள் வயிற்றின் பிழைப்பிற்காக இரண்டு வீடுகளில் வேலை செய்கிறோம். எங்களுக்கு அந்த வீடுகளில் ஒரு வேளை உணவளித்து மாதம் 5 ரூபாய் சம்பளங் கொடுக்கிறார்கள். அங்கு வேலை செய்யும் வேளையைத் தவிர இரண்டு வீடுகளில் பத்துப் பாத்திரங்களைத் துலக்குகின்றோம்; துணி துவைக்கிறோம். அந்தப் பாத்திரங்களில் அகப்படும் சாப்பாடு எங்களுக்கு ஒரு வேளைக்குக் காணும்; அது தவிர 3 ரூபாய் கொடுக்கிறார்கள். மாதம் 8 ரூபாய் கிடைக்கின்றது. அதில் 3 ரூபாய் வீட்டு வாடகைக் கொடுக்கிறேன். மிச்சமுள்ள 5 ரூபாயில் சீட்டு கட்டி குழந்தைக்கு ஏதோ சில நகைகளைச் செய்து போட்டேன். கல்யாணம் செய்வதற்காக இன்னும் சீட்டு கட்டிக்கொண்டு வருகிறேன். பத்து தினங்களுக்கு முன்னர் என் குழந்தை வேலை செய்துவிட்டு மாலை 6 மணிக்கு வரும்பொழுது 5—6 தடியர்கள் நன்றாகக் குடித்துவிட்டு தந்தனப் பாட்டுப் பாடிக்கொண்டே வந்தார்களாம். வழியில் என் குழந்தையை நோக்கி "ஏ,குட்டி! எங்கே போகிறாய்?" என்றார்களாம்.

இந்த குழந்தை மகா சாது. இதற்கு ஒன்றுமே தெரியாது. ஆகையினால் "நான் வீட்டிற்குப் போகிறேன்" என்று கபடமற்றுக் கூறிற்றாம். அதற்கு அந்த தடியனில் ஒருவன் "பெண்ணே! எங்களுடன் கூட வா; உனக்கொரு புடவை தருகிறேன்" என்றானாம். அதைக் கேட்ட குழந்தை உலக வியலே தெரியாத பாலிகையாதபாதலாலும், சூது வாது கபடம் ஒன்று மறியாத சிறுமியாதலாலும், அவர்கள் சொக்காயும் சரிகை உருமாலுமாக விருந்தார்களாதலாலும் ஒருவிதமான பயமும் கிலேசமும் அற்று அவர்கள் பின்னோடு செல்ல சம்மதித்து விட்டாளாம். அசட்டுப் பெண் என்பதை அறிந்துகொண்ட தடியர்கள் வெகு உற்சாகத்துடன் ;அந்தப்

எந்த நெருக்கடியான சமயத்திலும் உதவி செய்வதற்குக் கடவுள் ஒருவரை நியமிக்காது விடுவதில்லை. அவர் மீது பாரத்தை நாட்டி நம்பிக்கையுடன் வேலையைச் செய்தால் ஒரு குறைவு மில்லை. நம்பாதப் பதர்களுக்கே நாசம் உண்டாகி விடுகிறது.

பெண்ணை அழைத்துச் சென்றார்களாம். வெகு தூரம் சென்றதும் ஓர் வீட்டில் நுழைந்தார்களாம். என் பெண்ணின் கையில் தங்க காப்பு 2 சவரத்தில் போட்டிருந்தேன். காலில் பட்டை புதுச்சேரி கொலுசு, அத்திக்கா கொலுசு, பாடகம் எல்லாம் போட்டிருந்தேன், காதிலே நல்ல கம்மல் போட்டிருந்தேன். கொப்பு, கத்திரிப்பூ, லவங்கப்பூ, குருட்டுபாவலி, லோலாக்கு, பச்ச கல்லு முருவலு, ஐகோட்டு திருகாணி, முத்து கசை, மூக்கில் பேஸரி, திருகாணி, புலாக்கு, கழுத்தில் பழவமாலை, காசு, தாயித்து கோத்த நூல் சரடு, இம் மட்டும் நகை நானே சம்பாதித்து சேர்த்துப் போட்டேன். அங்கே போனவுடனே திடீரென்று ஒருவன் கை காப்பைக் கழட்ட வந்தானாம். அப்போது தான் இது மோசம் என்று பெண்ணுக்குத் தெரிந்ததாம். உடனே பெருத்த கூச்சல் போட்டுக்கொண்டே திமிறினாளாம். இரண்டு பேர் காப்பைக் கழற்றிக் கொண்டார்களாம். கால் கொலுசைக் கழற்ற வருகையில் இந்தப் பெண் கையைத் திமிறிக்கொண்டு காலால் எட்டி உதைத்துக்கொண்டே ஓடிற்றாம். அதில் ஒருவன் காலை இழுத்து முறுக்கினானாம். அதற்குள் ஒருவன் காதில் கையை வைத்தானாம். இதற்குள் வீதியிலிருந்து யாரோ உள்ளே வருவதைக் கண்டு எல்லோரும் புறக்கடை வழியாக ஓட்டமெடுத்தார்களாம். காலை உடைத்ததும், பெண் மயக்கமாய்விட்டதாம். உள்ளே வந்த மனிதன் மாம்பழம் விற்கும் ஆசாமியாம். அவன் தினம் அந்தப் பாழும் சத்திரத்தில் வந்து விற்ற பணத்தைக் கணக்கு பார்த்துக்கொண்டு போவது வழக்கமாம். அதுபோல அன்றும் வந்தானாம்.

அங்கு அனாதையாக விழுந்து கிடக்கும் பெண்ணைப் பார்த்தானாம். அவன் தினம் இவ்வூரில் மாம்பழம் விற்கும்போது அவளைப் பார்த்திருக்கிறானாம். உடனே பெண்ணருகில் வந்து

உயிர் நீங்கும் தறுவாயில் படுத்திருக்கும் மனிதரைக் கண்டால் எவர் மனமும் உருகி விடுகின்றது. விரோதிகளாயினும் உறவு முறையுடன் வந்து விடுகிறார்கள். இறந்து விடுவதற்கு மட்டும் யாரும் துணிந்து ஒப்புக் கொள்வதில்லை. கிழமாக விருப்பினும் கண்ணீர் கொட்டுகின்றது.

என்னவென்று விசாரித்தானும். அந்தப் பெண் நன்றாகத் தெளிந்த தும் சகலமான விஷயங்களையும் சொல்லியதாம். உடனே ஒரு வண்டியில் பெண்ணைப் போட்டுக்கொண்டு என் வீட்டைத் தேடிக் கொண்டு வந்து சேர்த்தான். அந்த கோர சம்பவத்தைக் கேட்ட தும் என் வயிறு பற்றி எரிந்தது. அடித்துக் கொண்டு அழுதேன் முறையிட்டேன். அந்த மாம்பழக்காரன் எனக்குத் தேறுதல் கூறி எங்களை ஆஸ்பத்திரியில் கொண்டு விட்டு விட்டு போலீஸுக்கு இந்த விஷயத்தைத் தகவல் கொடுத்திருக்கிறான். அவன் தான் எனக்கு இந்த சமயத்தில் பெரிய துணையாக இருக்கிறான். என்னு டைய மகள் கால் ஒடிந்ததற்கு அழுவேனு! நான் வயிற்றிற்குக் கூட தின்னமல் சேர்த்த பொருளை அனியாயக் கொள்ளையில் பறி கொடுத்த துக்கத்தை எண்ணி அழுவேனு! நான் எதற்கு அழு வேன். பத்து தினங்களாயிற்று; இன்னும் கால் கட்டு அவிழ்க்க வில்லை. குழந்தையோ பெண் குழந்தை; கால் ஊனமாகி விட்டால் நான் மொண்டியை வைத்துக் கொண்டு எவ்வாறு பிழைப்பேன். இதை எவன் கட்டிக் கொள்வான். ஐயோ! என்ன செய்வேன்? இந்த கவலையே என்னை வதைக்கின்றது. இன்று மாம்பழக்காரன் உளவு விசாரித்ததில் எங்களுக்குத் தெரிந்த பெண் ஒருத்தி இறந்து விட் டாள்; அவளுடைய காத்தியின் புருஷன் படுபாவி, பெரிய குடும் பத்தில் பிறந்து, வளர்ந்து சொந்த வீட்டுடன் வாழ்கிற சண்டாள னும் இதில் சம்மந்தப் பட்டிருப்பதாகத் தெரியவந்தது. ஏனம்மா! என் வயிற்றெரிச்சலை ஏன் கிளறுகிறாய்? விஷயமென்ன சொல்லு.

ஸாவித்திரி:—பாட்டீ! சொல்கிறேன்; பயப்படாதே. அந்த ஆசாமியின் பெயர் என்ன தெரியுமா!

கிழவி:—எழ வெடுத்தவன் பெயர் நாகஸாமியாம்.

ஸாவித்திரி:—ஆ! பாட்டீ! நான் உன்னை சாதாரணமாகப் பேசும் பொருட்டு அழைக்கவில்லை. என்னுடைய பெற்ற தாயா

சில சமயல்காரர்கள் வேலை செய்கையில் மடப்பள்ளியில் சென்று பார்த்தால் வாந்தியெடுக்க வருகிறது. சிலர் வேலை செய்வது வெகு சிலாக்யமா யும், ருசிகரமாயும், முற முறப்பாயும் இருக்கிறது. சமயல்காரர்களின் பரிசுத் தத்தைப்போல வேலையும் அமைகின்றது.

ராக மதித்து இப்போது பேசுகிறேன். நீ இப்போது தெரிவித்த அந்த மனிதர் சண்டாளியாகிய எனதுபர்த்தாதான். நீங்கள் சற்று முன்னர் பேசிக் கொண்டிருந்ததிலிருந்து நான் தெரிந்து கொண்டு தான் கேட்கிறேன். பாட்டீ! என்னுடைய போதாக்காலத்தின் கொடுமையே அவருக்கு இத்தகைய துஷ்ட சினேகிதர்களும், துர்ப் பழக்கங்களும் உண்டாகி இருக்கின்றன. பாழும் குடி வெறியின் கெடுதியை என்னென்பேன். இதோ என் தலையை உடைத்ததும் குடி கொடுமைதான். தான் கட்டிய மனைவி என்பதையும் மறந்து பல பேர்களறியப் பெருத்த கூட்டத்தின் மத்தியில் என் தலையை உடைத்தார். நான் அவருடைய மனைவியாகையினால் அவர் என்னைக் கொலை செய்யவும் உரிமை உடையவர். மற்றவர்களை அங்ஙனம் துன்புறுத்துவதில் கேடு உண்டாகும் என்பதை அடியோடு மறந்து விடுகிறார். பாட்டீ! நான் உங்களை வேண்டிக்கொள்வதென்னவெனில் உங்கள் மகள் இறந்து விட்டவளே மீண்டும் உயிர் பெற்று விட்டதாக எண்ணி இந்த கேஸில் என் பர்த்தாவைச் சம்மந்தப் படுத்தாமலிருக்கும்படிக்கு நான் பன்முறை பிரார்த்திக்கின்றேன். உங்களுக்குக் களவு போன பொருளுக்கு பதிற் பொருள் நான் தருகிறேன். இந்த சங்கிலியின் இடை 8 பவுன் இருக்கிறது உங்கள் காப்பு இரண்டு பவுன் தான். மிச்சமுள்ள ஆறு பவுனை நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள். என் மீது கருணை காட்டி என் புருஷனை இதிலிருந்து விலக்கி விட வேண்டும்" என்று கிழவியின் காலில் விழுந்து வேண்டினாள்.

கிழவி இதைக் கேட்டு திடுக்கிட்டாள். ஸாவித்ரியின் உத்தம குணத்தையும், பதியின் மீதுள்ள வாஞ்சையையும் கண்டு வியந்து நின்றாள். மீண்டும் கிழவியை ஸாவித்திரி நோக்கி "பாட்டீ! என்ன யோசிக்கின்றாய்! என் புருஷன் மகா முரடர் தான். ஓயாது குடிப்பவர்தான். சதா வேசி வீடே கதியாக இருப்பவர்தான். அதை

நல்ல காரியத்திற்கும், கெட்ட காரியத்திற்கும் முதலில் ஒரு விதமான தீர்மானத்துடன் செலவிடுவதற்குக் கணக்கு போடுவது, காரியம் முடிந்த பிறகு கணக்குப் பார்க்கையில் முதலில் போட்டதைவிட ஒரு பங்கு அதிகப் பட்டு விடுகிறது. நினைத்த வளவு எந்த காரியமும் நடைபெறுவதில்லை.

நான் மறுத்து அவர் சாது என்று கூறவில்லை. அவர் எவ்வித மிருந்த போதிலும் எனக்குப் பர்த்தாவல்லவா! கல்லானாலும் கண வன்; புல்லானாலும் புருஷன் என்பார்களே! நான் என்னுடைய மான அவமானத்தை முன்னிட்டு வேண்டுகிறேன். இனிமேல் நான் அவரை இந்தத் தீயப் பழக்கத்திலிருந்து திருந்தும் வழியைச் செய் கிறேன். அநியாய குடியின் வெறியால் அவர் செய்யும் அக்கிரமம் கணக்கிட வியலாது. அவருடைய துர்க் கிருத்யங்களை வேரறுக்க நான் பல விதத்திலும் முயற்சி செய்து வருகிறேன். என் வார்த் தையை அவர் சற்றும் சட்டையே செய்வதில்லை. பாட்டி! எனக் காக நீங்கள் அவரை இதில் சம்மந்தப்படச் செய்வதில்லை என்று எழுதிக் கொடுங்கள்" என்று கெஞ்சினாள்.

இதைக் கேட்ட கிழவி ஸாவித்திரியின் பரிதாபத்திற் கிரங்கி அவ்வாறே செய்வதாக வாக்குறுதி யளித்தாள். உடனே மதன கோபாலன் ஒரு காகிதத்தில் இது சம்மந்தமான விஷயத்தை எழுதி கிழவியின் கையெழுத்து பெற்றுக் கொண்டான். அதன் பிறகு இரு வரும் உள்ளே சென்றார்கள்.

மறுதினமே சாவித்திரி தன் வீடு வந்து சேர்ந்தாள். தன் தலையில் ரணம் நன்றாக ஆறும் முன்னர் வீட்டுக்குப்போக வேண்டா மென்று எத்தனை பெயர் சொல்லியும் கேளாது வீடு வந்து விட்டாள். அவள் புருஷனை வீட்டிலேயே காணவில்லை. அவன் எங்கு சென்றான் என்பதே அவளுக்குத் தெரியாது. தலையில் அடி பட்ட பாதை யொருபுற மிருக்க, இந்த அடியனை வீட்டில் காண வில்லை யென்பது மற்றொரு புறம். இவ்விதமே பத்து தினங்களா யின; புருஷனைக் காணவில்லை. இவளுடைய மனத்தில் இன்னும் அதிகரித்த திகில் பிடித்து விட்டது. "எங்கு சென்று விட்டாரோ! குடியின் வெறியினால் இன்னும் யாருக்கு என்ன தீங்கு செய்து விட் டாரோ! அன்றி எங்கு குடித்து மயங்கிப் போய் வீதியில் விழுந்து

ஊக்கத்துடன் ஒத்தாசை செய்யும் மனிதர்களுக்கு திடீரென்று உடம் புக்கு வந்து விடுகிறது. அந்த சமயம் உதவிக்கு வேறு ஆட்களைத்தேடியலைய நேருகிறது. அன்னியர் புகுவதால் பண்டமும் பாழ். வேலையும் திறனற்று விகாரப்பட்டு விடுகிறது.

விட்டு அங்கு வண்டிகள் ஏதேனும் ஏறிவிட்டதோ!" என்கிற பலவித மான சந்தேகங்கள் அவள் மனத்தைப் பிளக்க வாரம்பித்தன. ஒன்றன் பின் ஒன்றாகச் சமுத்திரத்தின் அலைகளைப்போல மனமாகிய கடலில் எண்ணங்களாகிய அலைகள் புரண்டு வருகின்றன. கண்களில் நீர் வழிகின்றன. மதனகோபாலனும் இவள் துயரம் கண்டு சகிக்காமல் எத்தனையோ பிரயத்தினங்கள் செய்து அவனைத் தேடியும் இருப்பிடம் தெரியவில்லை.

ஒரு தினம் ஒரு பெரியவர் வீட்டிற்கு வந்தார். அவரைக் கண்ட ஸாவித்திரி பணிவாகப் பேசத் தொடங்கி "ஐயா! தாங்கள் யார்? எங்கு வந்தீர்கள்?" என்றாள். இதைக் கேட்ட பெரியவர் "அம்மா! என்ன இது! விஷயம் தெரியாதவர்களைப் போலப் பேசுகின்றீர்கள். இவ் வீடு வாங்கியவன் நானல்லவா! நாங்கள் அடுத்த வெள்ளிக்கிழமை கிரகப்பிரவேசம் செய்யப் போகிறோம்; அதற்குள்ளாகக் காலிசெய்யும்படியாகக் கூறும் பொருட்டு நான் வந்தேன்." என்றான்.

இந்த மொழியைக் கேட்டதும் ஸாவித்திரியின் மனம் பதறியது. 'ஆ! எங்கள் பொருள் முற்றும் பாழும் குடியிலும் குதிரைப் பந்தயத்திலும் சென்றொழிந்தது. இவ் வீடும் போய் விட்டதா! ஐயோ! இனி நிற்க நிழலுமில்லையா? கடவுளே! சர்வேசா! இதுவோ உன் திருவிளையாடல்! என் புருஷனைக் கண்ணால் கண்டு எத்தனையோ தினங்களாய் விட்டன. நான் திடீரென்று எங்கு செல்வேன்? எந்த விடத்தில் நான் இனி தங்குவேன்! ஹா! பாழும் குடியே! குதிரைப் பந்தயமே! நீங்களிருவருமன்றோ என் குடியைக் கெடுத்து எங்களைச் சந்தியில் விட்டீர்கள்!

சிலர் தடபுடலான அட்டகாஸத்துடன் அதிகாரம் செய்து "இந்த வேலை இருக்கிறது; அந்த வேலை இருக்கிறது." என்று கூறிக் கொண்டே பலர் அறிய இங்கும் அங்கும் அலைந்தவாறு பிறரைத் திட்டுவது. சாதத் தன்மையாக வாய் திறவாது வேலை செய்பவர்களின் வேலை கணக்கில் சேருவதே இல்லை. இரண்டையும் ஒத்திட்டுப் பார்த்தால் அட்டகாசமும் அதிகாரமும் தான் எஞ்சி நிற்கும்.

அனியாயக்குடியே! உனக்கு இதுகாறும் அர்ப்பணம் செய்த பணம் போதாது வீட்டையும் விழுங்கி, ஏப்பம் விட வாய் திறந்து விட்டாயா? என்ன செய்வேன்?" என்று தனக்குள் வெகுவாய் வருந்த முற்று ஏங்கித் தம்பித்து நின்று விட்டாள்.

9-வது அதிகாரம்

நெஞ்சத் துணிபுக்குச் சஞ்சலமே பலன்

"கிருஷ்ணசாமி வழக்கம் போல அன்று இரவும் தான் தினம் தங்கும் இடத்தில் வந்து காத்துக் கொண்டிருந்தான். இங்கு கீழே நடக்கும் எந்த விஷயமும் அவனுக்குத் தெரியாதாகையினால் தனது கள்ளக் காதலியின் வரவைமட்டும் எதிர்பார்த்துக் கொண்டு உல்லாசமாக விருந்தான். சொர்ணம்மாளுக்குச் செய்யும் சங்கடத்தைவிட அவள் தாயாரின் மனம் வெந்து புண்ணாகிவிட்டது. அவளால் இந்த அவமானத்தைத் தாங்கவே கூடவில்லை. தான் என்ன விதமாக இனி இவ்விடத்தில் வாழ்வது என்ற பெரும் கலக்கமும், அபாரமான துக்கமும், சொல்லொணாத சங்கடமும் தோன்ற, அவள் தம்பித்து விட்டாள். தனது குமாரத்தியைக் கண்ணெடுத்துப் பார்க்கவும் பிடித்தமில்லாது வெறுப்பு வந்து மூண்டுவிட்டது. தன்னை இவ்வித மான கதிக்கு ஆளாக்கிவிட்ட சண்டாள கிருஷ்ணசாமியை தான் சும்மா விடக் கூடாதென்கிற பெரும் ஆத்திரம் கட்டுமீறிப் பொங்கி விட்டது. அந்தப் பெண்ணுடனும் சொல்லாது அவள் தன் வழக்க மான இடத்தில் போய் படுத்துக் கொண்டாள். கிருஷ்ணசாமி

பாலூட்டித் தாலாட்டி அறிவு புகட்டி வளர்த்த அன்னையின் அன்பை இனி யாரிடம் காண்பேன். மாங்கனியின் ருசி மாங்கனிக்கே! கரும்பின் இனிப்பு கரும்பிற்கே தான். அது போல என்னன்னையின் அன்பு அவளோடு மறைந்து விட்டது. அன்னாய்! மறைந்தருள் செய்குவாய்.

எங்கு, எப்படி வருகிறான் என்பது இவளுக்குத் தெரியாதாகையினால் அவன் வரும் வழியை வெகு ஆவலோடு எதிர்பார்த்து நித்திரை செய்வதுபோலப் பாசாங்கு செய்து கொண்டிருந்தாள்.

சொர்ணம்மாள் தன்னிருப்பிடத்திலேயே படுத்துக் கொண்டாள். அவளுக்கு நித்திரையே கொள்ளவில்லை. தனது இரகஸியம் எவ்விதம் தன் தாயாருக்குத் தெரிந்தது என்கிற பெரும் கேள்வியே அவள் மனதில் போராடத் தொடங்கியது. எற்கெனவே தன் தாயார் கோபமுடைய வளாயிற்றே! இந்த நிலைமையில் தன்னை என்னசெய்வாளோ! எக்கதிக்கு ஆளாக்குவாளோ! என்ன கோர சம்பவங்கள் தன்பால் நிகழுமோ! என்று பலவிதமான எண்ணங்களினால் சிந்திக்கப்பட்டுக் கிடந்தாள். கிருஷ்ணசாமி காத்திருப்பான்; தான் சென்று அவனோடு முக்கியமான சில விஷயங்களைப் பேசவேண்டும் என்று எண்ணி தன் தாய் நித்திரை போய்விட்டாளா வென்பதை மறைந்து கவனித்தாள். எற்கெனவே நித்திரை செய்வதுபோலப் பாசாங்கு செய்து கொண்டிருந்த நீலாம்பாள் தன்னைத் தன் பெண் கவனிப்பதை அறிந்து பெரிய குரட்டை விட்டுத் தூங்குவது போலப் பாசாங்கு செய்தாள்.

இதைக் கண்ட சொர்ணம்மாள் தன் தாய் நித்திரை போனதாகவே தீர்மானித்து மெல்ல எழுந்து தனது ரகஸிய இடத்தை நாடிச் செல்லவாரம்பித்தாள். இதைக் கவனித்துக் கொண்டிருந்த நீலாம்பாள் சத்தம் செய்யாமல் தானும் கூடவே சென்றாள். இவர்கள் வீட்டு மேன்மாடத்தில் ஒருவிடம் வெகு மறைவாகவிருக்கிறது. பக்கத்து வீட்டு வழியினால் கிருஷ்ணசாமி அங்கு வருவது வழக்கம்;

"பெண்கள் மேடையேறிப் பிரசங்கம் செய்வதற்கு அவர்களின் கணவன்மார்கள் எவ்விதம் சம்மதிக்கின்றார்களோ!" என்று சிலர் ஆச்சரியப்படுகின்றார்களாம். அதில் ஒருவிதமான வியப்புமில்லை. வீட்டையும் தமது தாய் நாட்டையும் ஒன்றாக ஒத்திட்டுப் பார்ப்பவர்களுக்கு எல்லாம் சகஜமாகத் தான் தோன்றும். வீடு சிலர் சேர்ந்துழைத்துப் பலன் அடைவது, நாடு பலர் சேர்ந்துழைத்துப் பலன் பெறுவது. வீட்டுப் பணி தனது சொந்தத்திற்கு மட்டுமாகும். நாட்டுப் பணியோ பொது ஜன சேவையாகும். புண்ணியமு மாகும்

அன்றும் அவ்வாறே வந்திருந்தான். சொர்ணம் அவ்விடத்திற்குச் சென்றதும் அங்கு வெகு நேரமாகக் காத்துக் கொண்டிருக்கும் கிருஷ்ணசாமி ஆவேசத்துடன் எழுந்து "என்ன சொர்ணம்! இத்தனை நேரம் தாமதமாகிவிட்டது. விசேஷ மொன்று மில்லையே! ஏன் முகம் ஒரு வாறாக வாட்டமடைந் திருக்கிறது?" என்று கூறிய வாறு அவளை இழுத்து வழக்கம்போல மடியில் உட்காரவைத்தான். சொர்ணம்பாளின் தாயார் இந்த இடத்தில் நடப்பதும், பேசுவதும் நன்றாகத் தெரிந்து, கேட்கும்படியான மறைவிடத்தில் நின்று கொண்டு இதைக் கண்டாள். அவளுடைய வயிறு பற்றி எரிகின்றது. பெரும் கோபம் பொங்கி எழுகின்றது. அவற்றை உள்ளடக்கிக் கொண்டு "இவர்கள் என்னதான் பேசுகிறார்கள், அதைக் கவனித்துப் பிறகு நாம் நமது காரியத்தைத் தொடங்குவோம்." என்று எண்ணி வெகு பொறுமையோடு அந்தவிடத்தில் மறைந்திருந்தாள்.

சொர்ணம்:—விசேஷமா! இனி எதுவும் பாக்கி இல்லாத விசேஷம் இருக்கிறது. எனக்கு என்னவோ கேடுகாலம் வந்து விட்டது. என் தாயார் ஊரிலிருந்து வந்ததும், வாராததும் என் விஷயங்களை எப்படியோ தெரிந்து கொண்டாள். அதனால் (நடந்ததைக் கூறி) இவ்வித பரீக்ஷைகளெல்லாம் நடந்தேறின. என் முடிவு என்னவாகுமோ! நீங்கள் எனக்கு மருந்து கொடுப்பதாகக் கூறி கொடுத்ததெல்லாம் ஒன்றும் பலிதமே ஆகவில்லை. என்னை அதோகதி யாக்குவதற்குத் தான் மருந்துகளும் வாளா விருக்கின்றன. நான் பயந்து கொண்டிருந்ததற்குத் தகுந்தாற்போல ஆய்விட்டது. அந்த விஷயம் என் தாயாருக்குத் தெரிந்துவிட்டது. இனிமேல் என்ன நடக்குமோ எனக்கே தெரியவில்லை. நான் பயந்ததெல்லாம், முதலில் நகைகளுக்குத் தான் பயந்தேன். இந்த ரகஸியத்தை எப்படியேனும் மறைத்துவிடலாம் என்று தைரியமாக விருந்தேன். என்னுடைய நகையை என் தாயார் கவனிக்கவேஇல்லை.

எத்தகையோரும் இறப்பதற்கு மனம் வருவதில்லை. ஆனால் அவர்கள் படும் பாதையைக் காண சகிக்கமாட்டாது மனம் தத்தளிக்கின்றது. "இவர்கள் இவ்விதம் இம்சைப் படுவதை விட இறந்துவிடுதலே நலம்" என்றும் அப்போது தோன்றுகின்றது. மனத்திற்கு ஓர் வரம்பு உண்டா!

எனது பெரிய ரகஸியத்தையே கண்டுபிடித்து விட்டாள். இனிமேல் எனது கில்ட்டு நகைகளைக் கண்டு தங்க நகைகள் எங்கே என்றால் நான் என்ன பதில் கூறுவது. என் பிழைப்பு மிகவும் கேவலமாகி விட்டதே! ஐயோ! உன்மீது நான் அளவிலா நம்பிக்கை வைத்ததினாலன்றோ என் நகைகளையும் உனது ஆபத்திற்குக் கொடுத்து விட்டு என்னுயிரையும் உனக்கே தத்தம் செய்து விட்டேன். நீ மட்டும் என்னைச் சரியானபடி கவனிக்க வில்லை என்பதை நான் இப்போது தான் அறியவேண்டும். என்மீது நீ உண்மையான பிரியம் வைத்திருந்தால் நீ என்னை இத்தருணம் எப்படியாவது காப்பாற்றி இவ்விடத்திலிருந்து மறைக்க வேண்டும். என்ன சொல்கிறாய்?'' என்றாள்.

இதைக்கேட்ட கிருஷ்ணசாமியின் மனம் இடிந்து விட்டது. "ஐயோ! இதென்ன பெரும் ஆபத்தாக வந்து முடியும்போ லிருக்கிறதே!'' என்று நினைத்துப் பேசத் தொடங்கி, சொர்ணம்! நீ சொல்லியதைக் கேட்க எனக்கு மிகவும் துக்கமாக விருக்கிறது. உன் தாயாரை இவ்வளவு துஷ்டை என்று நீ முதலிலேயே எனக்குத் தெரிவிக்கலாகாதா! நானும் ஏதேதோ மருந்துகளைத் தான் கொடுத்திருக்கிறேன். அதற்கெல்லாம் பலன் கிடைக்கா விட்டால் குழந்தையே பிறக்கட்டும். அந்த ஏற்பாட்டில் நமக்கு உடந்தையாக ஒத்து நடக்க ஓர் வேலைக்காரியைத் தயார் செய்திருக்கிறேன். அவள் வந்து உனக்குச் சகாயம் செய்து குழந்தையை எடுத்துக் கொண்டு போய்விடுவாள்; பிறகு நாம் சுகமாக இருக்கலாம் என்று நினைத்தேன். உன் தாயார் காசிக்குச் சென்றவள் அவ்விடத்திலேயே இறந்து விடவேண்டுமென்று நாமிருவரும் கோரினோமே! பாவிமுண்டை எவ்விதமோ பிழைத்து வந்து விட்டாளே. இப்போது என்ன செய்வது? உன்னை

சிலர் போஜனத்திற்கு அழைக்காமலேயே தயாராக வந்து விடுகிறார்கள். சிலர் சகஜமாக அழைத்தவுடன் வருகிறார்கள். பின்னும் சிலரையோ வேளைக்கு வேளை தாம்பூலம் வைத்து வேண்டும்படியாகிறது. மற்றும் சிலர் வருவதும் உண்பதும் தூற்றுவதும் ஏதேனும் ஒரு சொட்டைச் சொல்லைக் கூறுவதுமாக இருக்கிறார்கள். ஒவ்வொருவரின் போக்கு ஒவ்வொரு தினுசு.

நான் எங்கு மறைப்பேன்? என் மனைவியோ மகா ராக்ஷஸி. நம்மிருவரையும் அவள் ஒரே நிமிடத்தில் நெருப்புவைத்துப் பொசுக்கி விடுவாள். அவளை அறியாது நான் எவ்விதம் உன்னோடு மறையக்கூடும். ஏற்கெனவே என்னுடைய உத்தியோக சாலையில் அவள் என்மீது புகார் கிளப்பி என் வேலையைப் போக்கக் கூடிய நிலைமையைச் செய்துவிட்டாள். இப்போது அவள் இலகுவில் விடாது என்னை கோர்ட்டு வரையில் இழுத்து விடுவாள். நான் என்ன செய்வேன்? என்னுடைய ஆபீஸ் பணத்தில் கணக்கு பிசகியது என்னுடைய அஜாக்ரதையினால் என்றாலும் உன்னால் தான் நான் அஜாக்ரதையானேன். அதற்கு 800 ரூபாய் கட்டும்படியாக வந்த சமயத்தில் நீ உன்னுடைய நகைகளைக் கொடுத்து உதவினாய். அதை நான் மறக்கமாட்டேன். உன் தாயார் அறியாமலிருக்கும்பொருட்டு அந்த நகைகளுக்குப் பதில் கில்ட்டு நகைகளையும் வாங்கி அணிந்தாய். இப்போது நான் என்ன செய்வேன்? இன்னிலைமையில் நான் எப்படி பதில் சொல்வேன்? முதலிலிருந்து நீ யாகவே என்னை ஸ்னேகம் செய்து கொண்டதனாலேயே நான் உன்னிடம் பவ்யமானேன்.

சோர்ண:—(ஆத்திரங் கொண்டவளாய்) அடேய்! இப்படியா சொல்லிவிட்டாய்! இவ்விதமாகவா கை விட்டுவிட்டாய்! ஐயோ! உன்னால் நான் மகா சண்டாளியாகிவிட்டேனே! என்னை எந்த நாளும் கைவிடாமல் காப்பதாக நீ அளித்த வாக்குறுதி எங்கேயடா போய்விட்டது? உன் சத்தியம் எந்த குப்பையிலடா ஒளிந்தது. உன் ப்ரமாணம் எந்த மண்ணிலடா மறைந்தது. உன் உறுதி மொழி எந்த உடைப்பிலடா போய்விட்டது. ஐயையோ! என்னைப் பாழாக்கிச் சந்தியில் விடும் பொருட்டாகவா எனக்கு நீ எமனாக வந்து சேர்ந்தாய்! அனியாயமாக நான் அழிந்துவிடும்படியாகச்

பத்திராசிரியர்களுக்கும் நூலாசிரியர்களுக்கும் தம் தம் சாமர்த்தியத்திற்கு ஏற்றாற்போல விஷயங்களை வரையவும், மாற்றவும், சேர்க்கவும், நீக்கவும் சக்தி இருக்கிறது என்கிறார்கள் சிலர். அந்த சிலருக்கு தாம் பேசும் வம்பு பேச்சை மாற்றவும் திருத்தவும் அத்தகைய சக்தி இல்லாது அகப்பட்டுக்கொள்கிறோமே என்கிற ஏக்கமோ என்னவோ, தெரியவில்லை.

செய்த பாவி நீ யல்லவா! என்னை விணாக மயக்கி நரகக் குழியில் தள்ளிய நாசகாலன் நீ யல்லவா! அடே த்ரோகி! உன்னுடைய கபட நாடகத்தை இந்த நிமிடம் வரையில் நானறியாதவாறு நடித்து என்னை நாசமாகச் செய்துவிட்டாயே! என் கதி அதோகதியாகி விட்டதே! ஐயோ! நான் என்றும் இருந்த நெறியோடு இல்லாது உன்னால் பலவிதத்திலும் பாழாகிவிட்டேனே! பெரியவர்கள் வைத்த கட்டுப்பாட்டை மீறியதற்குப் பலன் இதுதானோ! அவர்கள் வார்த்தையைத் தட்டியதற்குச் சன்மானம் இதுதானோ! அடே சண்டாளா! என்னுடைய ஆயிரம் ரூபாய் நகையை என்னிடமே வைத்திருந்தால் நான் எங்கேனும் கண்மறைய ஓடிப்போய் என் குழந்தையுடன் பிழைப்பேனே! அதிலும் மண்ணைப் போட்டு விட்டாயே! சண்டாளா! காதகா!" என்று சரமாரியாகத் திட்ட வாரம்பித்து விட்டாள்.

இதைக் கேட்ட கிருஷ்ணசாமி "சொர்ணம்! ஆத்திரப்பட்டு திட்டாதே; உன்னால் நான் லாபமடையவில்லை என்று சொல்லவில்லை, வேண்டியமட்டும் பலவிதத்திலும் சுகமடைந்தேன். என்னை நீ திடீரென்று இவ்விதம் திட்டிவிடாதே! இப்போதும் பாதக மில்லை. என் தம்பியை அழைத்து ஒரு ஏற்பாடு செய்து உன்னை அழைத்துச் செல்லும்படியாகச் செய்கிறேன். இல்லாவிடில் இன்னொரு வழி செய்வோம், உன்னுடைய நலனையும் மற்ற சவுகரியங்களையும் எண்ணி உன் தாயாரை இவ்விடத்திலிருந்து துரத்தி விடுவதோ, அன்றி ஏதேனும் மந்திரம் செய்து படுக்கையில் தள்ளிவிடுவதோ, அல்லது உன் கருவிலுள்ள சிசுவை அழிப்பதைவிட அவளை ஒழித்துவிடுவதோ! இம் மூன்றில் ஏதேனும் ஒன்றைச் செய்யலாம் என்று தோன்றுகின்றது. என்ன சொல்லுகிறாய்?" என்றான்.

சிலர் தமது சொந்த அபிப்பிராயத்தைப் பிறர் கூறியதாகத் தெரிவிக்கின்றார்கள். இதில் என்ன மறைவிடமோ தெரியவில்லை இந்த வார்த்தை அவர்களின் சொந்த அபிப்பிராயம்தான் என்பதை அவர்களின் வார்த்தையே—எழுதும் திறனே—எடுத்துக் காட்டிவிடுகிறது.

இத்தனை வார்த்தைகளையும் வெகு பொறுமையோடு கேட்டுக்கொண்டிருந்த நீலாம்பாளின் கோபமும், ஆவேசமும் உச்ச நிலையை அடைந்து கட்டு மீறிப் பொங்கி வந்து விட்டது. அதற்கு மேல் அவளால் தாங்கக் கூடவில்லை. காளிகா தேவி போன்ற சீற்றத்துடன் அவ்விருவர்களின் முன்னே வந்து வயிற்றெரிச்சல் தீர வயிற்றிலும், மார்பிலும், தலையிலும் அறைந்து கொண்டாள். "அடேய் சண்டாளா! அடீ, குலத்ரோகி! என் வயிறு பற்றி எரிகின்றதே! நீங்கள் நாசமாய்ப் போக! அடேய் கொலை பாதகா! நீ செய்து வந்த சதிகளெல்லாம் போதாதென்று என்னையும் கொலை செய்து பெரும் பாறையைத் தலையில் சுமத்த யத்தனிக்கின்றாயா! ஐயோ! என் அங்கம் அனலாகப் பற்றி எரிகின்றதே? அடேய் துரோகி! அறிவுகெட்ட நாயே! உன்னுடைய படிப்பையும் உன்னுடைய உத்தியோகத்தையும் உடைப்பிலே போட. என் குடியைக் கெடுத்துவிட என்ன கறம் வைத்திருக்தாயடா! உங்களுடைய வார்த்தை எல்லாவற்றையும் நான் கேட்டுக்கொண்டு தானிருந்தேன். அவளே வலுவில் உன்னை வலையில் இழுத்ததாக நெஞ்சம் அணிந்து கூறுகின்றாயே! ஐயோ! நீ எங்களை விட உயர் குலத்தில் பிறந்ததற்குப் புத்தி உயர்வாக இல்லாது பாழாகி கேவலமான சண்டாளனாக வல்லவோ இருக்கிறாய்? நீ யோக்யனாக இருந்து குலத் துரோகம் செய்யாமலிருக்கப் பிரியப் பட்டவனாயின் இந்த அறிவு கெட்ட மாடு உன்னோடு சினேகம் செய்யவந்த காலத்தில் உனக்குமா அறிவு அற்றுவிட்டது. இந்த தடிக் கழுதையைக் கண்டித்துச் செருப்பால் புடைத்து "நாயே உன் கதி என்ன? நீ இருக்கும் நிலைமை என்ன! நீ எடுத்த ஜென்ம மென்ன! கணவனை ஒழித்துக் கைம் பெண்ணாகிய நீயா இத்தகைய தூர்த்தச் செய்கையில் நாட்டங் கொண்டலைகின்றாய்! பேயே! இச் செய்தியை உன் தாயிடத்தில் தெரிவித்து உன்னை என்ன கதிக்கு உள்ளாக்குகின்றேன் பாரு. உன்

உடன் பிறந்தவர்கள் தாங்கள் இருக்கவேண்டிய நிலைமையில் இருந்து விட்டால் பிறருக்குக் கஷ்டமில்லை. அங்ஙன மின்றி அதில் ஒருவர் முறுக்குக் கொண்டாலோ இருப்பவர்களுக்குக் கழுத்தறுப்புதான். முக்கியமாக அண்ணன் மனைவி பாடு ஆற்றில் இறங்கிய கதிதான்.

காலத்தைக் கடத்த நல்ல வழியைத் தேடிக் கொள்ளாது இவ்விதம் அலைகின்றாயா! உன்னுடைய மனம் உன்னை மீறி விடுமாயின் உன் பெரியாரிடம் தெரிவித்து உனக்கு அவர்களாலேயே ஏற்பாடு செய்துகொள்ளவேண்டுமே யன்றி, நாயே! நான் குடித்தனக்காரன்; என்னையும் விணுக்கி நீயும் பாழாக வருகின்றாயா! அஷ்டத்தனத்தை தூரவிலக்கு. நல் புத்தியை அடைந்து நல்ல பெயரெடு, அன்றி உன் பொழுதை நல்ல விஷயத்தில் கழிக்கவேண்டுமாயின் உனக்கு நான் சிபார்சு செய்கிறேன். நீ பெண்கள் கலாசாலையில் சேர்ந்து படித்து நல்ல அறிவையும் தெளிந்த ஞானத்தையும் தேடிக்கொள். உன்னுடைய இத்தகைய சிறுமை கொண்ட புத்தியை இப்போதே திருத்திக்கொள். வீணுக குலத்தையும் நாசம் செய்து நீயும் பாழாகாதே! என்னையும் சந்தியில் இழுக்காதே! அனியாய வழியில் புத்தி செல்வது அரைக்கணமும் ஆகாது. அந்த பாழாய்ப் போன புத்தியைச் சரியான வழியில் திருத்தி உன் வயப் படுத்துவதற்கு மட்டும் வெகு நாட்களானுலும் அது சீர்ப்படுவது அரிதிலும் அரிதுதான். உன் போன்ற மற்ற மங்கையர்களைப் பார்த்து உன் மனத்தையும் நீ அடக்கிக்கொண்டு நல்வழிப்படு; இல்லையேல் உன்| தாயாரை மறுமணம் செய்து வைக்கச் சொல்லி ஒருவனேடு உலக மறிய வாழ்வை நடத்தினல் அதில் இதிலுண்டான பாபமில்லை. ஆகையினல் எந்த வழியேனும் செய்துகொண்டு விலகு. என்னுலான உதவி, நான் உன்னுடைய அநாகரிகத் தன்மையை பிறருக்கு வெளியிடாதிருக்கிறேன். இல்லையேல் உன்னை நான் பஜித் செய்து காரி உமிழும்படியாகச் செய்துவிடுவேன். நாயே! ஓடிப்போ.” என்று நல்ல புத்திமதிகளை எடுத்துரைத்து அவனை அனுப்பி யிருந்தால் இந்த கதி வந்திருக்குமா! நீ வெகு நல்லவனைப் போல நடித்து பேசியதைக் கேட்க என் வயிறு பற்றி எரிகிறதே! உன்மீது தப்பித மில்லை என்று உன் மனச் சாக்ஷிக்கு விரோத மின்றிக் கூறுவாயா! சண்டாளா!

தன் மாமி வீட்டு மனிதரை மரியாதை செய்வதற்கும் திருப்தி செய்வதற்கும், தாய்வீட்டு மனிதர் திட்டு வாங்க வேண்டுமாம். இது வென்ன புதிய தமாஷ் நீதியோ தெரியவில்லை. தாய் வீட்டு மனிதருக்காக யார் எதிர் திட்டு வாங்க வருவார்கள்; இதற்கோர் தந்திர நிதி பிறக்க வேண்டுமோ என்னவோ!

22

அவனுடைய கதியை இவ்விதம் ஆக்கிய பாவி நீயே யல்லவா! உனக்குக் கடவுள் சகாயம் செய்வாரா! உன்னைக் கடவுள் நன்றாக விளங்க வைப்பாரா! என் குடி அதோகதியானது போல நீ நாசமாய் நிர்மூலமாய்ப் போய்விடமாட்டாயா! நீ நல்ல உத்தமனாக விருப்பின் உன்னுடைய புத்தியில் ஒரு பிராணனைக் கொலை செய்யவும், மந்திரத் தால் அழிக்கவும் தோன்றுமா! உன்னுடைய யோக்யதை இந்த இரண்டு வார்த்தைகளிலிருந்து நன்றாகத் தெரியவில்லையா! நீயா யோக்யன்! நீயா நற்குணவான்; அஞ்சா நெஞ்சம் படைத்த வஞ்சக னல்லவா நீ! அடேய்! கிராதகப் பதரே! நீ நல்லவனாக விருப்ப தற்கு அடையாளம் ஏதேனும் ஒரு அம்சத்தில் காட்ட உன்னால் முடியுமா! உனக்கு பவிஷு இருக்கிறதா! மகா உத்தமியாகிய உன் மனைவியின் வயிறெரிய நீ செய்திருக்கும் அக்ரமங்களை எல்லாம் அந்த உத்தமியின் வாயினின்றும் இன்றே தெரிந்து கொண்டேன். அந்த மகா பதிவிருதையின் வயிற்றெரிச்சல் வீண் போகுமா! அது உன்னை உனது ஏழு ஜன்மத்திற்குத் தாக்கி வதைக்காமல் விடாது. பால்த்ரீகளைக் கெடுக்க எண்ணுபவனுக்கே கணக்கில்லாத பாபங்கள் சொல்லி இருக்கிறது. கெடுத்துவிட்ட சண்டாளனுடைய கதி யைக் கூறவேண்டுமா! இத்தகைய சோதா நாய்களைச் செருப்பாலடித் தால் தோஷமே இல்லை. உன்னைப் போன்ற பாவிகளுக்குக் கடவுள் வேறு புதிய நரகந்தான் சிருஷ்டித்திருக்கிறான். என் கும்பியில் வைத்த கொள்ளி வீணாகாது. உன்னுடைய வஞ்சக மொழியை நெஞ்சார நம்பியே இந்த நாசகாலி பாழாகி விட்டாள். அடீ, சண்டாளி! பாதகி! என் குடியை அடியோடு அதம் செய்ய வந்த மாபாவியே! உன் மதி இவ்விதமும் அழிந்து போகுமா? நான் ஆதி முதல் உன்னை கலாசாலையில் சேர்ப்பதற்கும், மறுமணம் செய் வதற்கும் எவ்வளவோ விதத்தில் முயற்சித்தேனே! என் வார்த்தை உனக்கும் உன் தந்தைக்கும் விரோதமாகப் பட்டதே! "அம்மா! எனக்கா மறுமணம். எனக்கா படிப்பு! எனக்கு ஒன்றும் வேண்

தன்னுடைய சொந்த மனிதர்கள் தன்னை ச்வாதந்தர்யத்துடன் எவ்வளவு திட்டியபோதிலும்—அடித்தாலுங்! கூட—அதனால் மனவருத்தமோ, கிலே சமோ கிடையாது. ஆனால் தனக்கு எதிரிகளின் முன்பு திட்டுவது மட்டும் இரு தாத்தினர்க்கும் ஏளனமும், துன்பமும் ஆகும்,

டாம். கடவுளே என்னை இக்கதிக்கு ஆளாக்கிவிட்டபிறகு இனிமேல் இவை எல்லாம் எதற்கு. என் பொழுதை நான் இவ்விதமே சன்யாசினியாகக் கழிக்கப் போகிறேன்'' என்று வாய்ப்பறை வேதாந்தத்தைக் குளறிக் கொட்டினயே! இந்த அல்ப புத்தி அப்போது எங்கு மறைந்திருந்தது. அந்த வேதாந்தம் இப்போது எவ்விதம் மக்கிப் போய்விட்டதடீ! குலத்ரோகி! நீ வெகு சிலத்துடனும் மன வைராக்யத்துடனும் இருப்பதனலல்லவோ உன்னை நான் தனித்து உறவினர் வசம் விட்டு காசி யாத்திரை சென்றேன். அவர்களும் உன்போன்ற துர்க்குணர்களென்பதை இப்போதல்லவா அறிகிறேன். ஐயோ! இந்த சங்கடத்தை என்னல் சகிக்கக் கூடவில்லையே! இனி உன்னை நான் வைத்துக்கொண்டு உயிர்வாழ்ந்தால் ஊரார் கண்டு நகையாட மாட்டார்களா! என்னுடைய பாரமார்த்திகமும், புனிதமான காசி யாத்திரையின் மகிமையும், புண்ணிய நதிகளில் நீராடிய பலனும் உன்னல் பாழாக வன்றோ போய்விடும். என் ஜென்மத்திற்கு இனி மோக்ஷ முண்டா! இனி புண்ணிய முண்டா! அன்றி புகழேனு முண்டா! ஒன்று மில்லையே! வைகம் பெண் கர்ப்பிணியானுள்; பிள்ளை பெற்றுள். இன்னருடைய மகளாம். இன்னர் வீட்டுப் பெண்ணும். இன்னரால் கெட்டாளாம். அந்தத் தரிதலை மகளை வைத்திருக்கிறுள் இதோ போகிறுளே இவள்'' என்று என்னைக் கண்டவிடத்தில் கண்டவர்களும் பரிகவித்துக் கை கொட்டி நகைத்துக் காறி உமிழ்வார்களே! ஆ! நான் என்ன செய்வேன்? தவமான தவமிருந்து உன்னைப் பெற்றதற்குப் பலன் இதுதானே! உன்னல் பட்ட துன்பத்திற்கு இது தான் கைம்மாருக எனக்களித்தாயோ? என்னுடைய ஆத்மாவின்

கொடுத்த கடனைக் கேட்டால் கோபம். கடன் கொடுத்தவனுக்கு வட்டிக்கு வட்டி ஆகிவிடுவதால் வயிற்றுக் கொதிப்பு அதிகரித்துத் துவேஷம் உண்டாகின்றது. கடன் பெற்றவர்களோ வட்டி கொடுப்பதற்கும், வயிறெரிகிருர்கள். கடன் கொடுத்தவன் குடும்பத்தையே தான் காப்பதாகப் பறையும் சாற்றுகிருர்கள். இந்த வீண் பறையும் வேண்டாம். பணத்தைக் கொடாது அழிம்பு செய்யவும் வேண்டாம். எல்லா விஷயத்திலும் கருராக நடந்தால் மனஸ்தாபமேது. பணந்தான் பக்ஷம். பணந்தான் பகை; பணந்தான் யாவையும் செய்கின்றது.

சுத்திக்காகவும் இஜ் ஜென்மத்திற்குப் புண்யம் சம்பாதிக்கும் பொருட்டும் நான் அனுஷ்டித்த விருதங்களின் மகிமையும், திவ்ய தேச யாத்திரை செய்து கடவுளைத் தரிசித்து கங்கை நீராடி அடைந்த சார்த்தகத்தை எல்லாம் நான் முற்றும் அனுபவிக்க விடாது என்னுடைய வாணுளை நான் அனுபாச மரணமாக முடிக்கும்படியான காலம் வந்துவிட்டதே! என்னுடைய பிறவியில் எள்ளனவான பாபமும் என் மனமறிந்து நான் செய்தறியமாட்டேனே; என் வயிற்றில் பாபப் பிண்டமாகிய நீ எவ்வாறு ஜெனித்தாயோ தெரியவில்லையே! நான் சொல்லியதைக் கேட்டு அப்போதே மறுமணம் செய்துகொண்டிருந்தால் நீ ஒரு வழியாகத் தொலைந்து போயிருப்பாயே! இப்போது என்னையும் என் வம்சத்தையும் அடியோடு நாசம் செய்துவிட்டாயே! ஹா! சாணுகத ரக்ஷகா! காசி விச்வநாதா! உன்னைத் தரிசனம் செய்துவிட்டு ஆனந்த சித்தத்துடன் வந்தவுடனே இத்தகைய கோர சம்பவத்தையா நான் காண வேண்டும்? இத்தகைய துர்ப்புத்தியை இந்த சண்டாளர்களுக்கு ஏன் கொடுத்தாய். ஐயோ! என் மனம் தவிக்கின்றதே! என் இருதயம் அடிக்கின்றதே! என்ன செய்வேன்? படுபாவி உன்னைக் கெடுத்தது மன்னியில் பொருளையும் கள்ளன் போல அபகரித்துக் கொண்டானே! அந்தப் பொருளை வேண்டுமானல் முதலிலேயே கள்ளன் போன்று களவாடிக்கொண்டு உன்னை விட்டுவிட்டுப் போயிருக்கலாகாதா! எல்லாவற்றையும் விட முக்யமான உன் னுயிரையே மோசம் செய்துவிட்டானே! என்ன செய்வேன்? என் ஆத்திரம் என்னை மிஞ்சி வருகின்றதே! என்ன செய்வேன்?" என்று நீலாம்பாள் கட்டுமீறிய ஆவேசத்துடன் திட்டினாள். கண்ணீரை உதிர்த்தாள்.

அருகிலிருந்த ஒரு கட்டையை எடுத்துப் பெண்ணை நன்றாக அடித்தாள்; கிருஷ்ணசாமியின்மீது சில அடிகளை விட்டாள். "என் முகத்தில் விழிக்காது இக்ஷணமே ஓடி விடுங்கள். குலத்

பத்திரிகைகளை விடாது படிப்பதில் எவ்வளவோ சாதக மிருக்கிறது, பத்திராதிபரின் அபிப்பிராயங்களை நன்கறிவதோடு உலக விஷயங்கள், பொது வர்த்தமானம் எல்லாவற்றையும் தெரிந்துகொள்ளலாம், பொழுதும் வீணே கழியாது,

துரோகிகளுக்கு இனி இங்கு இடமில்லை, உம் போய் விடுங்கள். என் மகள் இறந்துவிட்டதாக நான் இப்போதே தலை முழுகி விடுகிறேன் மானம் போய் வாழ்வதைவிடப் பெண் இறந்துவிட்டதாக தத்தம் செய்துவிடுகிறேன்" என்றாள். இதைக் கேட்டும் உதையைப் பட்டும் அவ்விருவரும் வாயைத் திறக்கவில்லை. கிருஷ்ணசாமி தலை குனிந்தவண்ணம் அங்கு ஓராசனத்தில் அமர்ந்துவிட்டான். நீலாம்பாள் அவனை சாணி கரைத்துக் கொட்டி துடைப்பக் கட்டையினாலும் செருப்பாலும் அடிக்காத குற்றந் தான். அதற்கு மேல் வாயினாலும் எரிந்த மனத்தினாலும் அடித்துவிட்டாள். அப்போதும் கிருஷ்ணசாமி பதில் பேசுவதோ, வாய் திறப்பதோ ஒன்றுமில்லை.

சொர்ணம்பாள் மட்டும் தன் கதி அதோகதியாகிவிட்டதென்பதை நன்கு உணர்ந்துகொண்டாள், கண்ணீர் பெருகிய வண்ணம் எழுந்து தன் தாயின் காலில் விழுந்து வணங்கியவாறு "அம்மா! என் தாயே! நான் உன் சொல்லைக் கேளாத பாவியாகி விட்டேன். உன் வார்த்தையை நான் அப்போதே கேட்டிருந்தால் இந்தக் கேட்டிற்கு ஆளாகி இருக்கமாட்டேன். என்னுடைய முடிவில் விநாசகால மிருப்பதனாலேயே இத்தகைய புத்தி எனக்கு உண்டாகியது. இல்லையேல் எனக்கு முதலில் இருந்த வெறுப்பும் வேதாந்தமுமே நிலைத்திருக்கும். நான் இனி பிழைத்திருக்கும் வழி கிடையாது. இந்த நிமிடம் வரையில் நான் இத்தகைய ஆபத்தில் சிக்கிக்கொள்ளப் போவதாயும், நான் அதோகதியாய் தெருவில் நின்று கதறப் போகின்றேன் என்றும் நினைக்காது மதோன்மத்துடனும் திமிர் பிடித்த தோற்றத்துடனும் இருந்தேன். என்னுடைய காலத்தின் முடிவு கிட்டிவிட்டது- என்னை எத்தனையோ தவமிருந்து பெற்ற தாயே! நீ என்னால் பலவித;சுகபோகமும் சந்தோஷமும் அடைய எண்ணினாய். அவைகளில் மண்ணைப் போட இப் பாவி

பெரிய உத்யோகஸ்தராகவோ, அல்லது நீதிபதியாகவோ இருந்தாலும் கூட அவர்கள் தமது வரம்பு மீறி நடந்தால் அவர்களை இதுகாறும் மதித்திருந்ததெல்லாம் மாறி பாலில் புளித்துளி தரித்ததே போல ஆய்விடுகின்றது. வரம்பிற்குள் செய்தால்தான் எதற்கும் மகிமை புண்டு.

எனக்கு சத்ருவாக ;வந்து சேர்ந்ததால் நான் உனக்கு பெரும் துரோகியாய், சண்டாளியாய், சத்ருவாய் ஆகிவிட்டேன். நான் செய்துள்ள அக்ரமத்திற்கு இனி எத்தனை ஜென்மத்திற்குப் புலம்பி னாலும் அதற்கு மாற்று மில்லை. விமோசனமும் இல்லை. மகாபாவியா கிய என்னைப் பரிசுத்தாத்மாவாகிய நீ மன்னிப்ப தென்பதுவும் இனி மேல் நடவாத காரியம். மன்னிக்கும்படியாகக் கேட்பதற்கும் நான் யோக்பதை அற்ற சண்டாளியாகி விட்டேன். என்னுடைய மதி என்னாலழிந்தது பாதி; இப் பாதகனால் அழிந்தது பாதி. என்னு டைய காலகதி இவ்விதமாகு மென்று நான் சற்றும் நினைக்காது மோசம் போய் விட்டேன். என்னைப் பெற்ற வயிறு பற்றி எரியும் படியாக நான் செய்து விட்டேன். அம்மா! நான் செய்த பாதகத் தினால் இனி உன்முகத்தில் விழிக்காது நான் எங்கேனும் உன் கண்மறையப் போய் விடுகிறேன். அம்மா! வருத்தப் படாதே. என்னால் நீ கண்ட பலன் இதுதான். நான் இறந்ததாகவே நீ நினைத்து விட்டது மிகவும் பொருத்தமானது; அதில் ஆக்ஷேபமே இல்லை, என்னுடைய மானமும், என்னுடைய மதியும், எனது அறிவும், என்னுடைய கவுரவமும் என்று அழிந்ததோ அன்றே நான் சவ மானேன். அன்றே நான் நாசமானேன். அன்றே எனக்குச் சர்வமும் ஒழிந்தது. நான் இனி இதைப்பற்றி ஆயிரந்தரம் புலம்பிக் கூறினாலும் என்னுடைய அழிந்து விட்ட மானத்தைத் திரும்பப் பெறமுடியாது. ஒரு தவலை பாலில் துளி விஷத்தைக் கலந்து விட்டால் அதைப் பிறகு நல்ல பாலாகப் பிரிக்க முடியுமா! அது போலல்லவா என்கதி ஆய்விட்டது. ஐயோ! உலகமே மோசம் கபடம், சூது, வாதுகள் நிறைந்தது என்பதை இப்போதே அறிந்தேன். இப்பாவி என்னை என்றும் கைவிடாது காப்பதாகக் கூறிவிட்டுத் தற்போது விலகும் வழியைத் தேடிக் கொண்டான். விதவையானாலும் மனத்திற்கு இசைந்தவனை, சத்தியத்திற்குக் கட்டுபட்டவனை பெரியோரின் சம்மதத்தினால் மணந்து கொள்வதில்

சகஜமான சுபாவத்தோடிருப்பவர்களைத் தான் நன்றாக தெரிந்து கொள் ளாது சிலர் உளறுகிறார்கள். மூடு மந்திரம் செய்யும் குள்ளநரிகளை எவருமே கண்டுபிடிப்பதில்லை. உள்ள ஊழல் முற்றும் தங்குமிடம் மூடிய விடத்தில் தான் என்பதையும் சிலர் அறியாமலில்லை.

இத்தகைய போராட்டமும் அவமானமும் இல்லை. இப்பாவி சுயநலத்தையே கொண்டவன் என்பதை என்னை வஞ்ஜித்த பிறகே அறிந்தேன். அம்மா! பெரியோர் சொல் கேளாத பாவிகளுக்கு இதுதான் கதி. என் முடிவே எனக்குப் புத்தி புகட்டி விட்டது. என்னுடைய கண்முன்பு நான் செய்துள்ள பாபங்கள் தாண்டவம் புரிகின்றன. ஹா! நான் இனி ஒருவர் முகத்திலும் விழிக்கவில்லை. ஒருவர் முன்பும் வாழ விரும்ப வில்லை. அடேய் சண்டாளா! என்னைப் பலவிதத்திலும் கெடுத்துப் பாடு படுத்தியது போல இனிமேல் ஒருவலையும் கெடுக்காதே. அனியாய நரகில் அவர்களை விழ்த்தாதே- என்னைச் செய்த சதி போதும். உன்னைக் கடவுளே தண்டிப் பார். என் பணத்திற்கு இப்போது என்ன வழி சொல்கிறாய்! என்னுடைய ஆயிரம் ரூபாயையும் கீழே வைக்கிறாயா! அல்லது நான் உன்னுடைய யோக்யதையை உனது உத்யோக சாலையில் வந்து பகிரங்கமாகத் தெரிவித்து என்னுடைய கற்பை நீ கெடுத்ததை விளம்பரம் செய்து உன்னை பஜீத் செய்துவிட்டுமா! என் பணத்தைத் தடையின்றி கீழேவைக்கின்றாயா, இல்லையா? அயோக்யருக்கு அயோக்யத் தனமாகத் தான் இருக்கவேண்டும். என்னை நீ செய்த சதிக்கு என் மானம் என்னவோ போய்விட்டது; பிராணனும் போகப் போகின்றது. என்னுடைய பழியை நான் தீர்க்காமல் போவதில்லை. உன்னை நான் சும்மா விடப்போவதில்லை. என்னுடைய ஆத்திரத்தை உன்மீது தீர்க்காமல் வெறுமனே இருக்கப் போவதில்லை. ஒரு கை பார்த்தே விடுகிறேன். எங்கே எனது பணம்? இத்தக்ஷணம் கொண்டு வருகிறாயா! இல்லையா!" என்று பொருத்தமோர் கர்ஜனை செய்தாள்.

இந்த எதிர் பாராத வார்த்தையைக் கேட்ட க்ருஷ்ணசாமியின் தேகம் நடுக்கலெடுத்துக் கொண்டது. ஏற்கெனவே தன்னுடைய மானம் பாதியும் ஆபீஸில்போய் விட்டது. "இந்த சொர்ணம்மாள் ஆத்திரத்தில் இன்னும் என்னதான் செய்வாளோ! அதனல் ஆபீஸில் வேலையே போவதுடன் இன்னும் என்ன விஷயம்

பணத்தினுடைய அருமை கை வரண்டபொழுது தான் தெரியும் என்ற வாக்கு பொய்யில்லை. எனினும் அதைவிட நான்கு புறமும் கடன்காரர்கள் பிச்சும்பொழுது நமக்குப் பணம் வரவேண்டியது இருந்தும் வாராமல் தடைபட்டுவிட்ட சமயமே அதிக கஷ்டமும் விசனமும் உண்டாகின்றது.

நடக்குமோ! ஏற்கெனவே ஆபீஸ் பணத்தை நாம் தாம் தூம் என்று அழித்து விட்டு அதற்குப் பதில் பணத்தைக் கட்டி இருக்கிறோம். இந்த உண்மையை அவர்களுக்கு இவள் எடுத்துக் கூறிவிட்டால் என்ன செய்வது. இப்போது நாம் இவளுக்குப் பணங்கொடுக்கா விட்டால் நம்மை பஜீத் செய்து விடுவாள். நம்முடைய ஆபீஸில் நமக்கு மேலுள்ள அதிகாரிகள் இவ்வூரில் நம் வீட்டிற்கு அருகிலேயே இருப்பதால் அவர்களுக்கு இத்தகவல் தெரிந்து விட்டால் நம்முடைய கதி என்னவாகும். ஹா! இவ்விதமான சங்கட நிலைமை நமக்குவரும் என்று கனவுகூடக் காணவில்லையே! என்ன செய்வேன்?" என்று யோசனை செய்தான். பிறகு பேசத் தொடங்கி "சொர்ணம்; ஆத்திரப் படாதே, உன்னுடைய பணத்தை நான் எந்த வகையிலாவது சேர்த்து விடுகிறேன். இதற்காக நீ சற்று தாமதிக்க வேண்டும். எனக்கு திடீரென்று ஆயிரம் ரூபாய் கொடுப்பதற்கு எவ்விதம் இயலும்? கொஞ்சம் நாள் தவணை கொடு; நான் கொடுத்து விடுகிறேன்" என்றான்.

நமது ரங்கமணிக்கு மட்டும் எதிர் வீட்டில் ஏதோ விசேஷம் நடக்கிறது; தான் வைத்து விட்ட வத்தி நன்றாகப் பற்றிவிட்ட தென்பதை நன்கு தெரிந்து கொண்டாள். அந்த விவரத்தை மட்டும் மறைந்தேனும் தான் கவனிக்க வேண்டுமென்று அவளுக்கு மிக்க ஆவல் தூண்டியது. அவள் எந்த வழியினால் இங்கு நடப்ப வற்றைக் கவனிக்கலாம் என்று யோசித்தாள். சொர்ணத்தின் வீட்டில் காவற்காரன் ஒருவன் அங்கு வீதியில் படுத்திருப்பது வழக்கம். அவனுக்கு ரங்கமணி அன்று தான் செய்த கொழுக் கட்டை, தோசை முதலியவற்றில் கொஞ்சம் கொணர்ந்து கொடுத்து "அப்பா! உள்ளே நம்ம ஐயர் இருக்கிறார். அவருக்குப் பலகாரம் அங்கேயே கொண்டுவரும்படி சொன்னார். இதை உள்ளே கொடுத்து விட்டு வருகிறேன்" என்று தந்திரமாகக் கூறிவிட்டு உள்ளே சென்று

பணமில்லாக் கஷ்டத்தின் கொடுமையை எண்ணிடில், மறைந்து நமக்கு உபயோகப் படாமல் எவ்வளவோ பணம் இருந்தும் வருத்தம் தீருவதில்லை. சமயத்திற்கு உபயோக மில்லாத நிலைமையில் தான் வறுமையின் கொடுமை நன்றாகத் தெரிகின்றது.

வேறொரு மூலையில் நின்று இங்கு நடந்த சகல சம்பாஷணைகளையும் கேட்டாள். அவள் மனம் பொங்குகின்றது. அனியாயமாய்ப் பெண் பிள்ளையின் கையில் இத்தகைய வார்த்தையைக் கேட்கிறாரே என்று வருத்தம் ஒருபுறம் பாதிக்கின்றது. இன்னும் என்னதான் நடக்கின்றது, இனியாவது இந்த மனிதனுக்குப் புத்தி வருகின்றதா, இல்லையா பார்ப்போம்" என்ற உறுதியான பிடிவாதத்தினால் நின்றிருந்தாள். தன்னைப்பற்றி நீலாம்பாள் கூறியதையும், தன் கணவன் கூறியதையும் நன்றாகக் கவனித்தாள். நகை விஷயமாகக் கணவன் சொல்லியபோது ரங்கமணி திடீரென்று அங்கு வந்தாள்.

இவளுடைய திடும் ப்ரவேசத்தைக் கண்ட எல்லோரும் திடுக்கிட்டு வியந்தார்கள். ரங்கமணி ஆத்திரத்துடன் பேசத் தொடங்கி "நான் எத்தனை தரம் எடுத்துரைத்ததெல்லாம் விழலுக் கிறைத்த நீராகிவிட்டதே! இப்போது உங்கள் கதியும் பவிஷுேம் எவ்விதமிருக்கிறது பார்த்தீர்களா! அழ அழச் சொல்லுவார் தம் மனிதர்; நகைத்துச் சொல்லுவார் பிற மனிதர் என்ற பழமொழி அனுபவத்தில் கண்டீர்களா! இனியாவது உங்கள் ஜென்மத்திற்கு உறைக்குமா! உங்களை நான் நல்வழியில் சொன்னால் திருந்த மாட்டீர்கள். மானம்போகும் வழி வந்து விட்டால் அப்போதாவது உங்கள் குணம் திரும்புமா என்றுதான் நான் எதிர்பார்க்கிறேன். அந்த வழியிலும் ஒரு தரம் மோசம் போய்விட்டது. இப்போது என்ன கதி ஆகுமோ தெரியவில்லை. என்ன அனுபவம் பட்டாலும் அழிந்த புத்தி அழிவதிலேயேதான் நாட்டங் கொள்கிறது" என்று தன் கணவனைப்பார்த்துக் கூறிவிட்டு சொர்ணத்தை நோக்கி "அடி சொரணை கெட்ட சொர்ணம்! நீ இந்த மகா புனிதவதியின் வயிற்றில் எவ்விதம் விஷப் பூண்டாய் உதித்தாயோ தெரியவில்லை! நான் அப்போதிலிருந்து இங்கு கவனித்துக் கொண்டு தானிருக்கிறேன். உன்னுடைய அட்டகாஸத்தை இங்கு அதிகம் காட்டாதே. மொட்டை முண்டையான நீ கட்டு மீறிக் கெட்டுவிட்டதை மறந்து, திட்ட

பணத்தின் மூலமாக சண்டை வராத மனிதர்களே இல்லை. கணவன் மனைவியானாலும்| அந்தப் பணம் மனவருத்தத்தையே உண்டாக்கி விடுகின்றது. பணத்தை எதற்கும் கேளாமலேயே இருந்தால் மனைவி மீது சந்தோஷமே! முக்கியமான விஷயத்திற்குக் கேட்டுவிட்டால் உடனே வருத்தம்தான்.

மாய்ச் சட்டம் பேச வந்து விட்டாயே! உன் ஆணவத்தை நான் அறிவேன். புருஷனை மிரட்டுவதற்கு நீ கெட்டிக்காரிதான். மொட்டை முண்டையைப் போல திட்டுக் கேட்கும் இந்த புருஷனின் பணிவை நீ நன்கு அறிந்து கொண்டு இவ்விதம் ஆடுகிருயா! என் குடும்பத்தையே கெடுத்தாய். என் வயிறெரியப் பொருளைப் பறித்தாய்! நீ என் குடும்பத்தையும் குழந்தைகளையும் அழச் செய்ததற்குக்கூட இந்த ஆயிரம் ரூபாய் ஒரு ஈடே ஆகாது. அதோடு உன்னுடைய பாழும் மோகத்தி லீடுபட்டுவிட்டதினுல்தான் ஆபீஸ் வேலையே நஷ்டமாகி பெருத்த கஷ்டத்தில் கொண்டுவந்து விட்டது. உன்னுல் கெட்ட காரியத்திற்கு நீயே ஈடு செய்யவேண்டியது கடமை என்பதை மறக்காதே. உன் பிறவியில் நீ இது பரியந்தம் செய்து வந்த ஒவ்வொரு அனியாயத்தையும்போல இதிலும் செய்துவிட முடியாது. கடவுளாகவே நியாயத்தை நடத்திவிட்டார். நீ பயமூட்டுவதற்கு நான் பயந்தவளல்ல. இந்த மனிதரைப்போல பயந்தாங் கொள்ளியல்ல. உன்னுடைய சாமார்த்தியத்தைக் காட்டி அந்தப் பணத்தைப் பெறுவதற்கு வழியைச் செய்து கொள்ளலாம். அதனுல் உனக்கு அவமானமோ, எங்களுக்கு நஷ்டமோ பிறகு தெரியவரும். ஆத்திரப் பட்டு அழிந்து விட்டாயே! அதுபோல இந்த விஷயத்திலும் அனியாயமாய் அழிந்து போகாதே! யோசித்துச்செய்! உன்னுடைய பணிவை வாங்குவதற்கு உன் வயிற்றிலுள்ள சிசுவே சாக்ஷி. உன் பணத்திற்கு யாரும் சாக்ஷி இல்லை. மானமிழந்தாய், இன்னும் சந்தி சிரிக்கும் நிலைமைக்கு வராதே! ஜாக்ரதை!" என்று கூறிவிட்டு நீலாம்பாளின் முகத்தைப் பார்த்தாள். அவள் முகம் விசனத்தினுலும் அவமானத்தினுலும் குன்றிவிட்டது. அதை அறிந்து கொண்டதினுல் எதுமே பேசாமல் தன் கணவனை நோக்கி, "போதுமா சன்மானம்! நெஞ்சத்துணிவுடன் இருவரும் செய்த வேலைக்குச் சஞ்சலந்தான் சன்மானம். இனியும் இங்கு வேலை இருக்கிறதோ! வீடு வந்து

ஒரு ஊருக்குப் போவதென்ருல் அப்போது தான் இல்லாத பொல்லாத குழப்பமெல்லாம் ஏற்படுகின்றது. ரயிலேறும் பரியந்தம் கலவரந்தான். ஏறிய பிறகும் நிம்மதி இன்மையே. ஊருக்குச் சென்ற பிறகே மனஅமைதி அங்கு நடக்கும் தடபுடலில் உண்டாகின்றது.

சோலாம். வாருங்கள். போதும் இந்த மட்டும் கிடைத்த:மரியாதை; இனிமேலும் சம்பாதிக்க வேண்டாம்." என்றாள்.

இந்த வார்த்தையைக் கேட்ட சொர்ணம்மாள் ஒன்றுமே பதில் பேசமாட்டாது தியங்கி நின்றுவிட்டாள். க்ருஷ்ணசாமி வாயைத் திறக்காமல் இரண்டாவது பதில் பேசாது எழுந்து விட்டான். ரங்கமணி சொர்ணம்மாளைப் பார்த்து" அடி, துஷ்டே! அன்று நான் தெரிவித்ததற்கு என் மீது நாயைப் போல விழுந்தாயே! இப்போது உன் கதியை நீயே எண்ணிப்பார். என்னை விலக்க உன்னாலுமாகாது. உன் பாட்டனாலுமாகாது. இனிமேல் உலகத்தின் தன்மையைத் தெரிந்துகொள். இப்போது நீ மோசம்போனதை பிறருக்குக் கதைபோல ;எடுத்துரைத்து உன்னைப்போன்ற வேறு விதந்துக்களைக் கெடாதிருக்கும்படி போதித்து வா! இந்த ஜென்மத்தில் இந்த உபகாரமேனும் செய்" என்று கூறிவிட்டுத் தன் கணவனை அழைத்துக்கொண்டு நேரே வீடுவந்து சேர்ந்தாள். தன் மனம் போனவாறெலாம், அவளுக்குத் தோன்றிய படியெல்லாம் தன் கணவனிடம் பேசி நற் புத்தியைப் போதித்தாள்.

கல்லுப் பிள்ளையாரைப் போன்ற க்ருஷ்ணசாமி எதற்கும் வாயைத் திறக்கவே இல்லை. அவன் மனத்தில் இன்னதென்று கூறவியலாத விதம் சஞ்சலம் உண்டாகி விட்டது. நித்திரையும் கொள்ளாது படுத்துப் புரள வாரம்பித்தான். மறுநாள் பொழுது விடிந்ததும் சொர்ணம்மாளின் வீட்டு வாயலில் கதவு பூட்டப்பட்டிருந்தது கண்டு ரங்கமணியும், க்ருஷ்ணசாமியும் திடுக்கிட்டார்கள். தாயும் மகளும் எங்கு சென்றார்கள், எவ்விதம் மறைந்தார்கள் என்பது தெரியாது திகைத்து விட்டார்கள். விதி காப் போனும் மறைந்து விட்டான். (அவர்களைப் பற்றி இனிமேல் நமது

நகைப் பைத்தியம் பிடித்தவர்களுக்கு இரவல் கொடுப்பதற்கும், ஆபத்திற்கு அடகு வைப்பதற்கும் மனம் வராது. அதன்மேல் பற்றுதலே இல்லாதவர்களுக்கு நகையைப் பற்றிச் சற்றும் அக்கரையே இல்லை. மேனியில் தரிப்பதற்கே அவர்கள் முதலில் விரும்புவதில்லை முக்கியமான நகை மங்கள சூத்திரம்; அது தங்கள் ஆயுள் பரியந்தம் அழியாதிருந்தால்அதுவே போதும்.

கதைக்கு அவ்வளவு அவசியமில்லை யாகையினல் நாமும் அம்மட்டுடன் விட்டு மேலே தொடங்குவோம்)

க்ருஷ்ணசாமியின் முகத்தில் துக்கக்களையே தாண்டவமாடத் தொடங்கியது. ரங்கமணி இனியாவது தன் கணவன் நல்வழிப் படுவாஞ, என்ற கவலையே கொண்டிருந்தாள். க்ருஷ்ணசாமி அன்று முதல் சில மாதங்கள் வரையில் தன் வீட்டிலேயே இருந்தான். அவனுக்கு மிகவும் சிநேகிதனுகிய ரங்கராஜா என்பவன் க்ருஷ்ண சாமியிடத்தில் உயிராகவிருந்தான். எனினும் அதிகமான போக்கு வருத்தில்லாமலிருந்தது. ரங்கராஜாவின் மனைவி ஒரு விசேஷத்திற்காக வெளியூருக்குச் சென்றிருக்கையில் ரங்கராஜா வீட்டில் தனியே படுக்கவேண்டுமே என்று க்ருஷ்ணசாமியைத் துணைக்கு அழைத்து வந்து படுக்கச் செய்தான்.

ரங்கராஜனும் கிருஷ்ணசாமியும் பாகாரீ சோரத்தனத்தில் மிகுந்த கைதேறியவர்களாகையினல் இவர்களுடைய விஷயங்கள் ஒருவரை யொருவர் அறிந்ததேயாகும். ரங்கராஜாவின் மனைவி எப்போதும் பிணி வாயில் படுபவளாகையினலும் செல்வ வந்தரின் மகள் ஆகையினலும் சமயல்காரனை வைத்திருந்தான். அந்த சமயல்காரன் பெண்கள் தாகுவேலை செய்வதில் வெகு கெட்டிக்காரன். தன்னுடைய எஜமானின் குணத்தை அறிந்திருப்பதினல் அவனிடம் ஏராளமான பணத்தைப் பறித்துக் கொண்டு அனேகதாசிப் பெண்களையும் கெட்டுப்போன மூதேவிகளையும் கொண்டு வருவது வழக்கம். இத்தகைய சமையல்காரன் தனக்குக் கிடைத்து விட்ட பெரும் பாக்கியத்தை எண்ணி ரங்காராஜன் மட்டற்ற மகிழ்ச்சியை அடைந்து அவனுக்குப் பின்னும் பணத்தைக் கொடுத்து த்ருப்தி செய்துகொண்டே இருந்தான்.

மங்கள சூஸ்திரத்திற்கு மிஞ்சிய நகை மாதர்க்கு இல்லை. அவர்கள் வேறு எந்த நகை அணிந்தாலும் மேல் அழகிற்கும் படாடோபத்திற்கும்தான். மங்கல்யத்தின் மகிமையே மகிமை. அதைத்தான் என்றும் அக்ஷயமாக வளரும்படியாகக் கடவுளை வேண்ட வேண்டும். பெண்களுக்கு முதல் உயிர் மங்கல்யந்தான்.

க்ருஷ்ணசாமி வீட்டிற்கு வந்த காலத்தில் பொன்னம்மாள் என்கிற ஒருத்தியை அழைத்து வந்தான். அவள் மகா கெட்டுப் போன பஜாரியாகையினால் சற்றும் பயமின்றி வீட்டோடு வந்து அங்குள்ள யாவருடனும் சந்தோஷமாயும், சகஜமாயும் இருக்கத் தொடங்கினாள். சிற்றின்பப் பித்து பிடித்த க்ருஷ்ணசாமி அன்று முதல் தன் வீட்டையே மறக்கவாரம்பித்துப் "பழைய குருடீ! கதவைத் திறவடீ!" என்றாய் விட்டான். க்ருஷ்ணசாமியின் செய்கை ரங்கமணிக்கு முற்றும் தெரியாவிடினும் ஏதோ விசேஷத்தினால் தான் வீட்டிற்கு வரவில்லை என்று தாராளமாகத் தெரிந்து கொண்டாள். அந்த வீடோ அன்னியர் வீடு. அவ்வீட்டுப் பெண் பிள்ளையோ ஊரிலில்லை. அவ்விடத்திற்குச் செல்வதற்கும் தைரியமில்லை. ரங்கராஜாவின் குணம் ரங்கமணிக்கு நன்றாகத் தெரியுமாதலால் தனிமையில் செல்வதற்கு மனந்துணிய வில்லை. இன்னிலைமையில் தான் என்ன செய்வதென்ற பெரும் யோசனை உண்டாகி விட்டது. "ஐயோ! நான் ஜென்மம் எடுத்த நாள் முதலாக இவ்விதமே வேதனைப் படவோ பிறந்தேன்" என்று இரவும் பகலும் கதற வாரம்பித்தாள். முன்போலவே குடும்பத்தை அடியோடு மறந்து ரங்கராஜா வீட்டிலேயே க்ருஷ்ணசாமி குடியிருக்க வாரம்பித்தான். எப்போதேனும் வீட்டிற்கு வந்தால் ரங்கராஜா கூடவே வருவான். 5 அல்லது 10 ரூபாய் நோட்டை வீட்டில் குழந்தையின் முன்பு எறிந்துவிட்டு ஓட்டம் பிடிப்பது இவ்விதமே தொழிலாகக் கொண்டான்.

ரங்கராஜன் வீடு பெரிய மாடிவீடு; ஆகையினால் அங்கு தினம் விருந்து போஜனமும், நிலாச்சாப்பாடும் அமர்க்களப் படுகின்றது.

அருமையான பாசுரத்தை எடுத்து இசையுடன்பாடி அர்த்தம் சொல்வதைக் கேட்க மனமுருகுகின்றது. ஒன்றுமே தெரியாத மூடர்களிடத்தில் ஏதேதோ கட்டுக் கதைகளைப் புனைந்து ராவணன் துர்யோதனனின் தந்தை என்றும், கீசகன் மண்டோதரியை எடுத்துச் சென்றான் என்றும் கூறினால் அதையும் உண்மை என்று நம்பி "ஆ! மண்டோதரி துர்யோதனன் பெண்டாட்டி யல்லவா இதை நான் கேட்டிருக்கின்றேன்" என்று எதிர்வாதமும் செய்கிறார்கள். இதைக் கேட்போருக்கு நகைப்பு வயிறு அறுந்து விடுகின்றது.

பொன்னம்மாளுக்கு அப்போது பெருத்த தசைக்காலம் என்றே கூறலாம். ஆடையாபரணங்கள் ஒவ்வொன்றாகச் சேரவாரம்பித்தது. இந்த மூளைகெட்ட தடியர்கள் பல்லிளித்துக் கொண்டு அவளுக்கு சர்வாதிகாரமும் கொடுத்துவிட்டு காலை நீட்டிக் கொண்டு உண்பதும், உல்லாசமாகப் பொழுதைக் கழிப்பதுமாக ஆனார்கள். கிருஷ்ணசாமியும், ரங்கராஜாவும் 3 மாதத்திற்கு லீவு வாங்கிக் கொண்டு வீட்டுடன் அமர்ந்து விட்டார்கள். பொன்னம்மாளுடன் ஒரு மாமா எப்போதும் வீட்டிலேயே தங்கவாரம்பித்தான். பிறர் யாரேனும் பொன்னம்மாளைக் கண்டு யாரென்று கேட்டால் உறவினரென்று கூறிவிடுவது வழக்கம்.

இவ்விதமே இருவரும் உல்லாசமாகப் பொழுதைக் கழிப்பதையே தமக்கு சொர்க்கபோகமாக நினைத்துக்கொண்டு பொன்னம்மாளே தங்களின் உயிர்நிலையாக எண்ணி இருந்தார்கள். கிருஷ்ணசாமியின் மனைவிக்குத்தன் உறவினர் வீட்டு விவாக நிமித்தம் வெளியூருக்குச் செல்ல வேண்டி நேர்ந்தது. அப்போது வீட்டைத் தனியே பூட்டிவைக்கக் கூடாமையினால் க்ருஷ்ணசாமி பொன்னம்மாளை அழைத்துக் கொண்டு தன் வீட்டிற்கு வந்து சேர்ந்தான். கிருஷ்ணசாமியின் வீட்டில் பொன்னி அரச பரிபாலிக்க வாரம்பித்து வெகு தடபுடலாயும் அட்டகாஸத்துடனும் தானே சமயல் செய்து பரிமாறி வெகு சந்தோஷமாக இருந்தாள்.

வெளியூருக்குச் சென்றிருந்தவள் தான் வரும் காலை முன்னால் தெரிக்காமலேயே திடீரென்று வந்து வீதிப்பக்கமாக வீட்டுக்கு வாராமல் புறக்கடைப் பக்கமாக வந்தாள். அப்போது காலை நேரமாதலால் காபியும் பலகாரமும் வைத்துக் கொண்டு க்ருஷ்ணசாமியும் பொன்னியும் வெகு உத்ஸாகத்துடனும் அபாரமான சந்தோஷத்துடனும் உரையாடிக் கொண்டே புசித்துக் கொண்டிருப்பதைச் சற்று தூரத்தில் மறைவான இடத்தில் நின்று ரங்கமணி கவ

ஏதேனும் துர்ச் சொப்பனம் கண்டுவிட்டால் அதை வெளியில் கூறுவதற்கே மனம் நடுங்குகின்றது. நல்லதாகக் கண்டு விடிலோ எல்லோரிடமும் சந்தோஷமாகக் கூறுவதற்கு மனம் தாவுகின்றது.

னித்தாள். அவள் மனம் பற்றி எரிந்து கொதிக்க வாரம்பித்தது. தன் உயிர் உள்ளளவும் இவ்விதமான கர்மங்களையே கண்டு அதனாலேயே மனம் வெந்து சாகும்படியாகக் கடவுள் தன் தலையில் எழுதிவிட்டாரே! எத்தனை தரம் பட்டாலும் புத்தி வராதா! ஐயோ! அனியாயமே!" என்று எண்ணி பேராத்திரமும், கோபமும் கொண்டு பல்லை நெற நெற வென்று கடித்துக் கொண்டே ஒரு குடத்தில் வெறும் தண்ணீரை எடுத்துக் கொண்டு திடீரென்று அவர்கள் முன்னால் தோன்றித் தண்ணீரை கணவன் தலைமீது கொட்டினாள். பின்னர் சாணித் தண்ணீரை பொன்னியின் தலையில் கொட்டித் துடைப்பக் கட்டையை எடுத்துக்கொண்டு நின்றாள். இந்த எதிர்பாராத பெரும் சாகலமான காரியத்தைக் கண்டு திடுக்கிட்டு இருவரும் அப்படியே நடுநடுங்கிப் போனதுடன் தண்ணீரைத் திடீ ரென்று கொட்டியதும்' மூச்சுத் திணற அறைக்க விழித்துக் கொண்டே உட்கார்ந்து விட்டார்கள்.

10-வது அதிகாரம்

கூடும் வேளை—மூட மூளை

அன்பு மயமான காதலர்களின் கனிந்த இல் வாழ்க்கையின் சுவையை ஒற்றுமையற்ற தம்பதிகள் எங்ஙனம் அறியக் கூடும்? சதா சண்டையும், சச்சரவும் கலகமும், அடியும், உதையும், அபாண்ட பழி சுமத்துதலும், கோள் சொல்லிக் குடி கெடுத்தலும்,;ஓயாக் கண்ணீர் சிந்தலுமான தமாஷ் சாகரத்திலேயே தாண்டவம் செய்யும் பேதைகளுக்கு என்

குழந்தைகளின் சுபாவமே ஓர் தனித்தது. தனக்கு ஓர் பழத்தைக் கொடுத்தால் தான் அதைத் தின்றுவிட்டு சும்மா போகாமல் தூங்கிக் கொண்டிருக்கும் மற்ற குழந்தைகளையும் எழுப்பிக் கலகம் செய்து விடுகிறது. எழுந்த குழந்தை பிடிவாதம் செய்யவும் வீட்டிலுள்ள பெரியோர் அதை அடிக்கவும் தடபுடலாகி விடுகின்றது.

னுதற்கும் அரிதான இன்பமென்பதைப் பற்றிச் சிந்திக்கவும் தெரியுமா! மனமொத்த தம்பதிகளைக் காணுந்தோறும் அவர்கள் உள்ளம் குழைந்து உருகுகின்றன. ஆனந்தப் பரவசமான கண்ணீர் ஒருபுறம் சிந்துகின்றது, "கடவுள் நம்மை மட்டும் இவ்விதம் படைக்க வேண்டுமா! நமக்கும் பர்த்தாவையளித்தும் அன்யோன்ய பாவத்தையும், அன்புப்பெருக்கையும் அளிக்காது மறந்து விட்டானே! இவர்களுடைய உல்லாசமான போக்கைக் காண மனம் கரைகடந்த ஆனந்தத்தை யடைகின்றதே! உலகத்தில் இத்தகைய கோலாகலக் களியாட்டமும் இருக்கின்றதா! என்ன ஆச்சரியம்! என் தலையெழுத்து தான் ஒருவிதம் என்றால் எனக்கு ஆதரித்து உதவி புரியும் ஸாவித்ரிக்குமா இன்பமற்றத் துன்ப வாழ்வாகக் காலங்கழிய வேண்டும். சேச்சே! இத்தகைய கொடுமையைச் சகித்துக் கொண்டு உயிர் வாழ்வதைவிட உயிரை விட்டு விடலாமே என்றாலோ, தற்கொலைப் பாபத்தையும், தேசத் தொண்டையும் நினைத்து உயிர் வாழவேண்டி இருக்கிறது. என்ன ஜென்மமெடுத்தேன். என்ன பாபம் செய்தேன்? நம்முடைய நிலைமைக்கு இக்கலியாண வீட்டில் காலையும் வைக்கவேண்டாம். அதைக் கூறினால் சண்டைக்கு வருகிறார்கள். அவர்களின் உபத்திரவத்திற்காக நான் இந்த வீட்டில் வந்திருக்கிறேனே யன்றி என் மனம் நிம்மதி யுற்றிருக்கின்றதா! இல்லை; இல்லை. இங்கு வந்ததற்குப் பலன் யாதெனில் அன்பு மிகுந்த தம்பதிகளின் தரிசனம் கிடைக்கின்றது. அதொன்றுதான் மனத்திற்குச் சந்தோஷமாயிருக்கின்றது. இன்று நம்முடைய வருகையைக் கோரி ஸாவித்திரி காத்திருப்பாள். நான் தான் இங்கு வந்து அகப்பட்டுக்கொண்டேன். என்ன செய்வேன்?" என்று திலோத்தமா தனக்குள் எண்ணி பெருத்த ஆலோசனை செய்தவாறு ஓர் தனித்த விடுதியில் உட்கார்ந்து கொண்டு அங்கு உல்லாசமாகக் களிக்கும் தம்பதிகளைப் பார்த்து மகிழ்ந்தவாறு இருந்தாள்.

குழந்தைகள் ஜனனமாகும் ஆச்சரியமும் ஈச்வரனின் மாயா விலாசமும் கூறத் திறனன்று. அவ்வாறே உயிர் நீங்குவதும் ஓர் வியப்பாக விருக்கிறது. ஓடிக்கொண்டே இருக்கும் மூச்சு திடீரென்று நின்றுவிடுவது, ஹா! என்ன மாயை! என்ன மாயை!

இவளுடைய உறவினர் வீட்டுக் கலியாணமானதால் இவள் கட்டாயம் போகவேண்டியதாகி விட்டது. எனினும் தன்னுடைய கதர் புடவையுடனே வந்தாளேயன்றி, வேறு அன்னிய ஆடையை அகத்திலும் நினைக்கவில்லை. இவளுடைய கதர் உடையைக் கண்டு அங்கு வந்திருப்போரில் சிலர் பரிகஸிப்பது, நகைப்பது; ஏதோ தமக்குத் தோன்றியவாறு பேசிக் கொள்ளல் இவ்விதகேளிக்கைகள் நடந்தன. சிலர் இதை வெகுவாய்க் கொண்டாடிப் பேசினார்கள். இவ்விதமான நிலைமையிலும் திலோத்தமாவின் மனத்தில் நினைவெல்லாம் ஸாவித்ரி இடத்திலேயே சென்றிருந்தது. தான் இவ்விடமிருந்து எப்படி செல்லக்கூடும் என்று யோசித்துக் கொண்டிருக்கையில் அவளுடைய புருஷன் அங்கு வந்து சேர்ந்தான். அவனைக் கண்டதும் திலோத்தமா வெகு வணக்கத்துடன் அவனருகில் சென்று "நாதா! இன்று ஸ்திரீகளின் பொதுக் கூட்டமொன்று நடைபெறப் போகின்றது; அதற்கு நான் வருவதாக வாக்குக் கொடுத்து விட்டேன். ஆகையினால் என்னை ஸாவித்திரி வீட்டிற்குக் கொண்டுபோய் விடவேண்டும்" என்று கேட்டாள்.

அப்போது கல்யாண வீட்டில் வந்திருக்கும் மற்றொருவன் (அவன் வெகு நாட்களாக காங்கிரஸ் தொண்டராக வேலை செய்கிறான்) அங்கு வந்து "அம்மா! தங்களுக்கு நமஸ்காரம். உங்களைப் பார்த்தது முதல் எனக்குள்ள சந்தோஷம் கூறத் திறமன்று. என்னையறியாது மனம் பொங்குகின்றது. உங்களைப் போன்ற கதர் அபிமானமுள்ள மற்றொரு ஸ்திரீ கிடைப்பாளோ என்று நான் இங்கு வந்தது முதல் தேடுகிறேன். கண்ணில் படவில்லை. என் வீட்டு மனிதர்களெல்லாம் வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு நான் வீட்டில் எவ்வளவு சொல்லிய போதிலும் கேட்பதில்லை. என் வார்த்தையை அவர்கள் லக்ஷ்யமும் செய்வதில்லை. நாய், நரி குலைத்தது,

சில குண்டுணிகள் தமக்கு விரோதிகளின் வீட்டுக் குழந்தைகளை மட்டும் ரகஸியமாகக் கூப்பிட்டு "கற்கண்டு தருகிறேன்; பழம் தருகிறேன்" என்று ஆசை காட்டிக் கொடுத்து அவர்கள் வீட்டுச் சங்கதிகளை எல்லாம் வாங்கிக் கொண்டு சண்டைக்கு ஆயுதமான வாயை நன்றாகத் தீட்டக் கிளம்பிவிடுகின்றார்கள்.

ஊளயிடுவதாகவே அவர்களின் தீர்மானம். நான் என் வீட்டை நினைத்து விட்டால் எனக்கு வேறு ஒன்றுமே தோன்றாது மனவருத்தம் பிடித்து விடுகிறது. எந்த புருஷன் கதர் அபிமானமும் தேசாபிமானமும் கொண்டிருக்கிறானோ அவனுடைய மனைவி முதலிய எல்லோரும் நேர் எமனாக வாய்க்கிறார்கள். எந்தத் தருணீமணி இவ்விதமிருக்கிறாளோ அவர்களைச் சேர்ந்தோர் அதற்கு எதிர்மறையாக வேலை செய்கிறார்கள். இவையெல்லாம் நான் எங்கு சென்றாலும் அங்கெல்லாம் கவனித்துக் கொண்டே வருகிறேன். இத்தகைய விதமான வேற்றுமைதான் அதிகமாகவிருக்கிறது. தம்பதிகளே ஒற்றுமையற்று சண்டை யிட்டுக் கொண்டு சாகும் வயிற்றெரிச்சலை நோக்குகையில் தேசமக்களிடை ஒற்றுமை எங்கிருந்து வரும் என்று தோன்றுகின்றது. அத்தகைய கோர சம்பவங்களைக் காணும்போது மனம் என்ன பதறுகின்றது தெரியுமா! உம்: இவையெல்லாம் அவரவர்கள் செய்த கர்மம். அம்மணீ! காலை முதல் உங்களிடம் பேச நினைக்கிறேன்; சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. தயவுசெய்து என்னுடைய வீட்டிற்கு நீங்கள் வந்து என் பெற்றோருடனும், என் மனைவி முதலியவர்களிடமும் தேச விஷயமாயும், கதர் விஷயமாயும் சில வார்த்தைகளைக் கூறி அவர்களை நல் வழிப்படச் செய்ய வேண்டுமாய்க்கேட்டுக் கொள்கிறேன். என் மனப்போக்கை ஒன்றோரும் அறியவில்லை, இல்லாளும் தெரிந்து கொள்ளவில்லை. என்னை அவ்விருவரும் ஓர் அன்னியனாகவே மதித்துத் திட்டிக்கொண்டே வேளைக்கு வேளை சோற்றைப் போடுகின்றார்கள். நான் தண்டத்திற்கு உட்கார்ந்து புசிக்கவில்லை. கதர் ஷாப்பு வைத்திருக்கிறேன். அதில் எனக்கு நஷ்டமில்லாது வேலை நடக்கின்றது. அந்தப் பணத்தை என் பெற்றோரிடமே நான் சேர்ப்பித்து விடுகிறேன். அங்ஙனமிருந்தும் அவர்கள்;என்னை விஷம்;போல எண்ணி விலக்கி இருக்கிறார்கள். அவர்கள் என்னை எவ்விதம் நடத்தியபோதிலும் என்னுடைய மனோ உறுதி மாறாது. இதையவர்களறியவில்லை.

குடிவெறியினால் சிலர் தமது அந்தஸ்து, கௌரவம் எல்லாவற்றையும் மறந்து நடு வீதியில் தன் வைப்பாட்டியின் மீதுள்ள கோபத்தினால் தாறுமாறாகக் கத்திச் சத்தமிட்டுத் திட்டுகிறார்கள். குடி வெறியுடன் காம வெறியும் கலந்துவிட்டதன் பயன் இதுபோலும்.

என்னை அவர்கள் அலக்ஷியம் செய்தால் நான் திருந்திவிடுவேன் என்று அவர்கள் எண்ணி இருக்கிறார்கள். இதனால் என் மனம் புண்பட்டு வருத்த முற்றலையும் என்பதை அவர்கள் அறியும் படியாக நீங்கள் செய்யவேண்டும். தயவு செய்து வாருங்கள்." என்று வேண்டினான்.

இதை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்த திலோத்தமாவின் புருஷன் ஏதும் பதிலே பேசாது அவ்விடம் விட்டுப் போய் விட்டான். அதே சமயம் ஸாவித்ரி திலோத்தமாவைத் தேடிக்கொண்டு வீதியில் வந்தாள். அந்தத் தகவலறிந்த திலோத்தமா சடக்கென்று எழுந்து ஸாவித்திரியுடன் இங்கு தொண்டன் தெரிவித்த விஷயங்களை எடுத்துக் கூறிப் பின் இருவருமாக அத் தொண்டருடன் அவர் வீட்டை அடைந்தார்கள். அங்கு சென்றதும் துரை ராஜா என்கிற அத் தொண்டன் தன் தாயை நோக்கி "அம்மா! அதோ வரும் இரண்டு பெண்மணிகளும் உங்களைப் பார்க்க வேண்டு மென்று வந்திருக்கிறார்கள். அவர்களை வரவேற்று விசாரி." என்றான்.

இந்த வார்த்தையைக் கேட்ட தாயார் வெங்காய வெடி போன்ற குரலோடு, பேசத் தொடங்கி "போ; உனக்கென்ன வேலை. உன்னுடைய தொந்தரவே இது தானே! யாரது வந்தது? எந்த தடிகளையாவது அழைத்துக்கொண்டு வந்து நிறுத்துவதும் என் ப்ராணனை வாங்குவதும் வெகு அழகு. உனக்கு என்றைக்கடா புத்தி வரும்?" என்று சுப்ரபாதம் பாடத் தொடங்கினாள். அப்போது ஸாவித்ரியும் திலாத்தமாவும் வீட்டினுள் நுழைந்து தாழ்வாரத்திலேயே நின்றார்கள். இவர்களை வெகு நேரம் வரையில் வா வென்றும் அவர்கள் அழைக்காது உள்ளேயே பதுங்கி இருந்து பின்னர் வெளியில் வந்து," எங்கே வந்தீர்கள்?" என்று கடு கடுத்த முகத்துடன் கேட்டாள்.

உயிரோடு இருந்த நாள் வரையில் தனது பெற்றோரினாலேயே பல விதமான துன்பத்தை யடைந்து, பிணியினாலும் கஷ்டப்பட்டு, குடும்பத் தொல்லையினாலும் அல்லல்பட்டு மனம் புண்ணாகி வருடக் கணக்காகப் படுக்கையில் கிடந்து கடைசியில் கடவுளிடம் சேர்ந்து விடும்படியாகிறது சிலருக்கு. அவர்கள் சந்தோஷங் கண்ட நாள் உண்டா? இல்லை.

இதை கேட்ட நாரீமணிகளிருவரும் தமக்குள் ஆச்சரிய மடைந்து கொண்டே அவர்களை நன்றாகக் கவனித்தார்கள். அவர்கள் தோற்றத்திலிருந்து தங்களின் வருகையே அவர்களுக்குப் பிடிக்க வில்லை, வெறுக்கின்றார்கள்; போஜனத்திற்கு எங்கே உட்கார்ந்து விடு கிறார்களோ என்று பயப்படுகின்றார்கள் என்பதை நன்றாக உணர்ந்து கொண்டார்கள். அதை வெளியில் காட்டிக் கொள்ளாது அடக்கிக் கொண்டு ஸாவித்திரி பேசத் தொடங்கி "அம்மா! மானு ஷீக ரூபமாக ஸ்ரீமந் நாராயணனைப் பிள்ளையாகப் பெற்ற தசரதர், கௌஸல்யா, வசுதேவர், தேவகி முதலியோர் செய்த தவப்பயனை அளவிட்டுக் கூறச் சாத்யமன்று. அத்தகையவர்களைப் பார்க்க ஆயிரக் கணக்கில் கூட்டம் கூடினார்கள். ஆதி காலத்தில் அதேபோல இக்காலத்தில் தேசத்திற்காகத் தொண்டாற்றும் ஆற்றலுடைய—சிறைவாசத்திற்குச் சிறப்புடன், களிப்புடன் நிற்கும் பெருமையு டைய—புத்திர ரத்தினங்களைப் பெற்றுள்ளவர்களின் பெருமையை வெகு சிறப்பாகவே தேசபக்தர்கள் கொண்டாடுவார்கள். அதே போல உங்கள் குமாரரின் த்யாகத்தையும் தேச பக்தியின் உறு தியையும் கண்டு நாங்கள் களி கொண்டோம். அத்தகைய புத்திரரை ஈன்ற பெரியாராகிய உங்களைத் தரிசிக்கவே நாங்கள் வந்தோம். உங்கள் குமாரர் தேசத்திற்காக ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மாவின் ஜனன பூமிக்கு இரு முறை சென்றிருப்பதாக அறிந்து மிக்க சந்தோஷ மடைகிறோம். அத்தகைய குமாரனைப் பெற்ற நீங்களும், அவரைப் பர்த்தாவாக அடைந்த உங்கள் நாட்டுப் பெண்ணும் கதர் தரிக்காது விதேசி வஸ்திரமணிந்திருப்பது எங்களுக்கு மிக்க வேடிக்கையாக விருக்கிறது. நீங்களா அன்னியத்துணி கட்டுவது? உங்கள் வீட்டில் கண்ணில் படுவதற்கும், அன்னியத்துணி கிடைக்காதென்றல்லவா நாங்கள் எண்ணினோம்!" என்று அவள் சொல்லுவதை அவர்கள் செவியில் வாங்கவே இல்லை. தன் போக்காகப் பேசுவதும் பார்ப்பது மாகவே இருப்பதோடு துரைராஜாவின் தாயார் பேசத் தொடங்கி "ஆமாம் நீங்கள் இந்த கோணி போன்ற கதரைக் கட்டிக்கொண்டு

பள்ளிக்கூடம் திறக்கின்ற நாளையில் குதூகலமாய் நகைத்துக்கொண்டே ஆடிப் பாடி வரும் பிள்ளைகளின் கூட்டத்தின் வைபவம் ஒருபக்கம் ஆநந்தம். தலையைக் குனிந்து, கண்ணீருடன் வரும் பிள்ளைகளின் பரிதாபம் ஒரு பக்கம்.

சுயராஜ்பத்தை வாங்கிக்கொண்டு வந்துவிடப் போகிறீர்கள். ஆணென்றும் பெண்ணென்றும் வித்யாசமில்லாமல் வெள்ளைத் துணியைக் கட்டிக்கொண்டு வீதி வீதியாகச் சுற்றி அலையும் வயிற்றெரிச்சலைத் தாங்கக் கூடவே இல்லை. அநியாய காலத்திற்குத் தான் இவ்விதம் எல்லோரும் ஆடுகிறீர்கள். சுயராஜ்யமாம்: மண்ணாங் கட்டியாம். நீங்கள் இந்த கதர் கட்டித்தான் சுயராஜ்யம் சம்பாதிக்கப் போகிறீர்கள். வருகிறவர்களெல்லாம் இப்படியேயா இருக்க வேண்டும்? என் மகன் செய்யும் கொடுமை வயிற்றெரிச்சலைக் கண்டித்துக் கூறுவதற்கு ஒரு பாவிகளும் இல்லையே என்று என் மனம் உருகுகின்றது என்னுடைய வயிற்றில் பிறந்து இவ்விதம் கேவலம் கெட்டுவிடுவானு என்று அவனை சீர்திருத்தம் செய்யாது நீங்களும் புகழ வந்துவிட்டீர்களே! போதும்! போதும்! அவனை நாங்கள் அருமையாகப் பெற்று வளர்த்து ஊர்மீது விட்டுவிட்டோம். இனி நாங்களும் வரவேண்டுமா! அந்த காலத்தில் பெண்கள் இருந்ததற்கும் இந்த காலத்தில் இருப்பதற்கும் மலைக்கும் மடுவிற்குமாக விருக்கிறது. பெண்கள் வருவதாம் வெளியில்; மறியல் !செய்வதாம். என்ன அக்ரமம். பெண்கள் கடைகளில் சென்று உட்கார்ந்து மறியல் செய்வது என்பது சற்றேனும் அடுக்குமா! முன் காலத்தில் நாங்கள் இந்தத் துணிபுகொண்டு வீதியிலாவது வந்திருப்போமா! காலம் கெட்ட வேடிக்கையை என்னென்றுரைப்பேன். பெண்களெல்லாம் ஒரு குட்டி போட்ட பின்னரும் தாம் பள்ளிக்குச் சென்று படிப்பதும், பந்தாடுவதும், தனித்து உலாவுவதுமான அக்ரமங்கள் வந்து நாட்டைக் கெடுத்துவிட்டனவென்ருல், இப்போது அதைவிட அனியாயமாக பெண்கள் வீடு வீடாகச் செல்வதாம், கடைகளில் மறியல் செய்வதாம். உப்புக் காய்ச்சுவதாம், ஜெயிலுக்குப் போவதாம்; கொடி பிடித்துக்கொண்டு ஊர்கோலம் வருவதாம். என்ன வெட்கக்கேடு இது! ஐயோ! இத்தகைய அக்கிரமங்களை உண்டாக்கிய

வீட்டில் ஒரு விசேஷத்திற்காகச் சற்று ஓடியாடி வேலை செய்து காரியத்தைச் சாகசத்துடன் பூர்த்தி செய்துவிட்ட பின்னர் மூன்று நாட்களுக்கு எழுந்திருக்கக்கூடாது தள்ளிவிடுகின்றது. காரியத்தின் ஆவேசமே காரியத்தை நடத்திவிடுகிறதே யன்றி மனித பலம் ஒன்று மில்லை, இவ்விதமே தேச சேவையில் பாடுபட இறங்கிஞல் ஜெயமாகாமல் போகவே போகாது.

பாவி அந்த காந்திதானும். அவனுக்கு ஏன் இவ்விதம் புத்தி இல்லாது போய்விட்டது. ஊர் முற்றும் அவனைக் கொண்டாடுவதோ கணக்கில்லை. அவன் எந்த விதத்தில் உயர்வு என்று கொண்டாடுகிறார்களோ தெரியவில்லை. திருடனைத் தானே திருடன் கொண்டாடுவான். அதுபோல அவன் ஊரைக் கெடுக்க வந்திருக்கிறான்; அவன் வழியை எல்லோரும் பின்பற்றுவதால் அந்த ஜனங்கள் தான் கொண்டாடுவார்கள். என்ன அநியாய உலகம். தேசமாம். நாடாம். இதென்ன விளையாட்டுப் பேச்சு. காட்டை ராவணன் ஆண்டால் என்ன, ராமன் ஆண்டால் என்ன? நமக்கென்ன வந்தது? இவ்விதம் ஏன் அலைய வேண்டும்?" என்று விஷயம் இன்னதென்று அறியாது வெகு கோபத்துடன் தாறுமாறாகப் பேசினாள்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட இரு பெண்மணிகளின் இரத்தமும் கொதிப்பெடுத்துக்கொண்டது. அவர்களை அறியாத ஆக்ரோஷம் வந்துவிட்டது. "இத்தகைய மூடாத்மாக்களும் இப்பாரத பூமியில் பிறந்திருக்கிறார்களே! ஐயோ! என்ன அநியாயம்!" என்று தமக்குள் மிக்க மனவருத்தமுற்று வாடினார்கள். ஸாவித்திரி மீண்டும் பேசத்தொடங்கி "அம்மா! நாங்கள் இது பரியந்தம் எத்தனையோ விடங்களில் ப்ரஸங்கங்கள் கேட்டிருக்கிறோம். எத்தனையோ விடங்களில் ப்ரஸங்கங்கள் செய்திருக்கிறோம். இன்று உங்கள் திருவாக்கிலிருந்து வந்த ப்ரஸங்கத்தைப் போல நாங்கள் கேட்டதே கிடையாது. வெகு அழகாக இருக்கிறது. இப் பூமியில் பிறந்து அரிய தவமாற்றிப் புண்ணியம் சம்பாதிப்பதை மானிட ஜென்மத்திற்கு நியமித்திருப்பதை அடியோடு மறந்து பாபத்தைச் சுமப்பதற்கே எங்கேனும் அலைவார்களா! எந்த காலத்திலும் எந்த மகான்கள் அவதரித்தாலும் அவர்களின் மகிமையை அறிந்து கொள்ளாத மூடர்கள் எதிர் மறைவில் பேசுவதை சகஜமாகக் கொண்டிருக்கிறார்கள். ஆதிகாலத்தில் உடையவர் மத சித்தாந்தத்

நம்மை ஆவலோடு எதிர்பார்க்கும் மனிதர்களிடத்தான் நமக்கு சற்று பேசவும் நேரம் கிடைக்காது வேலை சரியாய் விடுகிறது. வெட்டி வம்பர்களிடம் அடிக்கடி அகப்பட்டுக்கொண்டு பொழுது வீணாகக் கழிக்கும்படி சகஜமாய் நேரிட்டுவிடுகிறது.

திற்காக ஸ்ரீ வைகுண்டநாதனல் ஆஞ்ஞாபித்தனுப்பப்பட்டு பூலோகத்தில் வந்து ஜனித்து அரிய காரியம் செய்கையில் அவரைத் தூற்றியோரும் அவருக்குத் தீங்கிழைக்கத் துணிந்தோரும் கொஞ்சமா! அதுபோல இன்னும் எத்தனையோ பக்தர்களுக்கெல்லாம் எதிர் மறை நடந்தது போன்று இக் கலியுகத்தில் அவதார புருடனுய்—ஆத்ம சக்தியைத் தனக்கு ஆயுதமாகக் கொண்டவனுய், சத்யமே தனக்குத் துணையாகக் கொண்டவனுய், நாட்டின் விடுதலைக்கு நாட்டே பாணமாகக் கொண்டவனுய், கதரே கதி என்று நம்பி அதையே துணையாகக் கொண்டவனுய், சாந்தமே தன்னுயிராக மதித்துக் கைப்பற்றியவனுய்—எந்த மக்களாலும் போற்றிக் கொண்டாடும்படியான புகழுடையவனுக ஜெனித்துள்ள காந்தி மகாத்மாவையும் இப் பண்டைப் பழக்கம் தாக்கியிருக்கிறதென்பது ஆச்சரியமில்லை. அந்த மகாத்மாவின் மகிமையை அறியாதவர்கள் அவரைத் தூஷிக்கவும் வேண்டாம், பூஷிக்கவும் வேண்டாம் என்று சும்மா விருக்கலாகாதா! அம்மா! அந்தத்தியாக மூர்த்தியின் மகிமையைச் சாமான்யமாய்க் கூறுவதற்குத் திறமில்லை. அதைக் கூறுவதென்றாலும் அதைத் தங்களைப்போன்றவர்கள் கேட்பதற்கும் கேட்டறிவதற்கும் யோக்யதை இல்லை. நீங்கள் சொல்லிய சொற்கள் அவரை யொன்றும் செய்யாது. அத்தனையும் மரத்தின் சாகு மரத்தடியில் விழுவதே போல சொல்லியவர்களையே தாக்கும். உலகத்தில் நன்மை தீமைகளை அறிந்து நடப்பதற்கும் ஆற்றலற்றவர்களுடன் பேசித் தொண்டை வரளுவதை விடப் பேசாமலிருந்து விடலாம் என்று தோன்றுகின்றது. எனினும், அவர்கள் விஷயமறியாவிடினும் மீண்டும் தூஷிக்காதிருக்கும்படியாயும், நாட்டின் நிலைமையை அறிந்துகொள்ளும்படியாயும் செய்வது எங்கள் கடமை யாதலால் நான் உங்களுக்குப் பதில் கூறுகிறேன். எங்களை நீங்கள் நன்றுக அடித்தாலும் நாங்கள் பட்டுக்கொள்வோம். எங்கள் தலைவராகிய காந்தி மகாத்மாவை யாரேனும் ஒரு வார்த்தை சொன்

மண்மீது உயிரோடிருக்கும் வரையில் வெகு விரோதம். திட்டு, வசை, ஒரு சிறு உபகாரமும் செய்யாது அழவைத்து அம்பு குத்துவதுபோலப் பேசுவது. இறந்த பிறகோ பாடி அழுது, புரளுவது. என்ன உபயோகம்? செத்தவன் கண் செந்தாமரைதான்.

ஞல் எங்கள் உயிரே போய்விடும்போலிருக்கிறது. தாயே! உங்களை மிகவும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். மகாத்மாவை விஞ்ஞ தூஷித்துப் பாபத்திற்கு ஆளாகாதீர்கள். உலகத்தின் நிலைமையை நீங்கள் அறியாமலேயே அறிந்த பாவனையாகப் பேசுகிறீர்கள். பெண்கள் படித்துக் கெட்டு விட்டதாகத் திட்டுகிறீர்கள். அத் தகைய படிப்பாகிய உணவை நீங்கள் உட்கொள்ளாததினுல்தான் உங்களுக்கு நன்மை, தீமை, நாட்டின் நிலைமை, முதலிய எதுவுமே தெரியாத கபோதிகளாகப் பேசுகின்றீர்கள். பெண்கள் படிப்பதாவது, வெளியில் வருவதாவது என்ற கர்நாடக வார்த்தையை நீங்கள் உபயோகிப்பது இந்த நிலைமைக்குப் பொருத்தமாகுமா! முற்காலத் தில் தேசத்திற்கு இத்தகைய நெருக்கடியான சமயம் வந்ததா! இல்லை. அப்போது ஆண்கள் சம்பாதிக்கவும் பெண்கள் அதைக் கொண்டு குடும்பம் நடத்தவும் சரியாக விருந்தது. அக் காலத்தின் தன்மை வேறு. அக்காலத்திலுங்கூட தமது சொந்த காரியத்திற்கு எந்தப் பெண்களாவது வெளியில் வராமல் இருந்ததாகத் தெரிய வில்லை. ஆதிகாலத்தில் ஒவ்வொரு ஸ்திரீரத்தினமும் ஒவ் வொரு காரணார்த்தத்தைக் கொண்டு; எத்தனையோ வேலை செய் திருக்கிருள். சூடிக்கொடுத்த சுடர்க் கொடியாள் என்கிற ஆண் டாள் உலகமளந்த உத்தமனுகிய ஸ்ரீமந் நாராயணனே தனக்குப் பதியாகக் கிடைக்க வேண்டுமென்று தன் சேடி மார்களைக் கூட்டிக் கொண்டு ஸ்ரீ வில்லிபுத்தூரையே ஆய்ப்பாடியாகக் கொண்டு தானும் தன் சேடிமார்களுமே கோபிகா ஸ்த்ரீகளாக எண்ணி, எம்பெரு மானையே ஸ்ரீ க்ருஷ்ணனுகத் துதித்து மார்கழி மதியில் நீராடி, நோன்பு நூற்று, அதன் பயனுக நாராயணனைப் பதியாக அடைய வில்லையா? அதுபோல இக்காலத்தில் இந்தியா பதியை அடைவ தற்கு ஆண்களும் பெண்களும் சம மாகத் தொண்டாற்றி எல்லா மக்களுக்கும் நன்மையை,—அடிமையை நீக்கிச் சுதந்திரத்தை— அளிப்பதற்குப் பாடுபடுவது ஈனமா!

அப்பனே! ஸாரதே! உன் அடிமலர் போற்றிச் செய்யும்
ஒப்பிலா பக்தி யறியேன் உள்ளத்தே உனை நினைப்பின்
தப்பியே பாழும் நெஞ்சம், தவறியே அலைகுதய்யோ!
அப்புறம் அகலா வண்ணம் அருள்செய வேண்டுகின்றேன்.

தன் வீட்டு வேலை செய்வதை யாரேனும் ஈனமாக நினைக்கிறார்களா! தங்கள் குழந்தைகள் அசங்கியம் செய்து விட்டால், தமது சொந்த மனிதர்கள் சிக்கினால் வாந்தி முதலியன செய்து விட்டால், அதை எடுப்பதற்கு யாரேனும் அருவருப்பார்களா? தன் வீட்டில் 10 மனிதர்கள் தன் குடும்பத்தினராகவே இருக்கையில் அவர்களுக்குச் செய்வதற்குச் சலிப்பார்களா! தன் வீட்டில் சாணமிட்டு எச்சிலிடவும், மெழுகவும், பெருக்கவும், சாக்கடைக் கழுவவும் யாரேனும் அசங்கியம் அடைகிறார்களா! தன் கர்ப்பத்தில் சிசுவைத் தாங்குவது பாரமாயும், தன் தோள்மீது குழந்தைகளைத் தாங்குவது சிரமமாயும் பெற்ற தாயார் நினைப்பாளா! தன் குழந்தைக்கோ, கணவனுக்கோ, தனக்கு வேண்டிய யாருக்கோ ஆபத்தான நிலைமை வந்து விட்டதென்றால் வீட்டை விட்டு வெளியேறலாகாதென்று வாளா விருப்பார்களா! பத்துத் தெருவுக்கு அப்பால் வைத்தியனிருந்தாலும் அங்கு ஓடி அவனை அழைத்து வந்து பார்ப்பார்களல்லவா! அப்போது வெளிச் சென்றதும், ஆடவனை அழைத்து வருவதும் குற்றமாகத் தோன்றுமா! தன் வீடு பற்றி எரிகின்றதென்றால் அலைந்து ஓடி ஆடித் தண்ணீர் கொண்டு வந்து கொட்டி அணைக்க முயல்வார்களேயன்றி, நான் வெளியில் போக மாட்டேன் என்று சும்மாவிருப்பார்களா! அடுத்த தெருவில் தன் குழந்தை வண்டியில் அகப்பட்டுக் கொண்டதென்றதைக் கேட்ட தாயார் அடித்துக் கொண்டு ஓடாமலிருப்பாளா! நம்முடைய வீட்டையும் வீட்டுப் பணிகளையும், நம் நாட்டையும், நாட்டின் நிலையையும் கவனித்தால் இரண்டும் ஒன்றாகத் தோன்றுகின்றவர்களுக்கு இதில் வித்யாசமாவது, விகல்பமாவது, இழிவாவது ஒரு போதும் தோன்றாது. ஒரு ஆபத்து என்றால் அயலாருக்குக் கூட உதவி செய்ய வேண்டுவது மனிதரின் கடமையாக விருக்க எல்லோருக்கும் பொது வேலையாகிய தேசத்தின் தொண்டைப் பற்றி இழிவு கூற முடியுமா? கடைக்குச் செல்வதாம்; மறியல் செய்வ

கோயிலில் சென்று உன்னைக் கோரியே நிற்குங் காலை
வாயிலார் துதிகள் பாட வகையிலா மூடமானேன்
வாயிலா மாக்கள் போன்று வையக மீது நின்றேன்
ஆயர்கோ! அமலா! வென்னை ஆட்கொண்டருளுவாயே.

தாம் என்கிறீர்களே! அம்மா! சற்று யோசித்துக் கவனமாகக் கேளுங்கள். நமது வீட்டில் சுபமோ, அசுபமோ வருங்காலத்தில் ஜவுளிக்கடைக்குச் சென்று புடவை, வேஷ்டி முதலியவைகளை வாங்குவதில்லையா! அதற்கு என்ன செய்கிறார்கள். கடைக்குள் புகுந்து அட்டகாசமாக உட்கார்ந்து கடையிலுள்ள புடவைகளை எல்லாம் புரட்டிப் புரட்டி, நலுக்கிக் கசக்கிப் பார்த்து அதை விலை பேசி முடிப்பதற்கு நாள் முற்றுங்கூட சிலருக்கு ஆய்விடுகின்றது.

விலை பேரத்திலோ, நாராயணா! கேட்கவே வேண்டாம். அந்தக் கடைக்காரன் தாலியே அறுந்து விடும். ஒரு ரவிக்கைத் துணியில் அரையணா குறைப்பதற்காக அவனோடு அல்பத்தனமாக ஒரு வாதம் செய்வது. வாதத்தில் ஒன்றிரண்டு உண்டா?

1. "செட்டியாரே! உம்முடைய கடையைத் தவிர நாங்கள் வேறு எங்கேனும் வாங்குவதுண்டா! அதென்னவோ உங்கள் கடைப் புடவைகள் தாம் எங்களுக்குப் பிடிக்கின்றன. உங்கள் கடையில் வழக்கமாக வாங்கும் எங்களுக்கு விலையை இப்படிக் கூறலாமா? நாங்கள் மட்டுமா வாங்குகின்றோம். எத்தனை பேருக்கு நாங்கள் சிபார்சு செய்திருக்கிறோம். அதனால் உங்களுக்கு எவ்வளவு லாபம் கிடைத்திருக்கும். இன்னும் நாங்கள் எத்தனை வாங்க வேண்டும், எவ்வளவு பெயருக்கு சிபார்சு செய்ய வேண்டும்? இவைகளை எல்லாம் யோசித்துச் சற்று விலையைக் குறைக்க வேண்டும்" என்றது ஒன்று.

2. "என்ன செட்டியாரவாள்! நாங்களிருப்பது அயலூர். அங்கு உங்கள் கடைச் சரக்கைப் பற்றிக் கேள்வியுற்று இவ்விடத்திலேயே வாங்க வேண்டுமென்று நாட்டங் கொண்டு வந்தோம். அயலூரிலிருந்து வந்த எங்களுக்குமா இத்தனை விலை. நாங்கள் அடிக்கடி வாங்குவதோடு எங்கள் ஊரிலேயே உங்களுக்கு ஆயிரக்

தீய விம்மனப் பேய்தன்னைத் திருத்தியே ஆளுந்திறனை
நேயனே! அளிக்காவிடிலோ நின்புகழ்க்கென்னே வேற்றம்
தூயநின் பாத தூளி அகளற வென் மனத்தே
நயவே வந்துன் சேவை இன்பமாய்த் தந்தருள்வாய்.

கணக்கில் வியாபாரமாகும்படிக்குச் செய்வேன். எனக்கு விலை சகாயமாகக் கொடும்" என்பது ஒன்று.

3. "செட்டியாரே! நீங்கள் மிகுந்த கைராசிக்காரர் என்று கேள்விப்பட்டேன். எனக்கிருப்பது ஒரே குழந்தை. அதற்கு விவாகத்திற்கு ஜவுளி வாங்க வந்தேன். உங்கள் மனப் பூர்வமான திருப்தியோடு என் குழந்தைக்குக் கொடுக்க வேண்டும்" என்று அவனைத் தோத்திரம் செய்வதொன்று.

4. "செட்டியார்! எங்கள் நிலைமையை நீங்களறிய மாட்டீர்களா! ஏதோ கல்யாணம் நடக்க வேண்டுமென்று ஜவுளி வாங்க வந்தேன். எங்களுக்கு நீங்கள் சகாயமாகக் கொடுத்தால் கன்னிகாதானமே செய்து வைத்த புண்ணியம் உங்களுக்கு உண்டு. நீங்கள் எத்தனையோ தான தருமம் செய்யும் தருமகர்த்தாக்கள். உங்களுக்கு இதொரு பெருத்த கஷ்டமில்லை. கன்யாப் பெண்ணின் மனங் குளிர்ந்தால் உங்கள் வம்சமே குளிரும்" என்று கெஞ்சுவது ஒன்று.

5. "செட்டியாரே! இந்த ஊரில் கடை இல்லை என்று பார்த்தீர்களா? எத்தனையோ கிடக்கின்றன. அங்கு இன்னும் விலை வெகு சரசமாகவிருக்கிறது. அந்த விடங்களிலெல்லாம் எனக்கு வாங்கத் தெரியாதா என்ன? என்னவோ நீங்களும் ஒரு வியாபாரி; உங்களுக்கும் விலையாக வேண்டும். அதோடு வெகு நாட்களாகத் தெரிந்தவராக இருக்கிறீர் என்று பார்த்தால் தடபுடல் செய்கிறீரே! என்ன ஐயா இது! சரியான விலைக்குக் கொடுத்தால் கொடும். இல்லைபேல் வேறு கடைக்குச் செல்கிறோம். வீணாக அவனுக்கு லாபம் வருவதில் என்ன உபயோகம். ஏதோ ஒரு விலையைப் போட்டுக் கொடும். பணத்தை நீரே வாங்கிக் கொள்ளும். நமக்குத் தெரிந்தவர்கள் நமது பணத்தைச் சாப்பிட்டால் நமக்கு திருப்தி. பிறத்தியான் கொண்டு போவதில் என்ன உபயோகம்?" என்பதொன்று.

பாழும் உலகினிற் பிறந்து பாவமே செய்தேன் புனிதர்
வாழும் வழியைச் சேரும் வகையறியேனிவ் வையம்
ஏழும் திருவயிற்றில் மறைத்த இறைவா என்னைக் காத்து
சூழும் வினைகள் கொய்யச் சுதந்திரன் நீயே யன்றோ!

6. "செட்டியாரே! இப்போது என்னவோ துணிகள், பட்டுக்கள் எல்லாம் விலை குறைந்துவிட்டன. கதர்தான் தலைதூக்கி இருக்கிறது. அதற்குத்தான் இப்போது மகிமை. அதையே வாங்க வேண்டுமென்பதுதான் எண்ணம். சம்மந்தி வீட்டார் கோபிப்பார்களென்ற பயத்தினால் இந்தத் துணியை வாங்க வந்தேன். அதோடு குழந்தையும் என்னவோ பட்டுப் புடவை வேண்டுமென்று ஆசைப்படுகிறது. அதற்காக வாங்க வந்தேனே யல்லாது இந்தப் புடவைமீது நான் மோகங் கொண்டு வரவில்லை. நீங்களும் சுதேசி, கதர் முதலியன விற்க ஏற்பாடு செய்யுங்கள்; அதை வாங்குவதற்கு நான் என் சினேகிதர்களுக்கெல்லாம் சொல்லி நல்ல வியாபாரமாகும் படிச் செய்கிறேன். முன்னே பின்னே யோசித்துக்கொடும்." என்று தன் காரியம் ஆவதற்குக் கதரையும் துணைகொண்டு சற்று தோத்திரம் செய்வது ஒன்று.

7. "செட்டியாரே! நன்றாக யோசித்துப் பாரும். நான் என்றைக்காவது கடனாக ஒரு துணியேனும் வாங்கியது உண்டா! எல்லாம் ரொக்க பாபத்தல்லவா! என் பணம் முன்பணமாகையினால் எனக்கு நீர் கட்டாயம் குறைத்துத் தான் கொடுக்கவேண்டும்" என்பதொன்று.

8. "செட்டியாரே! இந்தப் பெரியவர் யார் தெரியுமா! கற்பனைக் கோட்டை ஜமீந்தாரிணி. இவர் உம்முடைய கடைக்கு வந்தது உமது புண்ணியவசந்தான். ஜவுளி வேண்டுமென்று என்னிடம் கேட்டார்; நான் இவரை இங்கு சிபார்சு செய்து அழைத்து வந்தேன். இவர் இனி உம்முடைய கடையை விட்டு வெளியில் வாங்கவே மாட்டார்கள். ஜமீந்தாரிணி யாகையினால் எத்தனை ஆயிரக் கணக்கில் வாங்குவார்கள் என்று பாருங்கள். நம்ம பேருக்கு ஹானி வராது. நல்ல சரக்காயும் சரசமான விலைக்கும் கொடும்." என்று

ஆழும் அன்பக் கடலில் ஆழ்ந்திடா தகலச் செய்தன்
ஈழும் மண்ணாய்ச் சிலையாய்க் கிடந்திட அருள் செய் அன்றேல்
தாழும் நீர் வாழ்வகையில் தாமரைத் தடாகத்திருந்து
வாழும் அருளேனு செய்யாய் வல்லோர் வாக்கினில் வாழும் நீயே!

ஒரு பணக்காரச் சீமாட்டியைக் காட்டி ஜமீன்தாரினி என்று பொய்யைக்கூறி, ஏமாற்றிவிடுவது ஒன்று.

9. கடையிலுள்ள புடவைகளை எல்லாம் கிளறிப் பார்ப்பதும் விலை கேட்பதும் அதனால் வாதம் செய்வதும் பிறகு "எனக்கு வேண்டிய கலர் இல்லை. அது வந்த உடனே சொல்லி யனுப்பும்; வருகிறேன்" என்று டம்பாச்சாரி பேரம் செய்வது ஒன்று.

10. பத்து கடைகளில் சுற்றி அலைந்து ஒவ்வொரு கடையிலும் துணிகளைக் கிளறிப் பார்ப்பதும், பேரம் பேசுவதும் வாங்காது அவனிடம் திட்டு வாங்கிக்கொண்டு செல்வதும் கடைசியில் முதலில் பார்த்த கடையிலேயே சென்று "என்ன செட்டியார்! நான் எத்தனை கடைக்குச் சென்றாலும் என் பணம் அவர்கள் கையில் போகப் பிரியமில்லை. உங்கள் கடையிலேயே வாங்கும்படி கடவுள் கிருபை போல இருக்கிறது. ஆகையினால் ஏதோ இதில் நமக்குள் தெய்வ சங்கல்பம் இருக்கிறது. வெறுமனே பேரம் பேசாது கொடும். நேரமாகிறது." என்று விலை குறைவுக்காக வீதிதோறும் சுற்றிப் பின் இவ்விதம் கெஞ்சுவது ஒன்று.

இவ்விதமாக ஜவுளிக்கடையின் விநோதங்களும் அங்கு நடக்கும் சம்பாஷணைகளின் அற்புதங்களும், கடைக்காரரிடமும் இன்னும் அங்கு வாங்க வருவோர்களிடமும் அட்டகாஸம் செய்து பேசும் அமர்க்களமும் அடாடாடா! ஏட்டில் எழுதியும், வாயினால் பேசியும் அடங்குமா! அடங்கவே அடங்காது. ஏதோ உங்களுக்குத் தெரியும்பொருட்டு இரண்டொன்றைக் கூறுவேன். இந்த பேரம் பேசும் பெண்கள் சின்னக் குழந்தைகளையும் எடுத்துக்கொண்டு போய்விட்டாலோ! ராமா! ராமா! அந்த ஸினிமாக் காட்சியை, வெட்கக் கேட்டைக் கூறவே சாத்யமன்று. இவைகளெல்லாம் என்னம்மா! அதெல்லாம் கடைகளல்லவா! அங்குள்ளவர்கள் கடைக்

அத்திியைக் காத்த மகிமை அகிலமே அறியும் பின்னும்
சிற்றன்னை உரையால் சிறுவன் செய்தவம் ஏற்றாய் அரக்கன்
உத்தம மகனுக்காக உக்கிரசிம்மமாக உதித்தனை
பத்தினி பாஞ்சாலிக்காய்ப் பார்தனிற் றேர் கொண்டேர்ந்தாய்

காரர்களல்லவா? வருவோர் போவோர் ஆண்களல்லவா! காலை நீட்டிக்கொண்டும் மடக்கிக்கொண்டும் கடையில் உட்காருவது வெகு ஒழுங்கான முறைபோ! அத்தனை விதமான பஞ்சப் பாடல்களைப் பாடிக் கடைக்காரனிடம் வாதம் செய்வதில் தேசத்திற்கும் பொது மக்களுக்கும் ஏதேனும் கடுகளவு லாபமுண்டா! இல்லை. தனது சுய நலத்திற்குத் தானே இத்தனை பாடுகளும் படுகிறார்கள்.

இத்தனை நேரம் சொல்லியது போல மறியல் செய்யும் வேலையில் இருக்கிறதா! அதில் யாருடனேனும் வாதம் செய்ய வேண்டுமா! பேரம் பேசவேண்டுமா! கெஞ்சிக் கூத்தாட வேண்டுமா! அல்லது சண்டை யிட்டு சச்சரவு செய்யவேண்டுமா! புளுகு மூட்டையை அவிழ்க்கவேண்டுமா! ஒன்றுமில்லையே? சுய நலமற்று தேச மக்களனைவரின் நன்மைக்கும் தேச விடுதலைக்குமான உபகாரத்தைக் கோரிக் கடையின் வாயிலில் கடவுள்மீது ஆணையான நம்பிக்கையோடு நின்றிருப்பதையும், கடையில் துணி வாங்க வருவோரைக் கை குவித்து "அன்னியத் துணியை வாங்காதீர்கள்" என்று வேண்டிக் கொள்வதையும் தவிர வேறு வேலை யுண்டா! முன்னே எடுத்துக் கூறிய ஊழலைப் போன்று இதில் ஏதேனும் உண்டா! தேசத்திற்குப் புனிதமான தொண்டாற்றுவதில் குற்றம் கண்டுபிடித்து ஏன் குறை கூறுகிறீர்கள்?

"கண்டவர்களும் வாங்க வருகிறார்கள். அவர்களோடு பேசலாமா?" என்பீர்கள். அதற்கும் கூறுகிறேன். நமதுவீட்டுக் கலியாணத்திற்காக எத்தனை பேர்கள் வருகிறார்கள். எத்தனை வேலைக்காரன், எத்தனை சமபல்காரன், எத்தனை வளையல்காரன், எத்தனை பால்காரன், தயிர்க்காரன், காய்கறிக்காரன், மேளக்காரன், புஷ்பக்காரன், பந்தல் படிக்காரன், விளக்குக் காரன், வீதியில் விற்கும் சில்குக்காரன், பழக்காரன், எத்தனை வண்டிக்காரன், மகாரங் கட்டுகிறவர்கள் எத்தனை. சந்தனம் அரைப்பவர்கள் எத்தனை, இவர்

உத்தம பத்தர்க்காக ஒப்பிலாத் தூது சென்றாய்
உத்தம நண்பன் வறுமை ஒளித்திடச் செல்வமளித்தாய்
உத்தம அக்ரூரர்க்கு உகந்துடன் காட்சி தந்தாய்
உத்தமச் சோதை மைந்தா! யென்னை உபேக்ஷித்தல் முறையோ.

களிடம் எல்லாம் தாராளமாகப் பேசுவதில்லையா! தினப்படியிலேயே நாம் இத்தனை மனிதருடனும் சகஜமாகப் பேசுவதில்லையா! தபால்காரன், வைத்தியன், மந்திரவாதி, பிச்சைக்காரன் முதலியவர்களிடம் பேசுவதில்லையா! மேல் குறித்தவர்கள் எல்லாம் நமது உடன்பிறந்தவர்களா, அல்லது பெற்றவர்களா! அவர்கள் மட்டும் ஆண் பிள்ளைகளல்லவா? அதற்குமட்டும் அந்தக் குற்றமில்லையா! நம்முடைய தேச முன்னேற்றத்தை முக்கியமான ஓர் புனிதமான காரியமாக உத்தேசித்து ஆயிரக் கணக்கில் மக்கள் ஒன்று கூடிச் செய்யும் இந்த மறியல் வேலையை மட்டும் நீங்கள் யோசிக்காமல் குறை கூறிவிடுவது கேவலம் உங்கள் முட்டாள்தனத்தை எடுத்துக் காட்டுகின்றதே யன்றி வேறில்லை. விஷயத்தை நன்கறியாமல் வீணே வார்த்தையாடிவிட்டால் அதில் என்ன பயன்?

தேசம் என்பதே இன்னதென்றறியாதவர்கள் பேசாமலிருப்பது உத்தமம். அன்றி பிறரையேனும் ஆசையுடன் கேட்டுத் தெரிந்துகொள்வது உசிதம். இரண்டுமின்றி வாயும் மனமும் சென்றவாறு பேசுவதில் பலனே இல்லை. நாங்கள் செய்யும் வேலையைத் தூஷிக்கும் நீங்களும் இத்தேசத்தினர்தான்; அன்னியர் அல்ல. அந்த முறையை நீங்களும் ஒரு நாளைக்குக் கைப்பற்றப் போகின்றவர்கள்தான் என்பது எனக்குக் கண்ட அனுபவம். உங்கள் வீட்டின் அதிகாரத்தை நீங்கள் செய்தால் உங்கள் மனம் சந்தோஷமடையுமா! நான் செய்தால் சந்தோஷமடையுமா! யோசித்துப் பாருங்கள். அதேபோல நமது தேசத்தில் நமக்குச் சுதந்தரம் வேண்டும் என்று நாம் பாடுபடுகிறோமே யன்றி வேறு இல்லை. இப்போது தேசம் இன்னதென்று தெரிந்ததா! எங்களுக்கு இன்று எத்தனையோ வேலை இருக்கிறது. அவைகளை எல்லாம் கெடுத்துக் கொண்டு நான் இங்கு என் பொழுதை எல்லாம் போக்கிவிட்டேன். எனக்கு பொழுதைப்பற்றிக் கவலை இல்லை. இனியாவது நீங்கள் விஷயம் தெரிந்துகொண்டு வீணாக வசை கூறாதிருந்தால் போதும்.

விவாகத்திற்கு அழைக்கவரும் சிலர் "நீங்கள் வெகு நன்றாகப் பாடுவீர்களாம் அதைக் கேட்க எல்லோரும் ஆவலுள்ளவர்களாகவிருக்கின்றார்கள். அதற்காகவே அழைக்க வந்தேன். சட்டாயம் பாடுவதற்கு வரவேண்டும்" என்று அழைக்கின்றார்கள். இதுவென்ன சமத்கார அழைப்போ தெரியவில்லை,

நாங்கள் இந்த இயக்கத்தில் வெகு நாட்களாக ஈடுபட்டு வருகிறோம். இப்போது நடந்த உப்புச் சத்தியாக்ரகத்தில் நாங்கள் ஜெயிலுக்குப் போவதற்கும் தயாராக விருந்தோம். எங்களுக்கு இன்னும் அந்த பாக்யம் கிடைக்கவில்லையே என்று வருத்தமே அடைகிறோம். அன்னிய ஆடை மறியலுக்கு நாங்கள் தயாராகச் செல்கிறோம். கள்ளுக் கடை மறியல்கூடச் செய்ய சித்தமா யிருக்கிறோம். ஏனெனில் என் புருஷனே பாழுங் குடியினல் அனியாயமாகிறார். அந்தப் படுகுழியிலிருந்து அவரை நான் மீட்பதற்கே இதைச் செய்யப் போகிறேன். அம்மா! நேரமாகிவிட்டது. நீங்கள் இவ்விதம் கதர் கட்டாதிருப்பது அழகல்ல. தேசம் சுபிக்ஷமாக விருந்தால் தான் நமக்கு மங்களமும் க்ஷேமமும் உண்டு. தாயார் திடமாயும் நோயற்றும் தனது சொந்த பால் நிறையப் பெற்றவளாயும் இருந்தாலல்லவோ, குழந்தை செழிப்பாய் வியாதி யற்றுகுண்டோதானுக வளரும். தாயே நோயாளுல் சேய்க்குச் சுகமேது? அதுபோல நாமே அடிமையாகி இருக்கையில் நமக்கேது சுகம்? நன்ருக விஷயத்தை உங்கள் மகனிடம் கேட்டுக் தெரிந்து கொள்ளுங்கள்.'' என்று ஆத்திரத்துடனும் உண்மையான உணர்ச்சியுடனும் கூறிப் பின் தொண்டனின் மனைவியை நோக்கி,

"அம்மா! கொண்ட கணவன் சொல்கிறபடியே மனைவி கேட்டு அவனுக்கு மன உவப்பாக நடக்கவேண்டுவதுதான் பெண்ணின் கடமையே யன்றி கணவன் சொல்லைக் கேளாது, அவன் மனப்படி நடக்காது இருப்பது அழகேயல்ல. கணவன் இந்த இயக்கத்தில் எத்தனையோ மும்முறமாக வேலை செய்து ஜெயிலுக்கும் சென்று வந்திருக்கையில் மனைவி சில்குப் புடவையும், சிமைக் கமலமும் சொகுசாக அணிந்து கொண்டு ஷோக்காக மினுக்குவதா அழகு! மனைவி செய்துகொள்ளும் அலங்காரத்தைக் கண்டு களிக்கவேண்டியவன் புருஷன். அவன் எந்த விதம் விரும்புகி

தடபுடலாக திடீரென்று மழைவந்து விடுகின்றது. வெளிப் புறமுள்ள துணிமணிகளை எடுத்துக் கொண்டு ஜன்னல்களைச் சாற்றுவதற்குள் நன்ருக நனைத்து விடுகின்றது. வேலைமுடிந்ததும் மழையும் நின்று விடுகின்றது. இது போலவே சிலர் வார்த்தைகளின் தடபுடல் உபயோகமின்றி கெட்டுவிடுகின்றது.

றானே அதை விடுத்து அவன் மனத்தைப் புண்படச் செய்து எதிர் மாறாக அலங்காரம் செய்துகொள்வதில் என்ன லாபம். தனக்காகிலும் சந்தோஷ முண்டா! மனைவியால் புருஷனுக்கும், புருஷனால் மனைவிக்கும் சந்தோஷமும் சுகமுமே யன்றி இருவரும் முறைத்துக் கொண்டு எந்த அலங்காரம் செய்துகொண்டாலும் அதற்கு மகிமை உண்டா! கணவனால் பெண்களுக்கு மங்களகரம். அவன் மனம் போலச் சென்றால் இகத்திற்கும், பரத்திற்கும் சாதகமே யன்றி தனித்த, பிடிவாதமான வாழ்க்கையில் பார்ப்பவர்களுக்கும் பரிகாஸம்; கணவன் மனமும் முறிந்து அதனால் பேசாமல் விரோத பாவமாகி விடுகிறான். கடவுளுக்கும் இந்த நிலைமை பிடிக்காது. உன் மனத்திற்கும் இன்பமில்லை. ஒருவிதத்திலும் நன்மை இல்லாத—உபகார மில்லாத—காரியத்தை மனமறிந்துச் செய்யலாகுமா! எதற்கும் கணவனுக்கு நிழல் போல மனைவி நடக்கவேண்டும் என்று எத்தனை நீதி சாஸ்திரங்கள் முறை யிடுகின்றன. எத்தனை பெரியாரின் நூல்கள் பறை சாற்றுகின்றன. “இயம் சீதா மமசுதா சகதர்ம சரித என்று ஜனக மகாராஜா ஸ்ரீ ராமபிரானிடத்தில் தனது குமாரத்தியான லோகமாதா வைதேகியை ஒப்புவித்தாராம். சகதர்ம சரித; எந்த விதத்திற்கும் பாபத்திற்கும் புண்ணியத்திற்கும் மனைவி பங்குதாரியாவள். கணவன் அக்ரமம் செய்தாலும் அதிலிருந்து அவனைத் திருத்துவது பெண்களின் கடமை. கணவனின் இஷ்டத்திற்கு விரோதமாக எந்த காரியத்தைச் செய்தாலும் அது ஒருவிதமான சிறப்பும் கொள்ளாது.

ஒரு நல்ல காரியம் செய்வதற்கு பர்த்தாவுக்கு இஷ்ட மிராவிடினும் அவரை நல்வழியில் கூறி அக்காரியத்தில் ஈடுபடச் செய்ய வேண்டும். என் புருஷருக்கு இந்த தேச உணர்ச்சி இல்லாமல் போகவில்லை. அவர் மகா குடிகாரர். குடிவெறியில் அவர் உங்களைப் போலவே கத்துவார்; ஆனால் அது தெளிந்ததும் அதைப் பற்றி வருத்தப்படுவார். அவருடைய சகாக்களும் அவருக்கு விரோத

உடம்பு வணங்கி வேலைசெய்ய உட்காரும் நேரத்தில் தான் சந்தேகங்களும், வேண்டிய சாமான் கிடைக்காத அலைச்சலும் வந்து சேருகின்றன. அதனால் வேலை தடைபட்டு வருத்தத்தை யுண்டாக்கி விடுகின்றது.

மாகச் சேர்ந்திருப்பதால் அவரை அடியோடு பாழாக்குகிறார்கள். அவரையும் இக்குடிப் பழக்கத்திலிருந்து விலக்கி தேசத்திற்கு ஒத்துழைக்கும்படிக்கு நான் செய்து வருகிறேன். அவருடைய சகபாடிகளை விட்டு அவரைப் பிரிப்பதற்கே நான் முயற்சிக்கின்றேன். என் புருஷன் கட்டுவதெல்லாம் கதர் தான். குடிவெறி இல்லாமலிருக்கையில், தானே பொதுக் கூட்டத்து பிரசங்கங்களுக்கு அழைத்துச் செல்கிறார். குடித்துவிட்டால் "காந்தியாம்; பூந்தியாம்" என்று ஆடுகிறார். அவரை இந்த வழியிலிருந்து நல்வழி சேர்க்கவே நான் இரவு பகலாகப் பாடுபடுகிறேன். வீட்டிலிருக்கும் நேரத்தில் ராட்டினத்தில் நூற்பார். குடித்துவிட்ட நேரத்திலோ ராட்டை எடுத்து ஆட்டி, உடைத்து அடுப்பில் வைப்பார். இவ்விதமே அவருடன் நான் 6—7 வருடங்களாக இம்சைப் பட்டுக்கொண்டுவருகிறேன். நல்ல வேளை எப்போது வந்து, நாங்களிருவரும் சேர்ந்து உழைப்போமோ என்று என் மனம் தத்தளிக்கின்றது. உங்கள் புருஷன் உங்களுக்கு வெண்ணெயாக விருக்கையில் நீங்கள் நெய் செய்ய அழுகிறீர்கள். இவ்விதம் இனி இருக்காதீர்கள். அவர் பிரியப்படி நடந்தால்தான் பலனுண்டு; இல்லையேல் வீண் பாபம்தான். எங்கள் புருடனைப் போன்று இருந்தால் கஷ்டம். நீங்கள் இனி இவ்விதம் அவரை வருத்தக்கூடாது." என்று பெரியதோர் பிரசங்கம் போன்று பேசினாள்.

இதைக்கேட்ட ஜெயலக்ஷ்மி என்ற அந்தப் பெண்ணின் மனம் எவ்விதமோ கலக்கமுற்று மாறத் தலைப்பட்டது. தன் புருஷன் தனக்கு எடுத்துக் கூறியதையும் ஒவ்வொரு சமயத்தில் நினைத்து அவன் கண்ணீர் உதிர்த்து வருந்தியதையும் தான் இதுகாறும் நடந்துகொண்ட மவுட்டீகத் தன்மையையும் நன்றாக யோசித்துப் பார்த்தாள். தன்னையறியாது மனம் மாறுபட்டுவிட்டது. தன் கணவன் தன்னிடத்தில் கொணர்ந்து உடுத்துக்கொள்ளும்

சிலர் தாம் தாம் வெகு ஆசாரக்காரர்கள் போலத் தடபுடல் செய்வது. அவர்களின் சமயல் கட்டில் சென்று பார்த்தாலோ ஆசாரமெல்லாம் ஆபாசமாகி விடுகின்றது. ஒருவேளை புசிப்பதற்கும் வாந்தி வருகின்றது. இந்த மேல் ஆசாரம் எதற்கு!

படியாகக் கொடுத்த கதர் சேலையை லக்ஷ்யம் கூடச் செய்யாமல் வைத்திருந்ததை நினைத்தாள். "ஆகா! இதுகாறும் நாம் இவ்வித பேரறிவைப் பெறாத மூடமாகிவிட்டோமே! என்று வருந்தியவாறு சடக்கென்று உள்ளே சென்றாள். அந்த கதர்ப் புடவையை அன்று எடுத்து அணிந்துகொண்டாள். வெகு தைரியத்துடன் வெளியில் வந்து இவ்விரு பெண்மணிகளையும் நமஸ்கரித்தெழுந்து "எனக்குப் புத்தியளித்த உத்தமிகாள்! நான் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அழுததை நான் அறியும்படியாகச் செய்ததற்கு நான் பலகோடி வந்தனம் செய்கிறேன். என்னுடைய கணவரின் இஷ்டத்தில் மோகங் கொள்ளாது இந்த அல்ப ஸில்கில் மோகங்கொண்டு என்னுடைய சுகவாழ்வைக் கெடுத்துக்கொண்டேன். நானும் என் கண்வரும் முகம் நோக்கிப் பேசி வருடக் கணக்கில் ஆய்விட்டது. அவர் மனம்போல நடக்காத குற்றத்துடன், அவர்மீது குறையும் கூறித் தூற்றினேன். ஐயோ! இந்த அறிவு அவர் கூறுங் காலையில் எனக்குத் தோன்றா தொழிந்தது. இனி நான் அவர் வார்த்தைக்கு ஒருவித இடையூறும் சொல்லமாட்டேன்." என்று கூறி, தன் கணவனிடம் சென்று காலில் விழுந்து வணங்கி, "நாதா! நான் செய்த அபசாரத்தை எல்லாம் மன்னிக்க வேண்டும்படி நான் மன்றாடுகிறேன். எனக்குக் கடவுள் அறிவு கொடுத்திருந்தும் அறிவு இல்லாத மிருகமாகவே காலத்தைக் கழித்துவிட்டேன். உங்கள் மனத்தை நோகச்செய்ததனால் நான் அடைந்த பலன் தங்களுடன் சந்தோஷமாக இருந்து பேறு பெறுவதை இழந்தேன். இனி நான் தங்களை நிழல் போலவே தொடர்ந்து என்னவிதம் சொல்லியபோதிலும் தப்பாது நடந்து கொள்கிறேன். என் பிறந்த அகத்தின் திமிரால் நான் அழிந்தேன். என் தந்தையின் வழியை நான் பற்றியதில் மோசம் போனேன். அவர் எனக்கு அனுப்பிய பணத்தை நான் பாழும் ஸில்கில் கொட்டி

முக்கியமான காரியம் இருக்கையிலும் சரி, சாதாரணமாக விருக்கையிலும் சரி; சிலர் கடுத்த முகத்தை மாற்றுவதே இல்லை. சதா அதிகாரந்தான். திட்டு தான். அத்தகையோரிடத்தில் வேலைசெய்வதை விடப் பேசாமல் விலகிக் கொள்ளலாம்.

விட்டதை எண்ணில் இப்போது வருந்துகிறேன். நாதா! இரங்க வேண்டும்" என்று கெஞ்சிக் கேட்டான்.

திரைராஜா தன் மனைவிக்கு இம்மாதிரியான மாறுதல் உண்டாகுமென்று கனவில் கூட நினைக்கவில்லையாதலால் அவன் மனம் பொங்கிப் பூரித்தது. தாங்கமாட்டாத அபாரமான சந்தோஷத்தினால் அவ் விடத்தையும் அன்னியரையும் மறந்து ஜெயலக்ஷ்மியின் இரு கரங்களையும் பற்றித் தூக்கி அதைப் பற்றியவாறு, "என் கண்மணி! ஜெயம்! உன் பெயரின் அர்த்தத்தை நான் உண்மையில் இப்போது அடைந்திருக்கிறேனு! நீ சொல்வது வாஸ்தவமான மொழிகளா! என் குறையைத் தீர்க்கும் உண்மை மொழிகளா! எனது தர்ம பத்தினி என்பதை இந்த 4 வருடகாலமாக நான் எண்ணுமலிருக்கும் படியாகச் செய்து வந்த உனது மோகமும்! மயக்கமும் ஒழிந்ததா!" என்று பல கேள்விகளை அடுக்காகக் கேட்டான்.

இதுகேட்ட ஜெயம் "நாதா! தாங்கள் இனிமேல் என்மீது சற்றும் அவநம்பிக்கை கொள்ளவேண்டாம். கடவுள்மீதும், உங்கள் மீதும், பெரியாரின் மீதும் ஆணையாக நான் உங்களுடன் ஒத்துழைக்கின்றேன். இது சத்தியம்; இது சத்தியம்; இது சத்தியம். சிறைச் சாலைக்குச் சென்றாலும் நான் நிழல் போலத் தொடருவேன். நான் படித்தவள் என்ற பட்டம் பெற்று இருப்பினும், பத்திரிகையில் தேச நிலைமையை அறிந்திருப்பினும், உங்களுக்குத் தர்ம பத்தினியாக வாழ்க்கைப் பட்டிருப்பினும் நான் மூடமாகத் திமிர் கொண்டு காலத்தைக் கடத்தினேன். இந்த நிமிடம் முதல் நான் உங்கள் நிழல் தான்" என்றாள்.

இந்த மொழிகளைக் கேட்டுப் பேரானந்தமடைந்த தொண்டன் அன்று கூட்டத்திற்கே ஸாவித்திரி, திலோத்தமா இருவருடனும்

ஒரு காரியார்த்தமாக வெளியூருக்குச் சென்று ஆவலுடன் வீடு திரும்புகையில் வீட்டில் கால்வைத்த உடனே 'முக்கியமானவர்களுக்கு உடம்பு சரியில்லை; படுத்திருக்கிறார்கள்' என்பதைக் கேட்டதும் கை கால்கள் விழுந்து விடுகின்றன. அவர்கள் நன்ருக எழுந்து உலாவுகின்ற வரையில் மனம் நிம்மதியடைவதில்லை.

ஜெயத்தையும் அழைத்துக்கொண்டு வெகு சந்தோஷத்துடன் சென்றான். அன்றுதான் அவனுக்குப் போகந்த பதவி கிட்டியதாக நினைத்தான். அன்று அவன் மனம் பூரித்ததே போல அவன் ஆயுளில் ஒரு நாளும் கண்டறிந்ததே இல்லை. அன்று நடைபெற்றக் கூட்டத்தில் வெகு ருசிகரமான சொற் பொழிவுகள் நிகழ்ந்தன. அதில் ஸாவித்ரி, திலோத்தமா இருவரும் பேசினார்கள். ஜெயலக்ஷ்மிக்கும் பேசவேண்டுமென்று ஆசையே யன்றி பயம் நடுக்கியதால் மற்றொரு முறை பார்த்துக்கொள்வோம் என்று பேசாது இருந்து விட்டாள். கூட்டங் கலைந்தது; எல்லோரும் வீடு திரும்பினார்கள்.

அன்று முதல் ஜெயம் வேறு மனுஷியாக மாறிப் போய் விட்டாள். பதியின் வாக்கைக் கடக்காது அவன் மனப் போக்கின் படியே நடக்கத்தொடங்கினாள். ஜெயம், ஸாவித்ரி, திலோத்தமா முதலிய மூவரும் எங்கு சென்றாலும் எந்த வேலை செய்தாலும் ஒன்று கூடிச் செய்து வந்தார்கள். வீடு வீடாகக் கதரைக் கொண்டு சென்று விற்பதும் காங்கிரஸுக்கு அங்கத்தினர்களைச் சேர்ப்பதும், நூல் நூற்பதும், ஆக ஓயாது வேலை செய்யத் தொடங்கினார்கள். துரைராஜா ;தன் உயிரையே த்யாகம் செய்யவும் தயாராகி விட்டான். அவன் இம் மூவருக்கு ஒத்தாசை புரிந்து வந்தான்.

* * * * *

சில மாதங்களாயின. திலோத்தமாவின் புருஷன், துரைராஜா இவர்களை அழைத்துச் செல்வதையும், இவர்கள் செல்வதையும் கண்டு பொறாமையுற்றுச் சந்தேகிக்கும்படியாக அவனுடைய வைப்பாட்டி நன்றாகத் தீயை மூட்டிவிட்டாள். அந்தத் தீ பிடித்துக் கொண்டுவிட்டது. அவன் மனத்தில் தீர ஆக்ரோஷம் உதித்ததால் இந்த துரைராஜாவைத் தொலைத்துவிடவேண்டு தீர்மானித்தான். அவன் அதற்கே ஒரு தினம் எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். துரைராஜா ஒருநாள் எங்கேயோ வெளியில் சென்று திரும்பி வரும்

பிழைக்கும் வழிக்காக சிலர் அரும் பாடுபட்டு அலைந்து திரிந்தாலும் ஒரு காசுகூடக் கிடைப்பதில்லை. சிலருக்கோ பணத்தின்மீது பணம் குவிந்து விடுகின்றது. எதற்கும் அதிர்ஷ்டந்தான் காரணம்.

போது அவள் எதிரில் திலோத்தமாவின் புருஷன் சென்று தன் கையில் வைத்திருந்த கூரிய கத்தியை நீட்டி "நில்லு." என்று அதட்டினன். இந்த எதிர்பாராத கோர பயங்கரமான சம்பவத்தைக் கண்டு மனந் திடுக்கிட்டுத் தொண்டன் இன்னதென்று ஒன்றும் தோன்றாது அப்படியே நின்றுவிட்டான்.

11-வது அதிகாரம்

மின்னாளின் சாகஸம்—தன் வினை தன்னைச் சுடும்

கிருஷ்ணசுவாமியும் பொன்னம்மாளும் இந்த எதிர்பாராத செய்கையினால் நடுங்கிப் போய் ஒன்றுமே பேசாது ஊமையானார்கள். பொன்னம்மாளின் ஆநந்தமெல்லாம் பறந்துவிட்டது. தூபம் போட்ட பிசாசு போலக் கோபம் பொங்கி எழுந்த ரங்கமணி மிக்க ஆத்திரத்தோடு பேசத் தொடங்கி "கெட்டுப்போன கழுதை முண்டை! என் குடியைக் கெடுத்த பட்டி முண்டைகளெல்லாம் போதாதென்று நீ பொருந்தி வந்து மூளத் தாயா! இத்தகைய பிழைப்புப் பிழைத்து உயிர் வாழுவதைவிடத் தெருவில் எச்சில் பொறுக்கி நாயைப் போன்று திரிந்தலைந்தால் கவுரமாக விருக்குமே! வெட்கங் கெட்டு, மான மிழந்து குடியைக் கலைக்கும் தொழிலைச் செய்யும் உனக்கு நகைப்பும், குதூகலமும், கொண்டாட்டமும் ஒரு கேடா! சிச்சி! நாயை விட கேடு கெட்டப் பேயே! தீயினும் கொடிய விஷம சிந்தையுடைய மூதேவியே! உன் பவிஷுக்குத் தலைகுனிவு ஒன்றா! ஆடவர்களின் மீது பழியைச் சுமத்தி அகந்தையுடன் காலத்தைக் கழிக்கும் சில கபடிகளின் கோஷ்டியை விட உனது துர்ப்புத்தியும் தீயினும் கொடிய தூர்த்தச்

சில துஷ்டர்கள் வேண்டுமென்றே விஷமத்தனம் செய்யும் பொருட்டுக் கூட்டங் கூடி கலகத்தை விளைவித்து வேடிக்கைப் பார்க்கிறார்கள். கட்டுப்பாடற்ற ஜனக்கூட்டத்திற்கு இந்த வம்பில் மட்டும் என் நாட்டமோ தெரியவில்லை.

செய்கைகளும் என்னைத் துளைத்து வருத்துகின்றதே! சீச்சீ! பேமானி முண்டை! குடி கெடுக்கும் நாயே! குல மழித்த பேயே! என் மன மெரித்த தீயே! என் முன் வெட்கமின்றி இன்னமுமா நிற்கின்றாய்! சீ, வெளியே ஓடு, இல்லையேல் கையில் எடுப்பேன் ஜோடு. உன்னைப் போன்ற கெட்டக் கழுதையை நடு தெருவில் பிண்டத்திற்கு அலைந்து தேடு. இல்லையேல் பட்டினியாக வாடு. உன் செயலே உன்னை வாட்ட சம்பவிக்கும் கேடு. உம்! வெளியில் போ"! என்று கூறிக்கொண்டே துடைப்பக்கட்டையினால் நன்றாக மரியாதை செய்து அவள் ஆத்திரம் தீர வைதாள்.

இத்தகைய துரதிருஷ்ட காலம் தனக்கு வரும் என்று சற்றும் எண்ணவில்லை யாகையினால் பொன்னி தலை நிமிராமலும் மறு பேச்சு பேசாமலும் தன் துணியினாலேயே தன் தலையை மூடி முக்காடிட்டுக்கொண்டுப் புறக்கடைப் பக்கமாக எடுத்தாள் ஓட்டம். மீண்டும் ரங்கமணி தொடங்கினாள் ஆட்டம். "ஒரு ஸ்திர புத்தி யற்ற உங்களுக்கு என்ன சொல்லியும் உறைக்கவில்லையே! நான் என்ன செய்வேன்? என் தலை யெழுத்தல்லவா உங்களிடம் என்னைச் சிக்க வைத்தது. உங்களைப் போன்ற புத்தியற்ற பித்து பிடித்தவர்கள் விவாகம் செய்துகொண்டு குடும்பஸ்தனாக இருப்பதற்கு சற்றும் யோக்யதையே இல்லை. என்னைப் போன்று வயிறெரிந்துக் கண்ணீர் சொட்டுகின்றவர்களுக்கல்லவா அந்த வருத்தம் தெரியும். கல்யாணமும் கர்மாதியும் செய்யாதிருந்தால் நீங்கள் கேவலம் மதி யழிந்து எக்கேடு கெட்டாலும் உங்களைக் கேட்டவர்கள் யார்? ஒருவரு மில்லை. தங்களுடைய மனமே அரசன். துர்க்குணமுடைய நேசனே மந்திரி. தினம் ஒரு குடிகெட்ட முண்டைக்கு உங்கள் பணத்தையும், உத்தம குணத்தையும் அர்ப்பணம் செய்துவிட்டுப் பிரதிபலனாகக் கண்ட துர் நோய்களைச் சம்மானமாக அடைந்து குதூகலிக்கலாம். குழந்தை குட்டிகள் பிறந்தால் உங்களுக்குப் பாத்

நமது தேசநிலைமையைப் பற்றிப் பலவிதமாக எடுத்துரைத்தும் சிலருக்கு அதை கிரகிப்பதற்குச் சக்தியில்லை. அவர்களுக்கு வீட்டுவேலைகளுடன் நாட்டு வேலைகளையும் புணைத்து விவரமாக எடுத்துக் கூறினால் பிறகு நன்றாகத் தெரிந்து கொள்கிறார்கள்.

பதை யற்று விடும். இவ்விதம் விவாகத்தையும் செய்து விட்டு என் வயிறெரிய இத்தகைய ஆட்டங்களை ஆடிக் கொண்டே இருந்தால் குழந்தையை யார் கட்டுவார்கள். முன்பு நான் சொல்லியபோதெல்லாம் "குழந்தைக்கு விவாகமென்ன என்றீர்கள்?" இப்போதோ குழந்தையே குமரியாகி விட்டாள்; வயது 12 ஆய்விட்டது. இனி மேலும் விவாகம் செய்யாமலிருந்தால் நமது ஜாதிக்கும் குலத்திற்கும் அடுக்குமா! நம்மை நம்முடைய பந்துக்கள் இப்போதே விலக்கி வைத்திருப்பது போல ஒருவரும் எட்டிப் பார்க்காமலிருக்கிறார்களே அதை நீங்கள் சற்றேனும் லக்ஷியம் செய்கிறீர்களா! உங்களுடைய அத்தையின் மகன் இந்த ஊருக்கு வந்திருந்து இவ்விடம் வராது சென்றாரே அது உங்களுக்கு அவமானமாக இல்லையா! இந்த மாதிரியான இம்சையை என்னால் படக் கூடவில்லை. நான் என்னுயிரை மாய்த்துக் கொண்டு தான் இறக்கப் போகிறேன். இவ்விதமான உயிர் வாழ்வதை விட உயிர் நீப்பது எவ்வளவோ சிறப்பாக விருக்கும். இருந்தால் நன்றாக விருக்க வேண்டும். இல்லையேல் மண்ணைவிட்டு மறைந்து விட வேண்டும். நான் இறப்பதால் உங்களுக்கு என்ன வருத்தம். நீங்கள் இன்னும் சந்தோஷத்துடன் வீட்டின் கவலையே யற்று சுக வாழ்வு வாழப் போகின்றீர்கள். என் குழந்தையல்லவா சந்தியில் நிற்கும். தாயற்ற சேயாய் எல்லோராலும் இகழப் பட்டோ, ஏசப் பட்டோ, அலக்ஷியம் செய்யப் பட்டோ வருத்தமுறப் போகிறது. என் குழந்தைகளைக் கண்டு இரங்குகின்றவர்கள் புவியில் இல்லை. அவைகளுக்காக நான் இது பரியந்தம் உயிர் வாழ்ந்தேன். இனி என்னால் இக் கொடுமைகளை—அவமானங்களை—சகிக்கக் கூட வில்லை. எது எக்கேடு கெட்டால் என்னவென்று என் மனம் முறிந்து விட்டது. என்னுடைய வார்த்தையை நீங்கள் கேட்டுச் செய்யும் பரியந்தம் நல்ல கால மில்லை என்பதை நன்றாகத் தெரிந்து விட்டேன். என் வாக்கை நீங்கள் கேட்கப் போவது மில்லை. எனக்கு நல்ல காலமு மில்லை. என் விதி இது தான். எத்தனை வார்த்தைகள் எடுத்துக் கூறினாலும் பதில் பேசாது ஊமையைப் போல விருந்தால்

மாமியார் வீட்டு மனிதர்களின் பணத்தில் வெளியூர் யாத்திரை செய்யும் போது வருத்தமே இல்லை. தன் சொந்தச் செலவில் ஒரு ஊருக்குச் செல்லும் போது "ஐயோ! 5ரூபாயா செல்வு" என்று தலைமீது கையைவைக்கும் படியாகிறது.

அதில் என்ன காரியத்தைச் சாதித்து விடுவதாக எண்ணமோ தெரியவில்லை. இந்த பரிபவம் செய்யும் உங்களுக்குப் பாழும் கடவுள் குழந்தைகளையேனும் கொடுக்காதிருக்கலாகாதா! அதற்கும் பஞ்சமின்றி அளித்து என்னை வதைக்கின்றார்" என்று ஆத்திரத்துடன் கூறினாள்.

க்ருஷ்ணசாமி தன்னை இத்தகைய ஆக்ரோஷத்துடன் பேசியதையும் பொருட்படுத்தாது எதுவும் பதிலும் சொல்லாது எழுந்து தட தட வென்று சென்று விட்டான். ரங்கமணியின் வயிற்றெரிச்சல் முன்னிலு மதிகமாக மூண்டு விட்டது. இன்னும் என்ன வழியில் வேலை செய்தால் தன் கணவன் திருந்துவான் என்கிற பெரும் யோசனை அவளை வாட்டி வதைக்கத் தொடங்கியது. இங்கிருந்து சென்ற க்ருஷ்ணசாமி தனக்கும் தன் வைப்பாட்டிக்கும் கிடைத்த சன்மானத்தை வெளியிடுவதற்கு வெட்கி வாளா விருந்து விட்டான். ரங்கராஜாவுக்கும், க்ருஷ்ணசாமிக்கும் இவர்களின் குணத்தையே ஒட்டிய நண்பர்கள் மற்றும் இருவர் உண்டு. அவர்கள் அளவற்ற செல்வ முடையவர்கள். லகாரக் கணக்கில் இலக்ஷ்யமின்றி இருப்பவர்கள். ஆனால் அவ்விருவரும் தமது செல்வத்தில் ஒரு சிறு தொகை கூட சத் விஷயத்திற்காகச் செலவழித்ததில்லை. ஆடல் பாடல், குடி வகைகள், சினிமா, நாடகம், சர்கஸ், முதலிய விஷயங்களுக்குச் சற்றும் தளராமல் வாரி இரைக்கும் வள்ளல்கள் இவ்விருவரும்.

அநேக தினங்களில் அவர்கள் சினிமாவை தமது வீட்டிலேயே நடத்தி விடச் செய்வதும் எல்லோரும் பார்த்து மகிழ்வதும், நாடகக்காரர்களுக்கு வேண்டிய சகலமான உதவியும் புரிந்து ஆயிரக் கணக்கில் பணத்தைக் கொடுத்து அவர்களைத் தம் வீட்டிலேயே வைத்துக் கொண்டு நாடகம் நடிக்கச் செய்வதும் தாங்கள் ஒரு கூட்டமாக அதைக் கண்டு மகிழ்தலுமாகத் தனியரசு புரிந்து

சில மோசக்காரப் பாவிகள் கழுத்தை யறுப்பது போன்ற காரியங்களைச் செய்துவிடுவதும் பிறகு மன்னிப்புக் கேட்கவும் பிறருக்கு சிபார்சு கடிதங்கள் எழுதவும் எப்படியோ வெட்க மின்றி—மானமின்றி, அறிவின்றி—முன்னே வருகிறார்கள்.

வருகிறார்கள். இவர்களுடைய பணத்தில் தான் க்ருஷ்ணசாமி ஆடம்பரமாக விருக்க பாக்யம் செய்தான். இவ் விருவருக்கும் திருமகளின் கடாக்ஷம் பூர்ணமாக இருக்கின்றதே யன்றி நாமகள் இவர்களைக் கண்ணெடுத்தும் பார்க்க வில்லை. நாமகளின் வாடை கூட இவர்கள் மீது வீச வில்லை. அறிவு என்பதே இவர்களுக்கு அணு வளவும் இல்லை. சிற்றின்ப விஷயத்திலும் அனுவசியமான விஷயத் திலும் மூட அறிவு அவர்களை வ்யாபித்துக் கொண்டிருந்தது. ராமாயண, பாரத, பாகவத, இதிகாஸ புராணாதி சரிதைகளின் பெயரும் இவர்களுக்கு நன்றாகத் தெரியாது. சில பாட்டிமார்கள் சீதைக்கு ராமன் சிற்றப்பனாக வேண்டும், எனக்குத் தெரியாதா என்ன? என்பார்கள். அத்தகைய அறிவு கூட இவர்களுக்குக் கிடையாது.

இத்தகைய மூட கர்மிகளுக்கு மாமா ஒருவன் வெகு சுதந்த தரத்துடன் இருக்கிறான். அவன் குடும்பத்தின் காலக்ஷேபம் இந்த லோபிகளால் நன்றாக நடக்கின்றது. இவர்களின் மனப் போக்கின் படிக்கு நன்றாக நடிக்கத் தேர்ந்த ஆசாமி அவனே! அவர்கள் நல்ல வேளையாக விவாகம் முதலிய தொந்தரவின்றி ஏகாங்கிகளாகக் காலங் கழிப்பதால் இவர்களுடைய அட்டகாஸத்திற்கு யாதொரு தடையுமின்றி இருந்தது. இவர்களின் காலக்ஷேபம் இவ்விதமே வெகு நாட்களாக நடந்து கொண்டு வந்தது. இவர்களுலடய தாருக் காரனாகிய தத்தாரித் தேவன் என்பவன் ஒரு தினம் கிருஷ்ணசாமி யுடன் ஒரு விவாக வீட்டிற்குச் சென்றிருந்தான். அங்கு ஓர் அழகிய இள நங்கை வெகு வசீகரமான தோற்றத்துடன் ஹரி கதை செய்து கொண்டிருந்ததைக் கண்டதும் இவர்களுடைய மனம் போரநந்தக் கடலில் மூழ்கியது. இந்தப் பெண்மணியை எவ்வித மாயினும் தங்கள் வீட்டிற்குக் கொண்டு போய் விட வேண்டும் என்று தீர்மானித்து விட்டார்கள். காலக்ஷேபமும் முடிந்தது. அம் மாதரசி எந்த வீட்டில் இறங்கி இருக்கிறாள் என்பதைக் கவனிக்க

அவசரமாக டிபன் வேண்டுமென்றபோதுதான் வாங்கிவருவதற்கு மனித ரில்லாது திண்டாடும்படி நேரிடுகின்றது. மனிதர்கள் இருக்கும் தினத்தில் விருந்தினரோ இல்லை விருந்தினர் இருந்தாலும் பசியுமில்லை.

அவளுடன் பின் தொடர்ந்தார்கள்; க்ருஷ்ணசாமியின் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் இருப்பதை அறிந்தார்கள். க்ருஷ்ணசாமியின் பக்கத்து வீட்டுக்காரனுக்கு இவனைக் கண்டால் சற்றும் பிடிப்பதே இல்லை. ஆகையினால் இவன் அங்கு செல்வதற்கு அஞ்சினான். நாகன் தத்தாரி தேவனைத் தூது அனுப்பி விசாரிக்கும்படியாகச் செய்த துடன் இவ் விவரத்தைத் தங்கள் சகாக்களோடு தெரிவித்தான்.

இது கேட்ட சகாக்கள் அபாரமான சந்தோஷத்தையடைந்து "ஆகா! அத்தகைய ரூபவதியை, எழிலாமுதைப் பருகாமல்கூட இருப்பார்களா; அடே தத்தாரித் தேவா! நீ இப்போதே எழுந்து முதலில் அவ் வீட்டிற்குச் சென்று அவளிடம் நம்முடைய ரகஸி யங்கள் ஒன்றும் தெரிவிக்காமல் கதை செய்வதற்காக அழைப்பது போல அழைத்து வா; இங்கு பேசிக் கொள்ளலாம். இல்லையேல் எங்களை அங்கு அழைத்து வாலாமா வென்று கேட்டுத் தெரிந்து கொண்டு வா; சீக்கிரம் போ." என்று அனுப்ப, அவன் சென்றான்.

தத்தாரித்தேவன் சற்று நேரத்திற்கெல்லாம் வெகு சந்தோஷ முகத்தோடு ஓடோடியும் வந்தான். தனவந்தர்களாகிய கந்தசாமி, ராமசாமி ஆகிய இருவரும் இவன் வரவை வெகு ஆவலுடன் எதிர் பார்த்திருந்தார்களாகையினால் அவனைக் கண்டதும் குதூகலித்து எழுந்து ஓடி "தத்தாரித் தேவா! என்ன செய்தி! காயா, பழமா!" என்றார்கள். க்ருஷ்ணசாமியும் ரங்காராஜாவும் "என்ன ஐயா! தத் தாரித் தேவன் முகத்தைப் பார்க்கும் போதே ஜெயக்களை தூக்கி யடிக்கின்றதே! அவனைக் கேட்க வேண்டுமா! முகத்தில் நகை தாண்டவமாடுகின்றது பார்." என்றார்கள்.

தத்தாரி:—அண்ணா! தத்தாரி சென்ற காரியம் முடியவில்லை எனில் பிறகு உலகத்தில் வேறு யாரால்தான் எந்த காரியத்தை ஜெயிக்க முடியும், ஒரு போதும் முடியாது. நான் சென்ற காரியம் எல்லாம் ஜெயம். ஆனால் ஒன்று மட்டும் சற்று யோசிக்க வேண்டி

சமயா சந்தர்ப்ப மறியாது சிலர் தங்கள் காரியமே முக்யமாக எண்ணித் தொண தொண வென்று பேச வாரம்பித்து விடுகிறார்கள். இதனால் அவர்கள் காரியமும் அனுபாடில்லை, இவர்களுக்கும் தொந்தரவு. எல்லாவற்றிற்கும் சமய மறிய வேண்டும்.

இருக்கிறது. ஏனெனில் அவளுக்குச் சேர வேண்டிய தொகை பூராவும் ரொக்கமாக முன் பணமாகக் கொடுத்து விட வேண்டுமாம். அதற்காக நீங்கள் தயங்க மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியுமாதலால் நான் சகலமான தீர்மானங்களையும் முடித்துக் கொண்டு வந்து விட்டேன், அதாவது மூன்று தினத்திற்குக் கதை செய்யும் படி ஏற்பாடு செய்தேன். அதற்குக் குறைந்தது மூன்று பிள்ளையாராம். பிறகு ஒரு வாரம் தங்கள் மனையிலேயே இருப்பதற்கு ஏற்பாடு செய்தேன். அதற்கு ஒரு தினத்திற்கு ஒரு பிள்ளையாருக்கு குறைந்து வாங்க மாட்டேனென்றாள். ஆக பத்தாயிரம் ரூபாயிக்கு முடித்து விட்டேன். நீங்கள் இன்னும் இஷ்டப்பட்டு அதிகம் கொடுத்தால் நான் தடுக்க வில்லை, அவளுக்கும் சந்தோஷமே! இந்த ஏற்பாடு உங்களுக்குச் சம்மதந்தானே! என்ன யோசிக்கின்றீர்கள்?

கந்த:—யோசனை யொன்று மில்லை, அவளுடைய அழகிற்கும் சாமார்த்தியத்திற்கும் இந்த தொகை போதாதென்று வார்த்தையை மாற்றி விட்டால் என்ன செய்வதென்று தான் யோசிக்கின்றேன். நீ இப்போதே அந்த மடந்தையை இங்கு அழைத்துக் கொண்டு வா! நான் பணத்தை முதலில் கொடுத்து விடுகிறேன். பிறகு வார்த்தை பிரளாது, தைரியமாயிருக்கலாம். நமது மோட்டாரைக் கொண்டு போ. சீக்கிரம் அழைத்து வா! யாரடா; அங்கு, உடனே வீட்டை நன்றாகச் சுத்தி செய்து வையுங்கள். பலகாரம், காபி முதலியன தயார் செய்யுங்கள்—என்று தடபுடலாக ஆர்டர் செய்தான். அங்குள்ளவர்களில் முக்யமாக க்ருஷ்ணசாமிக்கு மட்டும் மோட்டார் விடுவதற்கு நன்றாகப் பழக்கமாதலால் அவன் மோட்டாரை ஓட்டிக் கொண்டு சென்றான்.

அடுத்த நிமிஷத்தில் மோட்டார் திரும்பி வந்து சேர்ந்தது. அதிலிருந்து அழகே உரு வெடுத்தது போன்ற வனிதா ரத்தினம்

நமக்கு மிகவும் ஆப்தமான நண்பரின் வீட்டு விவாகத்திற்குச் செல்ல சகல ஏற்பாடுகள் செய்திருக்கையில், ஒரு அசுபம் ஏற்பட்டு அங்கு செல்லாமலிருக்க நேர்ந்துவிடுகின்றது. இதனால் இரு பக்கத்தினருக்கும் மனக்குறைவே.

வந்து ஜில்லென்று இறங்கினாள். அவளோடு மற்றுமிரு எழிலார் மடந்தைகளும், ஒரு கிழவியும், ஒரு மாமாவும் வந்தார்கள். வந்திறங்கிய எல்லோரும் நல்ல துல்லியமான வெண்மைக் கதரையே தரித்திருந்தார்கள். அவர்களுடைய முகங்கள் வெகு வசீகரமாக விளங்கியதோடு பார்ப்பதற்கு சுரு சுருப்பாயும் இருந்தன. அவர்களைக் கண்ட அந்த தனவந்தர்கள் உள்பட எல்லோரும் மட்டற்ற மகிழ்ச்சியடைந்து, தேன் குடித்த நரி போல பல்லைக் காட்டிக் கொண்டு எதிரே சென்று "வாருங்கள், வாருங்கள், உங்கள் வரவால் நாங்கள் க்ருதார்த்த மடைந்தோம் உங்களைப் பார்த்தால் சாக்ஷாத் லக்ஷ்மியைப்போல இருக்கிறது." என்று கூறி உள்ளே அழைத்துச் சென்றார்கள்.

வந்த நாரீமணிகள் உள்ளே வந்து வீட்டையும், வீட்டிற் குரியவர்களையும் ஒரு முறை நோக்கினார்கள். அவர்களில் முக்கியமான கதை செய்யும் மாதரசியின் முகம் சுளித்தது. அவள் முகம் சுளித்ததைக்கண்ட கந்தசாமி முதலியவர்களுக்குத் திடுக்கிட்டது. "இவள் முகம் திடீரென்று ஏன் ஒருவாறாகி விட்டது? பத்தாயிரம் ரூபாய் போதாதென்று சொல்லி விடுவாளோ! ஹா! என்ன அழகு! என்ன அழகு! என்னுடைய கண்களால் நான் பார்த்த பெண்களின் தொகை கணக்கிட வியலாது. அவர்களில் சிலரைக் கண்டு நாம் மயங்கி "இவர்களைவிட அழகு உலகிலில்லை" என்று தீர்மானித்தோமே! இந்த வனிதா ரத்தினத்தின் சிகையின் எழிலுக்குச் சமதையாக மற்ற மங்கைகளின் முகம் ஈடாகாது. இவளுடைய அம்சம் சாக்ஷாத் திருமகளோ வென்று ஐயுறும் படியாக விருக்கிறது. என்ன பாக்யம்! இவள் எத்தனை சுழிகளைக் கேட்ட போதிலும் தடை இன்றி கொடுத்து விட வேண்டும்" என்று தீர்மானித்துக் கொண்டான்.

பிறகு அந்த நங்கையின் முகத்தைப் பார்த்து "அம்மா! இங்கு வந்த வுடன் திருமுகம் வாட்டமடைந்திருக்கிறதே என்ன காரணம்

சில முக்கியமான விஷயங்களுக்காகச் செலவிட நாம் பணம் வைத்திருக்கையில் எதிர்பாராத வேறு காரியங்களுக்கு அப்பணம் செலவாய் விடுகின்றது. அதனால் பணக் கஷ்டமும் மனக் கஷ்டமும் ஒன்றுகூடி விடுகின்றன.

தெரியவில்லையே! எங்களிடம் ஏதேனும் குறைவு இருப்பின் அதைத் தெரிவித்தால் உடனே நாங்கள் அதிலிருந்து சரியாக ஆகிறோம்; தயவு செய்து சொல்ல வேண்டும்'' என்றான். இது கேட்ட கங்கை பேசத் தொடங்கி ''ஐயா! நீங்கள் கேட்பது எங்களுக்கு வியப்பாக விருக்கிறது. தற்போது நமது தேசம் உள்ள நிலைமை என்ன. தேசத்திற்காகத் தொண்டர்கள் படும்பாடென்ன. அவர்கள் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தேசத்திற்காக அர்ப்பணம்செய்திருக்கும் மகிமை என்ன. இவைகளெல்லாம் இக் காலத்தில் ஒரு சிறிய குழந்தை கூட அறிந்திருக்கையில் நீங்கள் இத்தகைய அன்னியத் துணியை ஆடம்பரமாக அணிந்து கொண்டு இருக்கின்றீர்களே! இதைக் கண்டால் எனக்கு மிகவும் வருத்தமாயும், வெறுப்பாயுமிருக்கிறது. இந்த வீட்டின் இத்தனை பாகங்களில் அலங்கரித்துள்ள ஸில்கு துணிகளைக் காண என் வயிறு கொதிக்கின்றது. இவைகளை எல்லாம் கதர்த் துணியாகப் போட்டிருந்தால் அவ்வளவு அழகாகவிருக்கும். கதர் அணியாதவர்கள் வீட்டில் நான் கதை செய்வதில்லை என்று சபதம் வைத்துக் கொண்டிருக்கிறேன். ஆகையினால் என் மனம் சரியாகவில்லை. நான் செல்கிறேன்.'' என்றாள்.

குயிலினும் இனிய இக்குரலின் ஒலியைக் கேட்டதும் அவர்கள் முன்னினும் அதிகமான மயக்கத்தை அடைந்துவிட்டார்கள். கிருஷ்ணசாமி ஓட்டமாக ஓடி ஒரு கதர்க் கடையிலுள்ள துணிகள் முற்றும் அப்படியே விலை பேசி வாரி மூட்டையாகக் கட்டிக்கொண்டு ஓடி வந்தான். அங்கு வேலைக்காரர்களுக்கு முதல் கதர் உடையை அணிவித்துத் தாங்களும் அணிந்துகொண்டு வெளியிலுள்ள பட்டுக்களை எல்லாம் எடுத்துவிட்டுக் கதரை அவைகளுக்குப் பதில் சத்திபாகப் போட்டுக்கொண்டு எல்லோரும் கதர் மயமாகிவிட்டார்கள்.

சுருட்டுக் குடியின் அடிமைகளின் நடத்தைகள் பலவிதம். சிலர் பக்கத்திலிருப்பவர் எக்கேடு கெட்டாலென்ன வென்று ஓயாது குடித்து தங்கள் தேகத்தையும் கெடுத்துக் கொண்டு, பக்கலிலுள்ளவர்களுக்கும் உபத்திரவத்தையுண்டாக்குகின்றார்கள். சிலர் ''நான் இக்குடியின் அடிமைத்தனத்தினின்று அடியோடு நீங்க முடியவில்லையாகையால் கொஞ்சங் கொஞ்சமாக அதை ஒழிக்க

பிறகு கந்தஸாமி அந்த மடந்தையை நோக்கி "அம்மா! இந்த ஏற்பாட்டை முதலிலேயே தெரிவித்திருந்தால் நீங்கள் வருவதற்கு முன்னரே நாங்கள் கதர் மயமாக விருப்போம். இந்த உலக விஷயத்தில் நாங்கள் தலையிடுவதே இல்லை. பத்திரிகை முதலிய எதுவும் படிப்பதில்லை. நமக்கு உள்ள சொல்ப ஆயுளை நாம் குணன விஷயத்தில் செலவிடாது இன்பமாகவே காலத்தைக் கழிக்கவேண்டு மென்பதுதான் எங்களுடைய கோரிக்கை. அதே விதமாக எங்களுடைய வாழ்வு நடை பெற்று வருகின்றது. உங்களிஷ்டம் போல இப்போது செய்துவிட்டோம். சந்தோஷந்தானு!" என்று கொஞ்சலாகக் கேட்டான்.

இதைக் கேட்ட அந்த நங்கை ஒருவாறு நகைத்துக்கொண்டு "இப்போது சந்தோஷமே யாயிற்று; இன்ப வாழ்க்கை என்று கூறினீர்களே! இன்ப வாழ்க்கை என்றால் என்ன? பேரின்ப வீட்டில் வசிப்பதைக் கூறுகின்றீர்களா! அன்றி சிற்றின்ப வீட்டைக் கூறுகின்றீர்களா!" என்று கேட்டாள். அவன் இந்தக் கேள்விகளுக்குப் பதில் கூறமாட்டாது விழித்தான். ஏனெனில் இவர்களுக்கு பேரின்பம் என்பது இன்னதென்றே தெரியாது. இவர்களின் மனத்திற்கிசைந்த மங்கையின் பேரைக் கேட்பதே இன்பமயமாகி விடுகிறது; ஆகையினால் அதையே பேரின்பம் என்று எண்ணிவிட்டார்கள். கடவுள் ஒருவர் உண்டு என்பது மட்டும் அவர்களுக்குத் தெரியுமேயன்றி மற்ற விஷயத்தில் கடவுளின் ப்ரபாவமே இன்ன தென்று தெரியாது. இக் கேள்விகளுக்குக் கந்தன் பதில் கூறத் தொடங்கி "அம்மா! நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு என்ன பதில் கூறுவேன்? உங்கள் பேரைக் கேட்டதே இன்பக் கடலில் மூழ்கிவிட்டோம். உங்கள் பேர் இன்பத்தையும், சிற்றிடை மாதரால் ஏற்படக் கூடிய

முயலுகிறேன்; ஆகையால் ஒரே ஒரு சுருட்டு பிடித்துவிடுகிறேன்; மன்னிக்கவும்" என்கிறார்கள். மற்றும் சிலர் "பலரைக் கஷ்டத்திற்குள்ளாக்கி நாம் சற்று நேரம் சுகமடைவதைவிட இப் பழக்கத்தை இந்த சாக்கிலாகிலும் நிறுத்திவிடலாம்" என்று பிடிக்காமலிருக்கிறார்கள். உலகம் பலவிதம்.

இன்பத்தைச் சிற்றின்பம் என்றும் நாங்கள் அறிந்திருக்கிறோம், அவ்விரண்டு இன்பங்களையும்தான் நாங்கள் விரும்புவது; மற்றபடி ஒன்றும் தெரியாது'' என்றான்.

நங்கை:—(நகைத்து) சரிதான். கடவுளின் மகிமை ஏதேனும் கண்டு மகிழ்வது உண்டோ என்று கேட்டேன். அது விஷயம் எப்படி. உங்களுக்குப் புராண சரிதை எதில் அதிக விருப்பம்.

கந்தன் :—அம்மா! புராணம் முதலிய எந்த தலைநோய்க் கதைகளையும் நாங்கள் கேட்பதில்லை. எங்களுக்கு அது சற்றும் பிடிக்காது. நாம் உலகத்தில் பிறந்தது சுகமாக வாழ்வதற்கே யல்லாது வீணாக இந்த உபயோகமற்றக் கதைகளில் பொழுதைச் செலுத்துதற்கு எனக்குச் சற்றும் மனமில்லை. என் தகப்பனார் கூட இந்தவிதமாகத் தான் புத்தி கற்பித்து என்னை வளர்த்தார். எங்க பாட்டனார் ஒரு கிழம் இருந்தது; அது எப்போதும் ஒரு புத்தகத்தை வைத்துக்கொண்டு அழுதுகொண்டிருக்கும். 'என்ன தாதா கதை?' என்று நான் கேட்பேன். அவர் என்மேல் சீறி விழுந்து "சீசகன் லங்கையின் ராணியாகிய குண்டோதரியைத் தூக்கிக்கொண்டுபோய்விட்டானும். அதற்காக துர்யோதனன் சண்டைக்கு வந்தானும்'' என்று ஏதேதோ சொல்வார். இந்த விஷயமெல்லாம் எனக்குச் சிறிதும் பிடிக்காது. ஆகையினால் நாங்களதைக் கேட்க மாட்டோம். ஏனம்மா! எதற்காகக் கேட்டீர்கள்?

நங்கை:—எதற்கு மில்லை, சரி; நான் மாலை சரியாக 4 மணிக்கு வருகிறேன், என்னுடைய தொகையைக் கொடுங்கள்—என்றாள். கந்தசாமியும் மற்றயோரும் ஆக்ஷேபனை இன்றி பேசிய தொகையை எடுத்துத் தாம்பூலத்தோடு சமர்ப்பித்துவிட்டார்கள்.

வந்த நங்கையும் இதை வெகு திருப்திகரத்துடனும், சிரித்த முகத்துடனும் பெற்றுக்கொண்டு "ஐயா! உங்கள் தயாளத்தன்

கள்ளைக்குடித்துக் குடித்துப் பிதுரார்ச்சித சொத்தை யெல்லாம் ஒழித்து ஓட்டாண்டியாகிய பிறகு நற்புத்தி வந்து தானே குடிப்பவர்களை மறியல் செய்து மகிழ்வது ஓர் அற்புதமற்றோ?

மைக்கு நான் மிக்க வந்தன மளிக்கின்றேன். சென்று வருகிறேன்" என்று விடை பெற்றுக்கொண்டு போய்விட்டாள்.

*   *   *   *   *   *

மாலை நான்கு மணிக்கு இந்தக் கூட்டத்தைச் சார்ந்த குண்டுணிநாதன், வம்பர் வினோதன், அறிவிலி தேவன், வயிற்றெரிச்சல்வள்ளல், கொள்ளி கோட்டான், கலகக்காத்தான், சச்சரவுகாத்தான், அனியாய அம்பலன், அக்ரம அரக்கன், தலை வெட்டி தாண்டவராயன் முதலிய அரிய பெரிய மனிதரும் இன்னும் அவர்களைப்போல அனேகரும் வீட்டை நிறைத்துக்கொண்டு வாட்டமாக உட்கார்ந்துவிட்டார்கள். அக் கூட்டத்தின் தலைவர்களாகிய கந்தன்' ராமன், க்ருஷ்ணன் ரங்கராஜன், முதலியோர் முன்னணியி லமர்ந்தார்கள். குறித்த நேரத்தில் கதை ஆரம்பிக்கும் பத்தியுடன் பூர்வ பீடிகையோடு கதை ஆரம்பிக்கப்பட்டது. அனுமந்தராமாயணத்தை அரிகதை செய்வதாகத் தெரிவித்தாள்.

“பூர்வம் மிதிலைமா நகரத்தின் இளவரசியாகிய ஜானகிக்குத் துருபத ராஜனின் மகளாகிய த்ரௌபதை, பீமராஜனின் மகளும் ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவின் தர்ம பத்தினியுமான ருக்மிணி, ராதா, சத்தியபாமா ஆகியவர்கள் வெகுநேசமுள்ளத் தோழிகளாக அமைந்திருந்தார்கள். சீதையுடன் இடைவிடாத சினேகிதைகளாக விளையாடி மகிழ்ந்த பெண்கள் தங்கள் விவாகத்திற்குப் பிறகு புக்ககம் சேர்ந்தார்கள். சீதையும் அயோத்தியை அடைந்தாள். சீதையின் சினேகிதைகளில் முதன்மை பெற்ற பாஞ்சாலி ஒரு தனி வீடு கட்டி க்ருகப்பிரவேசம் செய்ய ஏற்பாடு செய்தாள். அதற்காக சகலமானவர்களுக்கும் அழைப்புப் பத்திர மனுப்பினாள். எல்லா தேசத்து மன்னர்களும் வந்தார்கள். ஜானகியும் தன் பக்கத்து

தேச விஷயமும் சுயராஜ்ய மென்றால் என்ன, என்பதுவுமே தெரியாத ஜனங்கள் கூட காந்தி மகாத்மாவை அறியாமலில்லை. சுதேச விஷயமாகப் பிரசங்கம் செய்பவர்கள் காந்தியின் உறவு என்று சிலர் தீர்மானிக்கின்றார்கள். சிலர், என்ன உறவு என்றும் கேட்கிறார்கள்.

மனிதர்களுடன் வந்தாள். பிரிந்த தோழிகள் வெகு அன்புடன் மேன் மாடத்தில் உலாவியவாறு, பிரிந்த நாள் முதல் நடந்த கதைகளைப் பேசிக்கொண்டே மகிழ்ந்தார்கள்.

அந்த க்ரகப்பிரவேசத்திற்கு துர்யோதன மகாராஜா முதலியோரும் வந்திருந்தார்கள். பாண்டவர்கள் அமைத்துள்ள அப் புதிய மாளிகையின் பேரழகைக் கண்டு வியந்த துர்யோதன மகாராஜா அம்மாளிகை முற்றும் சுற்றிப் பார்க்க விருப்பங் கொண்டு ஒவ்வோரிடமாகப் பார்த்துக்கொண்டு வருகையில் அம்மாளிகையை அமைத்த மயன் என்ற கைதேர்ந்த வேலையாளியின் திறத்தைக் கண்டு மெச்சியவாறும், அதி ஆச்சரிய முற்றவாறும் பார்த்துக்கொண்டே செல்கையில் அங்கு மயன் வெகு சூட்சுமத்துடன் தாமரை மலர்களும், இலைகளும், நீலோத்பலம், ஆம்பல், கொட்டி முதலியவைகள் படர்ந்திருப்பது போலும் அழகான பளிங்குக் கற்களினாலமைத்த படித்துறைகளும், நீராழி மண்டபம், கரைமீது வேறு மண்டபங்கள், விருக்ஷங்கள் முதலியவற்றுடன் காற்றில் நீர் அசைவது போலவே தோற்றங்களைக் காட்டி வெகு அற்புதமாக சித்திரத்தினால் செய்திருந்தான்.

இந்த அதிமனோகரமான தடாகத்தைக் கண்ட துர்யோதனன் மிக்க மகிழ்ச்சி கொண்டு அத் தடாகத்தில் நீராடப் பிரியங்கொண்டு அதை உண்மை என்று எண்ணி தனது இராஜ உடைகளைக் களைந்து வைத்துவிட்டு ஓர் துண்டத்துடன் குளத்தில் இறங்கினான்; செல்லச் செல்ல முற்றும் வெறும் சித்திரமாக விருக்கக்கண்டு பெரும் ஏமாற்றமும், அவமானமும் கொண்டு சந்தடி செய்யாது கரை மீதேறி அப்படி இப்படி திரும்பிப் பார்த்துக் கொண்டே ஒருவரும் தன்னைக் கவனிக்க வில்லையே என்று மிக்க கவனத்துடன் பார்த்தபடி தன் உடைகளை மீண்டும் அணிந்தான். இந்த வைபவங்களை உபர

"காந்தி மகாத்மாவுக்கு வாமுடியல்லீங்களாம். அதுக்காவ. அவரு பொங்க வந்திருக்கிறாங்க'' என்று சந்தோஷமாகக் கூறிக் கொண்டு தேசத் தொண்டரை வணங்குகிறார்கள். நன்றாகப் படித்தவர்கள் என்று பட்டங் கொண்டவர்களை விட படியாத ஜனங்களுக்கு உள்ள பக்தி அதிகமாக இருக்கிறது.

உப்பரிகையில் உலாவும் பெண்மணிகளாகிய சீதை, த்ரௌபதை முதலியோர் பார்த்து தமக்குள், துர்யோதனனின் மவுட்டீக மதியை எண்ணி நகைத்தவாறு பின்னும் துர்யோதனனைக் கவனித்து வந்தார்கள்.

துர்யோதனன் அங்கிருந்து வேறு இடங்களைப் பார்த்துச் செல்கையில் அங்கு அழகிய சலவைக்கல் சுவற்றில் வெகு விநோதமாக ஓர் அறை அமைத்து அதன் கதவுகள் திறந்து வைத்திருப்பது போல சித்திரத்தினால் எழுதியிருந்தது. அதைக் கண்ட துர்யோதனன் அந்த அறைக்குள் வெகு விசையாக நுழைந்தான். வெகு வேகத்துடன் நுழைந்ததால் சுவற்றில் தலை பட்டார் என்று இடித்து விட்டது. "ஹா!" என்று கத்திக் கொண்டே தலையை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு நின்றான். மண்டையில் பட்ட வலி யொருபுறமிருக்கத் தன்னைப் பிறர் கண்டு பரிகஸிக்காதிருக்கிறார்களா வென்று முக்கியமாகக் கவனித்தான். இத்தகைய அபார புத்தியுடன் செய்துள்ள மயன்மீது வியப்பும், பொறாமையும் கொண்டான். இதையும் சீதை முதலியவர்கள் பார்த்து நகைத்தார்கள். இவைகளை துர்யோதனன் அறியான். அவன் தலையைத் தடவிக் கொண்டு வேறு இடத்திற்குச் சென்றான். அங்கு உண்மையாகவே ஓர் அழகிய அறை திறந்து வைக்கப் பட்டிருந்தது. அதைக் கண்ட துர்யோதனன் இந்த அறையும் சித்திரந்தான் என்று எண்ணி தன் தலையை மீண்டும் சுவற்றில் இடித்துக்கொள்ளாவாறு தான் சற்று விலகியே நின்று தன்னிரு கரங்களையும் நீட்டி முதலில் தடவி பார்த்தான். அது உண்மையான அறையாக இருக்கக் கண்டு வெகு ஆச்சரிய மடைந்து உள்ளே சென்றான்.

இவனுடைய மூடத் தன்மையைக் கண்டு நகைத்த பெண்மணிகள், இன்னும் என்ன நடக்கின்றது பார்ப்போம் என்று நினைத்

வெளியூருக்கு வருவதற்கு எல்லோருக்கும் ஆசைதான். ஆனால் பணத்தைப் பார்க்கும்போது கை உள்ளிழுக்கிறது. இலவசத்தில் செல்வதற்குக் கால் முன்னே வருகிறது. வெள்ளையப்பன் சும்மா வருவானா! அவனால்தான் இழுப்பும், குதிப்பும் இருக்கிறது.

துக் கவனித்தார்கள். பிறகு துர்யோதனன் வெளியில் வந்தான்; பின்னும் பார்த்துக் கொண்டே செல்கையில் ஓர் அழகிய பூங்காவனம் போல் ஒரு இடத்தில் மயன் சித்திரத்தினல் அமைத்திருப்பதை அறியாது அதில் புஷ்பித்திருக்கும் ரோஜா புஷ்பத்தைப் பறிக்கச் சென்று ஏமாற்ற முற்றுத் திரும்பினுன். துர்யோதனனுக்குள்ள மன நிலைமையைக் கூறத் திறமன்று. அவன் மீண்டும் சுற்றிக் கொண்டு செல்கையில் அங்கு உண்மையான தாமரைத் தடாக மிருப்பதைக் கண்டு இதுவும் முன்பு கண்டது போல சித்திரம் தான்'' என்று தீர்மானித்து வெகு ஜோராக தடபுடலாய் படிகளில் சாதாரணமாகக் காலை வைத்தான். அது உண்மையான படித்துறையாகையினல் தபீரென்று தடுக்கி விழுந்து படிக்களின் வழியாகத் தண்ணீரில் போய்ச் சேர்ந்தான். இந்த எதிர்பாராத பேராபத்தையும் அவமானத்தையும் அவனல் தாங்க முடியவில்லை. உண்மையான குளத்தை யறியாது இவ்விதம் மோசம் போய் விட்டோமே என்கிற அவமானமும், தன்னை இன்னிலையில் பிறர் பார்த்து விடப்போகிறுர்களே என்கிற பெரும் திகிலும் ஒன்று கூடி வதைக்கின்றன. தன்னை இவ்விதம் ஏமாற்றும் பொருட்டுத்தான் பாண்டவர்கள் செய்த சூட்சி இது'' என்று தீர்மானித்துக் கொண்டான். பாண்டவர் மீது கடுங் கோபங் கொண்டான். அந்தக் குளத்திலிருந்து மெல்ல நீந்தி படித்துக் கொண்டு எழுந்து கரை சேர்ந்து நிமிர்ந்து பார்த்தான்.

அப்போது இவனுடைய மூடத்தன்மையைக் கண்டு கொல்லென நகைத்த சீதை, த்ரௌபதை முதலியோரை துர்யோதனன் கண்டு விட்டான். அவ்வளவுதான்; ஆத்திரம் பொங்கி விட்டது. கோபத்தினல் கண்கள் சிவந்தன. ''ஹா! அடீ! த்ரௌபதை! சீதை! என்னைப் பார்த்து நீங்கள்; நகைத்ததை நான் மறக்க மாட்டேன். இருங்கள்.'' என்று தனக்குள்ளாகவே கறம் வைத்துக் கொண்டு

சிலர் சாதாரணமான இடங்களுக்குச் செல்வதற்கே தட் புடலான ஆடம்பரமும் அலங்காரமும் செய்து கொள்கிறுர்கள். சிலர் பெருத்த விவாக வீட்டிற்குச் சென்றுலும் மிகவும் சாதாரணமாகச் செல்கிறுர்கள். ஆடம்பரத்திலா அன்பு இருக்கிறது?

கரை ஏறினன். அப்போது அவ்வழியாகப் பார்த்துக்கொண்டு வந்த ராமரும், லக்ஷ்மணரும் துர்யோதனன் இவ்விதம் ஈரத்துடன் கரை ஏறுவதைப் பார்த்து வியப்புற்று "ஹா! துர்யோதன மகாராஜாவே! இதென்ன விது! இவ்விதம் திடீரென்று இராஜ உடையை நனைத்துக் கொண்டு ஏன் நிற்கின்றீர்கள்?" என்று ஸ்ரீராமபிரான் கேட்டார்.

இதைக்கேட்ட துர்யோதனன் முகமோ கொலை செய்தது போலவிருக்கிறது. முகத்தில் தெளிந்த களையே மறைந்தொழிந்து விட்டது. அவன் தனக்குற்ற அவமானத்தைத் தெரிவிக்க மனம் நாணி தன்னை யொருவாறு தேற்றிக்கொண்டு நகைத்தவாறு, "ஒன்றுமில்லை. எனக்கே எப்போதும் நல்ல தடாகத்தைப் பார்த்தால் நீராடவேண்டுமென்ற வேட்கை யதிகம்; அதோடு மிக்க வெறுக்க மாயு மிருந்ததால் நீராடினேன். உடைக்கென்ன. வேறு அணிந்தாற் போகிறது." என்று வெகு காம்பீரமாகக் கூறினன்.

இதுகேட்ட ராமன் தனது தூதுவனாகிய ஆஞ்சநேயரை அழைத்து "ஆஞ்சநேயா! இந்த மகாராஜாவை அழைத்துச் சென்று நல்ல உயரிய இராஜ உடை கொடுத்து ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மா வின் சன்னிதானத்தில் கொண்டுவந்து சேர்' என்று ஆஞ்ஞாபித்தார்.

இதைக் கேட்ட ஆஞ்சநேயர் ஒரே தூக்காக துர்யோதனனைத் தூக்கித் தன் தோளின் மீது வைத்துக் கொண்டு வெகு வேகமாக நடக்கத் தொடங்கி, உடனே பறக்கவும் ஆரம்பித்து விட்டார். துர் யோதனனே தன்னை எங்கு குரங்கு அழைத்துச் செல்கிறது. எங்கு தான் இப்போது சென்று கொண்டிருக்கிறோம் என்பதே அறியாது தத்தளிக்கின்றான். அபாரமான திகில் மனத்தில் வதைக்கின்றது. பயம் பாதிக்கின்றது. என்ன செய்வான் பாவம், தனக்கு ஏதோ தீங்குதான் நேரிட்டு விட்டது என்று மனம் துணிந்து விட்டான்.

சில வாலிபர்களுக்கு தம் மாமியார் வீடு செல்வதென்றால் என்ன சந்தோஷம். என்ன குதிப்பு. அப்பப்பா. அட்டகாஸமே! சொல்ல வேண்டாம். வீட்டில் வேண்டா மென்ற வார்த்தைகளும் காற்றில் பறந்து விடுகிறன. மாமியார் வீட்டு மகிமையை அறிந்தோர்க்கு அதன் ருசி தெரியுமோ, என்னவோ!

பாண்டவர்கள் ஏதோ சூட்சி செய்து தன்னைக் கொன்று விடும்படி இந்தக் குரங்கின் வசம் நம்மைக் காட்டிக் கொடுத்து விட்டதாகத் தீர்மானித்துப் பாண்டவர்கள் மீது கடுஞ்சினங் கொண்டு திட்டுகிறான். ஆஞ்சநேயரை நோக்கி, "அடேய்! குரங்கே! என்னை எங்கு கொண்டு செல்கிறாய்! எதற்காக இவ்விதம் பறக்கின்றாய்? வேண்டாம். என்னை என் சொந்த விடத்தில் சேர்த்து விடு. இல்லையேல் நான் உன்னை சும்மா விடமாட்டேன். என்னை யாரென்று எண்ணினாய்? நான் ராஜாதிராஜன். துர்யோதன சக்ரவர்த்தி என்பதை மறக்காதே! என்னுடைய பராக்ரமத்தை நீ யறியாமல் இவ்விதம் என்னை இறுக்கிப் பிடித்து ஆட்டுகின்றாய்! என் மகிமையை உலகமே அறியும். நீ இப்போது விடுகிறாயா, இல்லையா! மரியாதையுடன் விட்டு விடு. இல்லையேல் நான் என் மாமன் சகுனியிடம் சொல்லி உன்னை சக்கை யாக்கி விடுவேன். இல்லையேல் எங்கள் த்ரோணாசாரியரிடம் சொல்லி உந்தன் வாலை வாங்கி விடுவேன், எங்கள் கர்ணனிடத்தில் சொன்னால் உன்னைச் சூர்ணம் செய்து விடுவான். ஜாக்ரதை. என் பிதா திருதராட்டிரரிடம் தெரிவித்தால் உன்னைப் புரட்டி யடித்துவிடுவார். உம். விடு." என்று எத்தனையோ வாய்ப் பறை சாற்றுகின்றான்.

இந்த வார்த்தைகளை எல்லாம் சற்றும் ஆஞ்சநேயர் செவியில் கொள்ளாது மான்வேக மனோவேகமாகப் பறந்து இந்திர மண்டலம், சந்திர மண்டலம், வாயு மண்டலம், நக்ஷத்திர மண்டலம் முற்றும் பறந்து பிறகு நடுக்கடலின் மத்தியிலுள்ள ஓர் திட்டான விடத்தில் துர்யோதனனை இறக்கி விட்டுத் தான் ஒரு புறமாக உட்கார்ந்தார்.

நாற்புறமும் கருங்கடல் சுற்றிக் கொண்டிருப்பதைக் கண்டு துர்யோதனனின் இருதயம் நடுங்குகின்றது. என்ன செய்வ

வேட்டகத்து மனிதர்களைக் கண்டு விட்டாலே சில காளைகள் தலைகால் தெரியாது குதிக்கின்றார்கள், அவர்களுடன் பேசுவதும், அவர்களை உபசரித்தனுப்புவதுமே ஓர் தனித்த புதிய தினுசாகி விடுகிறது. அவர்களிடம் சர்க்கரை இருக்கிறதோ, என்னவோ!

தென்று அறியாமல் மிக்க பயந்து நடுங்கிப் போய் விட்டான். தன்னைக் கடலில் தள்ளிக் கொன்று விடுவதற்காகத் தான் இக் குரங்கின் வசம் தன்னை அனுப்பி விட்டதாக நினைத்து அபாரமாக வருத்த முற்று இடிந்து போய் விட்டான்.

அச் சமயத்தில் லங்காதிபதியாகிய ராவணேச்வரன் கைலாயநாதனுக்குப் பூஜை செய்து விட்டு புஷ்பக விமானத்தில் ஆகாயமார்க்கமாய் வரும்போது இங்கு இந்தத் தீவில் ஒரு குரங்கும் ஒரு மனிதனும் இருப்பதைக் கண்டான். அவ்வாறு கண்ட வுடன் "இவர்கள் யார்? எதற்காக இங்கு உட்கார்ந்திருக்கிறார்கள்?" என்பதை அறியும் பொருட்டு ராவணேச்வரன் இறங்கி இந்த விடத்திற்கு வந்தான். வந்த உடனே துர்யோதன மகாராஜாவைக் கண்டதும் ஆச்சரியமுற்று "ஆ ராஜாதி ராஜ ராஜமார்த்தாண்ட, ராஜ கம்பீர, ராஜ ஒய்யார, ராஜசேகர துர்யோதன மகாராஜா வல்லவா தாங்கள்! தாங்கள் இங்கு எதற்காக வந்தீர்கள். ஏன் கண்ணில் நீர் வடிகின்றது. இந்தக் குரங்கு எதற்கு இங்கு உட்கார்ந்திருக்கிறது. விஷயமென்ன?" என்று வினவியவாறு ஆலிங்கனம் செய்து கொண்டான்.

ஆதியில் துர்யோதனனும் ராவணனும் வெகு சிநேகிதர்களாக விளையாடியவர்கள். அநேக விதத்தில் இவர்கள் மிகவும் ஒன்று பட்ட குணத்தினர்கள்; ஆதலால்தான் அவர்களின் சிநேகம் செழித்து வளர்ந்து விட்டது. இராவணனின் வார்த்தையைக் கேட்ட துர்யோதனன் "அண்ணா! நீங்கள் என் விஷயத்தில் சமய சஞ்சீவிபோல வந்தீர்கள். நான் எனக்குற்ற ஆபத்தை என்னவென்று கூறுவேன். எனது விரோதிகள் தங்கள் எண்ணத்தை நிறைவேற்றும் பொருட்டு இவ்விதம் செய்து விட்டார்கள்." என்று நடந்தவற்றைக் கூறி "அண்ணா! அந்த சிறுக்கிகள் நகைத்தது தான் என் மனத்தைப் பிளக்கின்றது." என்று வருத்த முற்றுப் புலம்பினான்.

சிலர் பெரியவர்களின் தலையில் மூட்டையைத் தள்ளி விட்டுத் தாமே சகல வேலையையும் இஷ்டம் போலச் செய்து விடுகிறது. பிறகு அதில் கேள்வி பிறக்கும் போது பெரியவர்கள் சொல்லியபடிச் செய்ததாக மீண்டும் பழியைச் சுமத்துவது. இது எந்த பள்ளியில் படித்த தந்திர நீதியோ தெரியவில்லை.

இது கேட்ட ராவணன் இருபது கண்களும் சிவக்க, மீசை துடிக்க "ஹா! துர்யோதனா! உன்னைப் பார்த்தா இவ்விதம் நகைத்தார்கள். அறிந்தேன். அறிந்தேன். அந்த சிறுக்கி த்ரௌபதையின் சூட்சியினால்தான் மயன் நீ ஏமாறும் வண்ணம் அமைத்திருக்கிறான். அவளுக்குத் திருட்டுப் பயலான க்ருஷ்ணன் பக்க பலம் என்று திமிர் பிடித்து விட்டது. உன்னைக் கொன்று விடுவதற்குத்தான் இந்தக் குரங்கின் வசம் அனுப்பி இருக்கிறார்கள். நான் இருக்கும்போது உனக்கு இனி குறைவில்லை. இந்தக் குரங்கினால் என்ன செய்ய முடியும். அதை ஒரே அறையாக அறைந்து தள்ளி விட மாட்டேனா! கேவலம் ஓர் குரங்கினிடத்திலா மகாராஜனாகிய லங்காதிபதி பயப்படுவது. சேச்சே; இதை ஒரு நிமிடத்தில் ஒழித்துவிடுவேன். இனி நீ பயப்படாதே! துர்யோதனா! உன்னைப் பார்த்து நகைத்த நாரீகளை சும்மா விடலாகாது. உன்னைக் கண்டு ஏளனம் செய்த ஜானகியை நான் தூக்கிச் சென்று சிறைவைத்து அவளையும் அவள் புருஷனையும் படாத பாடு படச் செய்து விடுகிறேன். அந்தத் த்ரௌபதையை நீ உன் வீடு கூட்டும் அடிமையாக்கிக் கொண்டு அவளைப் பழிக்குப் பழி தீர்த்து விடு. இது தான் தக்க யோசனை. என்ன சொல்கிறாய்?" என்றான்.

இது கேட்ட துர்யோதனன் பெருமிதமடைந்து, "அண்ணா! உங்கள் யோசனை ஒவ்வொன்றும் ஓர் வைர மணியல்லவா! அதற்கு ஆக்ஷேபனையோ, சமாதானமோ உண்டா! தாங்கள் சொல்லியது போலச் செய்தால் தான் என் மனம் நிம்மதியடையும். அவ்விருவர்களையும் இலேசில் விடலாகாது. அவ்விதமே செய்து முடித்து விடுவோம். நான் ஓர் புதிய மாளிகையைக் கட்டி அதற்கு க்ரகப் பிரவேசம் செய்கையில் அவர்களை அழைத்து பெருத்த சபையில் மானத்தையே வாங்கக் கூடிய செய்கையைச் செய்துவிடுகிறேன்." என்றான்.

நன்றாகப் பாடத் தெரிந்தவர்கள் பாடுவதற்குப் பெருத்த பிகு செய்கிறார்கள். தெரியாதவர்களோ 'பந்தியில் வேண்டாம் என்றால் இலை பொத்தல்' என்பது போல எங்கு சமயம் வாய்க்கும் என்று அபசுரப் பாடலைத் தொடங்கி விடுகிறார்கள். அதனால் உண்டாகும் தலை நோயோ! சொல்ல முடியாது.

இதுகேட்ட ராவணன் "சபாஷ்! மெத்த சந்தோஷம். துர்யோதனு! அப்படித்தான் செய்ய வேண்டும். வீரன் செய்யும் வேலை இதுதான். நீ இப்போது அங்கு செல்ல வேண்டாம்; என்னோடு இலங்கைக்கு வந்து விடு. அங்கு நான் உனக்குப் பெரியதோர் விருந்து செய்து, பிறகு உனது வாசஸ்தானத்தில் கொண்டு சேர்க்கிறேன். இந்த குரங்கு வாய் திறக்காது உட்கார்ந்திருக்கிறதே! என்ன காரணம்...............இதென்ன! குரங்கு என்ன செய்யும்? சரி. இதை அடித்து ஓட்டி விடலாம். இல்லையேல் என் விமானத்தின் காலில் கட்டித் தொங்கவிட்டுக் கொண்டு போய் விடலாம். எழுந்திரு" என்று கூறிவிட்டுப் பிறகு குரங்கைப் பார்த்து "ஏ! குரங்கே! என்ன கண் மூடித் தவம் செய்கிறுய்! உன்னுடைய மாயாவேஷம் இந்த இராவணனிடத்தில் பலிக்காது. எழுந்து மரியாதையாக ஓடி விடுகிறுயா? அன்றி ;ஓரறை விட்டுக் கட்டிப் பிடிக்கட்டுமா?" என்றுன்.

மகாவீரம் பொருந்திய பராக்ரமசாலியாகிய ஆஞ்சநேயரா இந்த அசுரப் பதர்களின் வார்த்தைக்குப் பயப்படுவார்? இங்கு நடந்த சகலத்தையும் வெகு கவனமாக கேட்டுக் கொண்டு ஒன்று மறியாதவர்போல உட்கார்ந்திருக்கிறுர். இராவணன் கூப்பிட்டதற்குப் பதிலே சொல்லாதிருந்தார். பிறகு ராவணன் அதட்டிய குரலினுல் 'ஏ குரங்கே! என்ன பதில் பேசவில்லை? உன்னைப் பிடித்து என் விமானத்தில் கட்டிவிடுவேன். இல்லையேல் மரியாதையாகப் போய் விடு.'' என்றுன்; அதற்கும் ஆஞ்சநேயர் அசைய வில்லை யாதலால் ராவணனும் துர்யோதனனும் அடங்காத கோபங்கொண்டு இருவருமாகச் சென்று குரங்கின் இரு கரங்களையும் கெட்டியாகப் பற்றி இழுத்தார்கள்.

விச்வரூபம் காட்டக் கூடிய சக்தி வாய்ந்துள்ள ஆஞ்சநேயர் ஓர் பெரிய பர்வதமாக இருந்து விட்டார். இவ்விருவரும் இழுத்துப்

''நீ இந்த காரியம் செய்தாய் என்று உன்னை நான் எவ்விதம் தூற்றுவது. ஒருக் கால் நானும் இதையே செய்வேனே என்னவோ! எவ்வாறு உறுதி கூற முடியும்?''என்று சிலர் தந்திரமாகப் பேசுகின்றுர்கள். அவர்களும் இந்த பாதையில் நடக்கத் தீர்மானித்திருக்கிறுர்கள் என்பது நன்றுக விளக்கி விடுகின்றது,

பார்த்து அசையாமையினால் மனந்திடுக்கிட்டது. "பார்ப்பதற்கு மிகவும் கேவலமான குரங்கு என்ன கனம் கனக்கின்றது! இதை விடுவதில்லை, துர்யோதனா! உம், நன்றாக இழு" என்றான் ராவணன். "ராவணா! விடாதே! பிடித்துக்கொள்" என்கிறான் துர்யோதனன். இவ்விதம் இவர்கள் இழுத்து இழுத்துக் கைகள் சலிப்படைந்து விட்டன. பார்த்தார் ஆஞ்சநேயர். தன்னிரு கரங்களையும் ஓர் பெரிய தூணாகச் செய்து கொண்டார். தனது சமய சஞ்சீவியாகிய வாலைத் தட்டிவிட்டு இரு பாகமாகப் பிரித்து அதைக்கொண்டு தூணில் இவர்களைப் பிணைத்துக் கட்டுவதேபோல தன் கரத்திலேயே வைத்து நன்றாக இறுக்கி ஒரு இமைப் பொழுதில் கட்டி விட்டார்.

இந்த எதிர்பாராத செய்கையைக் கண்ட இருவரும் நடு நடுங்கி விட்டார்கள். "ஐயோ! உண்மையில் இது குரங்கல்ல. இது பேயோ பிசாசோ தெரியவில்லை. என்ன அனியாயம்! இவ்விதம் கட்டிவிட்டதே! ஏ குரங்கே! வேண்டாம். நாங்களிருவரும் இன்னா ரென்று நீ அறிந்து கொள்ளாது இவ்விதம் கட்டிவிட்டாய். விடு விடு. பிறகு உனக்குப் பெரிய ஆபத்தாக விளையும்" என்று மிக்க பய முறுட்டினார்கள்.

இது கேட்ட வீர ஆஞ்சநேயர் பெரிதாக கல கல வென்று நகைத்துக் கொண்டே "அடேய் இராக்ஷசப் பாதகர்களே! உங் களையா நானறியமாட்டேன், உங்கள் முப்பாட்டனையும் நானறிவேன். என்னையும் என் குலதேவதையையுந்தான் நீங்களறியமாட்டீர்கள். அறியும் திறன் உங்களிடமில்லை. ஆகையினால் அதை அறியும் படியான பாக்யத்தை இனியேனும் செய்யுங்கள்" என்றார்.

இராவணனுக்கும் துர்யோதனனுக்கும் மூச்சுத் திணறு கின்றது. வாலின் கட்டு இன்னும் அதிகமாக இழுக்கின்றது. தேகம் பூராவும் வலி தாங்க முடியவில்லை, என்ன செய்வதென் றறியாது

ஒருவர் செய்யும் வேலையைக் கெடுப்பதற்கு மற்றவர் எத்தனையோ விதத் தில் முயல்கின்றார்கள். ஆனால் அவர்கள் செய்தது பிசகு என்பதைக் கடவுள் அவர்களையே அறியும்படியாகச் செய்து விடுகிறார். முதலிலேயே பதட்ட மின்றி இருந்தால் துன்பமேது?

தத்தளிக்கின்றார்கள். இராவணன் கடுஞ்சினங் கொண்டு "அடேப் குரங்கே! நீயா என் முப்பாட்டனை அறிவாய்! இருக்கட்டும். உன்னுடைய உயிரை வாங்க வாலி, சுக்ரீவன் ஆகிய இரு வீராதி வீரர்கள் இருக்கின்றார்கள் பத்திரம். விட்டு விடு. அவர்கள் வந்து விட்டால் உன்னை அழித்து விடுவார்கள்" என்றான்.

ஆஞ்சநேயா:—ஹ ஹ் ஹ் ஹ் ஹா! அடேப் பதரே! வாலியி னுடைய குழந்தையான அங்கதனின் தொட்டிலில் நீ தொங்கினது நான் அறியாதது என்று நினைக்கிறாயோ! போடாப் பயலே! வாலி சுக்கிரீவர்கள் என்னுடைய இனம்; எங்கள் அரசர் என்பதை மற வாதே! என்னினம் என்னைக் காக்குமேயன்றி தாக்காது. உன் பெருமை பேச வேண்டாம்.

துர்யோதனன்:—ஆ! அடே குரங்கே! அவர்களைத் தான் உன் னினம் என்றாய்! இதோ என்னுடைய சகோதரனாகிய பீம சேனனின் கதை உன் தலையை வாங்கிவிடும் என்பதை மறக்காதே! பீமசேனனின் பராக்ரமத்தை நீ அறியமாட்டாய்! அவன் என்னு டைய சிறிய தந்தையின் மைந்தன். என்னைக் காப்பதற்குப் பின்னடைய மாட்டான். ஜாக்ரதை விட்டு விடு.

ஆஞ்சநேயர்:—ஆ ஹா ஹா ஹா! பேஷ்! சபாஷ்! உங்கள் அறி விலாத் தன்மையை அறியாதவர்களிடம் உங்களுடைய மிரட்டல் பலிக்குமே யன்றி என்னிடமா பலிக்கும். மூட அற்பப் பதரே! பீம ஸேனன் யார், நான் யார்! என்பது உனக்குத் தெரியுமா! உனக்கு அவன் பங்காளி! வெகு நாளைய த்வேஷிகள் நீங்கள். உனக்கு பீமன் சிற்றப்பனின் மகனே யன்றி சொந்த உடன் பிறந்தானில்லை. பயலே! அந்த பீமன் யார் தெரியுமா! என்னுடைய உடன் பிறந்த அண்ணன்.

"நாம் சம்பளங் கொடுக்கிறோம் அவர்கள் வேலை செய்கிறார்கள்" என்கிற மமதையினால் சிலர் அவர்களின் வேலைத் திறத்தையும் யோக்யதையையும் மதியாது அதிகாரம் செய்து உதாசீனமாகப் பேசி விடுகிறார்கள். அந்த வேலையாள் இல்லா விட்டால் நம் கதி என்ன வாகும் என்பதை அப்போது கவனிப்ப தில்லை. அந்த வேலை செய்பவர் நின்று விட்டால் தன் நிலைமை நன்றாகத் தெரிகிறது.

எனது பிதா வாயு பகவான்; பீமனை ஈன்ற வரும் வாயுபகவான். நாங்களிருவரும் ஒரே தந்தையின் உதிரத்தில் பிறந்தவர்கள் என்பதை மறக்காதே! என்னுடைய உடன் பிறந்த அண்ணன் எனக்கின்றி பங்காளியும் பரமத்வேஷியுமான உனக்கு ஒரு போதும் உதவி செய்ய மாட்டான். ஜாக்ரதை; மலைக்காதே! இராக்கதப் பதர்களே! நீங்களிருவரும் பேசிக் கொண்ட சகல விஷயங்களையும் இந்த ராம தூதன் கேட்காமலில்லை. அடேய் ராவணா! ஜானகியை சிறை பிடிப்பேன் என்று நீ சொல்லியதை நான் மறக்கவில்லை லோகமாதாவாகிய அந்த அம்மாளை நீ சிறை பிடிப்பது எதற்குத் தெரியுமா! நீயும், உன் குலமும், உன் இலங்கையும் அழிவதற்குத் தான் என்பதை மறக்காதே! அந்த ஜானகி உன் இலங்கையில் சிறை வந்த உடனே நானே உனது லங்கையை தீயிட்டுப் பொசுக்கி விடத் தயாராக வருவேன் என்பது உனது ஞாபகத்திலிருக் கட்டும் ஜானகியைப் பற்றி மனத்தில் நினைத்த இன்று முதல் உனக்கு விநாசகாலம் சமீபித்து விட்டதென்பதைத் திட்டமாக நம்பு. எனது குலதேவதையின் பாணம் உன்னை சும்மா விடாது. என் அன்னையை சிறை வைக்கும் ஆசையை விட்டொழித்தால் பிழைத்தாய். இல்லையேல் இறந்தாய். அவளை ஒன்றும் செய்வதில்லை என்று கூறு. வாளா விருக்காதே! ......அடேய் துர்யோதனா! த்ரௌபதியையா நீ மானபங்கம் செய்யப்போகிறாய். உனது குலமும் நீயும் இப்போதே நாசமாகி விட்டாய் என்று எண்ணு. மகா உத்தமியின் கண்ணீர் உன்னை ஒழித்துவிடும். நீங்கள் இருவரும் இருவரையும் ஒன்றும் செய்ய வில்லை என்று தெரிவித்தால்தான் உங்களை விடுவேன், இல்லையேல் இச்சமுத்திரத்திலேயே உதிர்த்து விடுவேன்" என்று கூறியவாறு சடக்கென்று எழுந்து பறக்க வாரம்பித்தது.

இந்த வார்த்தையைக் கேட்ட இருவருக்கும் அசாத்திய பயமும், அபாரமான திகிலும் உண்டாகி விட்டது. என்ன செய்வது

ஒரு காலத்தில் தன்னிடத்தில் அன்பாக சினேகம் செய்து...பிறகு பிரிந்து விட்டவர்களை, மாற்ற மில்லாத மனது சதா நினைத்து ஏங்குகின்றது. பிரிந்தவர்கள் மனமோ, என்ன கல்லோ! இரும்போ! பெரும் பாறையோ! தெரியவில்லை. அன்பிருந்த மனத்தில் அவ்வன்பு ஒழிந்து விட்ட வேடிக்கை தான் என்னே! அடா டா டா! நினைக்கின்...

என்பதை யறியாது தவிக்கின்றார்கள். எனினும் துர்யோதனன் தான் தப்பினால் போதும் என்று எண்ணி "ஆஞ்சநேயா! நான் தெரியாத தன்மையினால் இவ்விதம் சொல்லி விட்டேன். உன் பராக்ரமத்தை அறிவேன். என் அண்ணனின் உடன்பிறந்த நீ எனக்கும் உடன் பிறந்தவன் போன்றுதான் ஆகிறாய். ஆதலால் என்னை விட்டு விடு. நான் உன் வாக்கின்படி நடக்கின்றேன்" என்றான். மகா அகந்தை கொண்ட அரக்கனாகிய இராவணேச்வரன் "ஏ குரங்கே! உன் மிரட்டலுக்கு நான் அஞ்சேன்" என்று மேலே சொல்வதற்குள் ஆஞ்சநேயர் ஆத்திரத்தோடு திடீரென்று சமுத்திரத்தில் அவனைத் தள்ளி விட்டு "பயலே! உன்னை என் குல தெய்வம் பார்த்துக் கொள்ளும்." என்று கூறி விட்டு துர்யோதனனை மட்டும் அழைத்துக் கொண்டு பாண்டவர்களின் இடத்தில் வந்து புதிய உடையளித்துப் பின் சபையில் கொண்டு நிறுத்தினார்.

கீழே விடப்பட்ட துர்யோதனன் பாடு திண்டாடிவிட்டது. இன்னமும் ஆஞ்சநேயர் வாலில் கட்டுண்டிருப்பதாகவே நினைத்து நடுங்குகின்றான். தனக்குற்ற சம்பவம் எதையும் வெளியில் சொல்லிக்கொள்ள வெட்கி வாளா விருந்து விட்டான். பிறகு க்ரகப்பிரவேசத்தில் கலந்துகொண்டு காரியம் முடிந்ததும் எல்லோரும் தம் தம் வாசஸ்தானம் போய்ச் சேர்ந்தார்கள். இதுதான் அநுமந்த கதம்ப ராமாயணம்" என்று கூறிக் கதைக்குள்ள ஒழுங்குபடிக்கு ஆங்காங்கு பாட்டுக்களுடன் வெகு இனிமையாகச் செய்து முடித்தான்.

இந்த கதம்ப ராமாயணத்தைக் கேட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கும் ஜனங்களின் தன்மையை நாம் முதலிலேயே விளக்கிக் காட்டி இருக்கிறோம். அவர்கள் இந்த கதையை அதி ச்வாரஸ்யத்துடன் கேட்டு அங்காங்கு கரகோஷம் செய்து வெகு உற்சாகத்தை

"என் சிநேகிதையை ஒரு நிமிடம் பாராவிட்டால் உயிர் நீங்கி விடும் என்று கூறிய மனிதர்களே எத்தனையோ யுகக் கணக்காக அந்த மனிதர்களைப் பாராமல் சுகமாகவே ஜீவிக்கின்றார்கள். முன்பு சொல்லிய வார்த்தை ஏட்டில் எழுதி படிக்கக் கூடியதே யன்றி உண்மையாக அன்புடன் கூறியதா! இல்லை; இல்லை.

யடைந்தார்கள். ஏனெனில் பகவானுடைய அவதார மகிமையையும், கதாபாகத்தையும் அனுப்பிரமாணமும் அறியாத மூடர்களாகையி னல் இந்த கதம்பத்தையே அவர்கள் ஆனந்தமாகக் கேட்டார்கள்.

கதை முடிவடைந்தது. எல்லா அறிவிலிகளும் "ஹா! ஹா, கதை என்ன அழகு;என்ன ருசி.!" என்று வாய்ப் பறை சாற்றுகின் றார்களே யன்றி இந்த கதம்ப ராமாயணத்தில் கூட அவர்களுக்குக் கருத்தில்லை. எல்லோரும் அந்த மின்னலைப் புகழ்ந்து பேசி அவளை வெல்லத்தை ஈ மொய்ப்பது போல மொய்த்துக் கொண்டார்கள். பிறகு கூட்டம் கலையத் தொடங்கியது. அந்த மாதரசி அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டுத் தான் இறங்கியுள்ள விடுதிக்குச் சென் றாள். அவளை இவ்விடத்திலேயே இருக்கும்படி இந்த கூட்டத்தினர் கெஞ்சியும் அவள் இருக்க மறுத்து விட்டு வீட்டிற்குச் சென்று ஆடை யாபரணங்களைக் களைந்து பின் சாப்பாட்டிற்கு வருவதாய்த் தெரிவித்துச் சென்றாள்.

இந்த அறிவிலிகள் பஞ்ச பக்ஷ பரமான்னத்துடன் விருந்து சமயல் செய்து தயாராக வைத்துக் கொண்டு அந்தப் பெண் தேவதை வரும் வழியை எதிர் நோக்கிக் கொண்டிருந்தார்கள். அத் தருணம் ஒருவன் ஒரு கடிதத்தைக் கொணர்ந்து கந்தசாமியிடம் நீட்டினன். கந்தசாமி அதை ஆவலோடு உடைத்துப் படிக்கலானான்.

"அறிவு இன்ன தென்றறியா அன்பர்களே!

மகா லோபிகளாகிய உங்கள் விஷயங்கள் பூராவும் மகாஉத்தமி யாகிய ஓர் பெண்மணியின் மூலமாயும் இன்னும் மற்றொரு கனவான் மூலமாயும் அறிந்தோம். கடவுள் அருமையான ஆறறிவும் கொடுத்து மானிட ஜென்மமாய் உங்களைப் பிறப்பித்திருந்தும் உங்கள் மூட மதியை நீங்கள் விருத்தி செய்துகொண்டு உங்களையும் உங்கள்

என்றும் ஒரே சீராக விருக்கும் சிநேகிதத்திற்கு இணை வேறு எதுவு மில்லை. உள்ளொன்றும் புறமொன்றும் வைத்துக் கொண்டு சில நாள் மிகுந்த அன்பைக் காட்டுவதும்......பிறகு அடியோடு மறப்பதுமான செய்கை யற்ற சிநேகிதைகள் பொறுக்கினல் சிலர்தான் கிடைப்பார்கள்.

செல்வத்தையும் அடியோடு பாழாக்கிக் கொண்டு வருகின்றீர்கள். தற்போது நமது தேசம் எந்த நிலைமையில் இருக்கின்றது என்ற விஷயத்தை நீங்கள் அறிவதற்கு உங்கள் மதி உங்களுக்கு இடம் கொடுக்க வில்லை. கேவலமான சிற்றின்பத்தில் உங்கள் அறிவு அழிகின்றது. அனியாயத்திற்கே உங்கள் பணம் செல வழிவதை நான் அறிந்தேன். அதைக் கேட்க என் மனம் தத்தளித்தது. நான் இத்தகைய செல்வத்தில் பிறந்திருப்பின் என் செல்வம் முற்றும் ஏழை மக்களின் கண்ணீரை ஆற்றி, வயிற்றை மகிழச் செய்து என் மனத்தைக் களிக்கும்படியான வழியில் நான் செய்வேன். செல்வம் படைத்து விட்டதனுலேயே அதை விமரிசையாயும் சத் விஷயத்திலும் செலவழிக்க அறிவில்லாத, மனமில்லாதவர்கள் மிருகத்திற்கும் கடையவர்கள் தான் என்று நான் திட்டமாகக் கூறுவேன். ஏனெனில் மிருகத்தை விட நீங்கள் எந்த அம்சத்தில் உயர்ந்திருக்கின்றீர்கள். மிருகங்களும் பட்டினி இன்றிப் புசிக்கின்றன. நீங்களும் புசிக்கின்றீர்கள். அவைகளும் உறங்குகின்றன. நீங்களும் உறங்குகின்றீர்கள். உங்களுக்கு டஜன் கணக்கில் குழந்தைகள் பிறக்கின்றன வென்று நீங்கள் ஜம்பம் செய்யலாம். அதிலும் அதிசயமில்லை. நாயின் பின்னே நான்கும், பன்னியின் பின்னே பத்துமாகக் குட்டிகள் செல்கின்றன. ஆகையினுல் அவற்றை விட நீங்கள் எதில் ஏற்றமாக இருக்கிறீர்கள். இன்னும் ஆராய்ந்தால் மிருகங்கள் செல்வத்தைப் படைக்க வில்லை. அதன் மூலம் பாபத்தைச் செய்ய வில்லை. ஆகையினுல் நீங்கள் தான் மிருகத்தை விடக் கேவலமாக விருக்கின்றீர்கள். நான் கேவலமாகக் கருதும் தாசியின் குலத்தில் உதித்தவளாயினும் என் மனத்தில் தேசாபிமானமும் ஏழைகள்மீது இரக்கமும் இயற்கையாகவே ஜனித்துள்ளது. என் மனத்தில் கடவுள் இரக்கமான தன்மையை அளித்து அதற்கு வழியையும் காட்டி இருக்கின்றூர். அதாவது எனக்குள்ள அறிவைக் கொண்டு நான் கதைகள் செய்யவும், பாட்டுக் கச்சேரி, சதுர்க்

சில சினேகிதைகள் தாம் வெகு நாட்களாக மறந்து விட்ட ஒரு சினேகிதையை எங்கே தான் பார்க்க நேரிட்டு விடுமோ என்கிற பயத்தினுலேயே அவர்களை அழைத்த வேறு சினேகிதையின் கல்யாண வீட்டிற்கு வர மாட்டேனென்று தாராளமாகக் கூறி விடுகிறூர்கள். இதுவும் ஒரு வேடிக்கை தான்.

கச்சேரி முதலியன செய்பவும் அப்யசித்திருக்கிறேன். கடவுள் அதன் மூலமாக எனக்களிக்கும் பணத்தை நான் ஒரு காசையும் அனியாயமாகச் செய்யாமல் ஏழைகள்பிழைக்கும் வழியிலேயேசெல விட்டு வருகிறேன். நான் எனது ஜனன பூமியில் ஏழைகள் பிழைக் கவும், நாடு செழிக்கவும், அன்னிய ஆடையை அகற்றவும் சாதன மாக ஓர் சங்கம் ஸ்தாபனம் செய்து அதில் அனேக சர்க்காக்களைப் போட்டுவைத்திருக்கிறேன். ஏழைகள் பஞ்சு கொட்டை நீக்குதல் முதல் கதர் துணிகளை விற்பதற்குச் சரியான வரையில் வேலை செய்து பிழைக்கின்றார்கள். இதனால் கதரும் அபிவிருத்தியா கின்றது.

சகோதரர்களே! உங்களுடைய மூடத்தன்மையினால்—கண் மூடித்தன்மையினால், சிற்றின்பப் பித்தினால், அறிவற்ற போக்கி னால்—எனக்குக் கொடுத்த பணத்தை நான் ஏழைகள் உய்யும் வழி யில் செலவு செய்வேனே யல்லாது ஒரு பைசாவும் வீணாகாது என் பதை நிச்சயமாக நம்புங்கள். நான் தருமம் செய்வதாக உங்களி டம் ஏமாற்றி மோசம் செய்து காசைப் பறித்துவிட்டதாக எண்ண வேண்டாம். நீங்கள் எந்த மூட மதியுடன்—இருளடைந்த மனத் துடன்—பணத்தைக் கொடுத்தீர்களோ, அந்தப் பணத்தினாலேயே உங்கள் மனத்திலுள்ள இருளை யோட்டி உங்களைத் திருத்துவ தற்கே நான் முன் வந்தேன். உங்கள் அபிப்பிராயப்படிக்கு இனி எந்த விஷயத்திற்கும் எதிர்பார்க்கவேண்டாம். உங்கள் பணத்தின் மூலம் ஆயிரக் கணக்கான ஏழை மக்கள் பிழைக்கவும் உங்களை அறி யாது அந்த பலன் உங்களுக்குக் கிடைக்கவும் நீங்கள் பாக்கியம் செய்து விட்டீர்கள்.

கடவுளின் கர்ணாம்ருதமான விஷயங்களின் மீது சற்றும் விருப் பமும், பரிச்சயமும் அற்ற உங்களின் ஞான பரிபக்குவத்தை அறிந்துதான் உங்களுக்கு ராமக்ருஷ்ணஜி அவதாரத்தை ஒன்று

எத்தனை விதமான பத்திரிகைகளைப் படித்தாலும் ஒவ்வொன்றில் ஒவ் வொரு ருசி இருக்கிறது. விஷயங்களும் கிடைக்கின்றன. அத்தகைய பத் திரிகைகளைப் படிக்கச் சிலர் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

புது வருஷப் பத்திரிகை!

அமிர்தவசனி.

பிரஜோற்பத்தி பஞ்சாங்கம், புதிய நாவல், சென்ற வருஷ நிகழ்ச்சிகள், பாரதியின் வீரப்பாட்டு, அரியதோர் நாம சங்கீர்த்தனம் முதலியன அடங்கியது. பல அழகான ஆப்டோன் படங்களுடன் கூடியது.

விலை (தபாற்கூலி யுள்பட) அணா 3½.

முந்துங்கள்! முந்துங்கள்!!

S. V. சுப்பையா பாகவதர், T. M. காதர்பாட்சா, T. S. ரங்கம்மாள், A. S. ராஜப்பா, S. R. கமலம், K. T. நடராஜம் பிள்ளை இவர்கள் பாடிய

கிராமபோன் கீர்த்தனம்ருதம்.

1 முதல் 8 பாகங்கள் சேர்ந்த கட்டடம்; 128 பக்கங்கள் கொண்டது; ஆப்டோன் படம்போட்ட ஆர்ட் ராப்பர் போடப்பட்டது.

விலை அணா 12; இப்போது விற்கும் விலை அணா 8.

நாகரீக வேட்கையில் ஆர்வமுற்ற நங்கையைப் பற்றிய ஒரு சிறிய நாவல்!

எல்லாம் மர்மம்! எல்லாம் கற்பனை!!

'சரோஜினி' அல்லது நாகரீக வேட்கை.

விலை அணா 5. இப்போது விற்கும் விலை அணா 3½.

தபாற் செலவு இனும்!

குறிப்பு:—மை புஸ்தகங்கள் வேண்டுவோர் விலையைமட்டும் முன்னதாக (இந்தியா) போஸ்டேஜ் ஸ்டாம்பு அனுப்பிப்பெறலாம்.

பண்டித ஜவஹர்லால் நேரு.

இந்தியரின் மூச்சிலும் பேச்சிலும் இன்று பிரதான புருஷராயிருக்கும் பண்டித ஜவஹர்லால்! இளஞ்சிங்கங்களைத் தட்டி எழுப்பிப் புது உற்சாகமும், ஊக்கமும், பலமும், ஊட்டிய நமது மாபெருந் தலைவர். இவர் ஜீவியசரிதம் இப்பொழுது விற்பனைக்குத் தயார்.

விலை அணா 12. தபாற் கூலி அணா 3 வேறு.

பெரிய எழுத்துப் புத்தகங்கள்.

	ரூ.	அ.		ரூ.	அ.
ஸ்ரீமத் கம்பராமாயணம்-வசனம்-படங்களுடன்	4	12	பஞ்சபாண்டவர் வனவாசம்	0	6
ஆதி பர்வம்	2	0	நாலாயிர பிரபந்தம் அழகிய கலர் படங்களுடன்	4	0
விராட பர்வம்	1	0			
ஸ்ரீராமர் அசுவமேத யாகம் படங்களுடன்	1	8	தபாற் செலவு வேறு.		

குறிப்பு:—(1) இன்னும், வேதாந்த சித்தாந்தம், தோத்திரம், வசனகாவியம், திருப்புகழ், சதகம், சங்கீதம், சந்நிதிமுறை, பெண்களுக்குரிய நூல், பராக்கிரமம், ஆக்ட் புத்தகங்கள், நிகண்டு, அகராதி, ஜாலம், மாந்திரீகம், ஜோதிடம், கீர்த்தனை, டிராமா, விலாசங்கள், ரகசிய சாஸ்திரங்கள், வைத்திய தினுசுகள், மகம்மது மார்க்கப் புத்தகங்கள், பள்ளிக்கூடப் புத்தகங்கள், முதலிய எல்லா புத்தகங்களும் கிடைக்கும்.

(2) ஆர்டர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

எமது விலாசம்:—
தி லிட்டில் ப்ளவர் கம்பெனி,
புத்தக வியாபாரிகள்,
334, தம்புசெட்டித் தெருவு, சென்னை.

Our Address:—
THE LITTLE FLOWER Co.,
Book-Sellers,
334, Thambu Chetty St.,
G. T., MADRAS.

ம-ா-ா-ஸ்ரீ ராவ்பஹதூர் ப. சம்பந்த முதலியார் அவர்கள் பீ. ஏ. பீ. எல்., எழுதிய நாடகங்கள்.

	ரூ	அ.		ரூ.	அ.
நற்குல தெய்வம்	0	8	மாளவிகாக்னிமித்ரம்	0	10
யயாதி	0	10	வேதாள உலகம்	0	10
மனோஹரன்	1	0	மெய்க் காதல்	0	12
உண்மையான சகோதரன்	1	0	சிம்ஹளநாதன்	1	4
ஹரிச்சந்திரன்	1	0	வாணீபுர வணிகன்	1	0
விரும்பியவிதமே	1	0	விக்ரம ஊர்வசி	0	10
நோக்கத்தின் குறிப்பு	0	10	தாசிப்பெண்	0	12
விபரீதமான முடிவு	0	8	சபாபதி I	0	8
சிறுத்தொண்டர்	0	8	,, II or பொங்கல் பண்டிகை	0	8
பொன் விலங்குகள்	0	10	ஓர் ஒத்திகை or சபாபதி III	0	8
புஷ்பவல்லி	0	12	கொடையாளி கர்ணன்	0	8
விச்சுவின் மனைவி	0	8	சுபத்ரார்ஜுன	0	12
சத்ருஜித்	1	0	மார்க்கண்டேயர்	0	10
காலவரிஷி	0	10	ஊர்வசியின் சாபம்	0	10
சகுந்தலை	0	10	மனைவியால் மீண்டவன்	0	8
சகாதேவன் சூழ்ச்சி	0	8	மஹாபதி	1	0
லீலாவதி சுலோசனை	0	12	சந்திரஹரி	0	8
ரஜபுத்திரவீரன்	0	8	இடைச்சுவர் இருபுறமும்	0	8
பிரஹசனங்கள் (Farces)	0	10	காதலர் கண்கள்	0	12
சாரங்கதரா	0	12	ரத்னவளி	0	14

இன்னும் மற்ற நாடகங்களும் கிடைக்கும். தபாற் கூலி வேறு.

G. W. M. REYNOLDS' NOVELS.

Steam Packet 1 Vol.	0	12	Grace Darling	0	12
Mary Stuart (2 Vols. in one)	1	4	The Soldier's Wife	1	8
Ryehouse Plot (In 4 Vols.)	3	0	Short Stories	0	10

Omar—A Tale of the Crimean Wars In 4 Vols. 3 0

—:o:—

Birth of New India—By Dr. Annie Beasant 1 0

Word's Greatest Man on Trial 0 4

Revolutionary Biographies 1 0; Message of the Martyrs 0 8

Palmistry and Allied arts 1 8

All other books are always avilable with us. Prompt attention to mofussil enquires.

Our Address :—
THE LITTLE FLOWER Co.,
Book-Sellers, 334, Thambu
Chetty St., G. T., Madras.

எமது விலாசம் :—
தி லிட்டில் ப்ளவர் கம்பெனி,
புத்தக வியாபாரிகள்,
334, தம்புசெட்டித் தெருவு, சென்னை.

கட்டி கதையாகக் கூறினேன். அதை யறியும் பக்குவத்தை, ஞானத்தை இனியாவது நீங்கள் அடைவீர்கள் என்று நம்புகிறேன். உங்களுடைய விருப்ப மிருப்பின் அதைத் தெரிவித்தால் நீங்கள் கவுரவமாகவே எங்கள் சங்கத்திற்கு உதவி செய்ததாகப் பத்திரிகைகளில் ப்ரசுரித்து விடுகிறேன். இல்லையேல் இப்பொழுது நடந்த சகல விஷயத்தையும் ஒன்று விடாது ப்ரசுரித்து அந்த பணத்தை நான் தருமம் செய்வதாக வெளியிட்டு விடுகிறேன். உங்கள் அநுமதிக்காக இக் கடிதம் எழுதினேன். லோபித் தன்மையை இனி ஒழித்து சிறிது புண்ணியமேனும் செய்ய முன்வாருங்கள். இந்தக் கடிதம் கொண்டுவரும் ஆள் வசம் உங்கள் பதிலைத் தெரிவிக்கவும். தேசத்திற்காகவும், ஏழைக்காகவும் செலவிடுவதற்குப் பணத்தை மோசமாக அபகரித்துவிட்டதாக உங்கள் அறிவு அற்ற தன்மையினால் நினைக்கலாம். இதற்கோர் உதாரணங் கூறுகிறேன். எல்லாவற்றையும் விட உலகத்தில் சிறந்தது தருமம் தான். திருமங்கையாழ்வார் என்கிற ஓர் பக்தன் ஏழைகளுக்கும் இன்னும் மற்றோருக்கும் அன்னதானம் செய்யும் பொருட்டு வழி பறிக்கொள்ளையே செய்து சிறந்த தானத்தைச் செய்தார். இந்த தானத்தின் மகிமையினால் எத்தனையோ லோபிகளின் பணம் நன்மார்க்கத்தில்செலவாகும் புண்ணியம் அவர்களுக்குச் சேருகின்றது. தருமத்திற்கு என்று லோபிகளைக் கேட்டால் கொடுக்கமாட்டார்கள். மோசமாகப் பொருளீட்டுவது பாபமாயினும் அந்த பாபம் பொருளீட்டுகிறவர்களோடு நின்றுவிடுகின்றது. இவர்கள் நரகத்திற்குச் சென்றாலும் மற்றைய ஏழை மக்கள் வயிறு குளிர்ந்து ஆசியளிப்பதுதான் பெரும் மகிழ்ச்சி அது ஒன்று போதும். இதை உத்தேசித்தே உடையவரென்ற பக்தர் திரு மந்திரார்த்தம் த்வயம், என்பவைகளை ஜனங்களின் நன்மைக்காக வெளியிட்டு ஜனங்களை உய்வித்தார். அவற்றை வெளியிட்டால் உடையவரின் தலை வெடித்துவிடக்கூடிய சாபத்தை யளித்தவரோ பிறகு உள் கருத்தைக் கண்டதும் அதை மாற்றிவிட்டார். ஆகையினால் இது ஒருவரின் போதனை யல்ல. ஒருவருக்காக வேஷமல்ல. ஏழைகளிடத்தில் எனக்குள்ள வாஞ்சையினால் நான் செய்தேன். அவர்களின் பசி யாறுவது எனக்குப் பிரதானமே யன்றி என்னுடைய விஷயம் எனக்குப் பிரதானமல்ல. இதனால் எனக்கு எத்த

கைய கேடு வந்தாலும் அனுபவிக்க நான் தயாராக விருக்கிறேன்; சற்றும் இளைத்தவளல்ல. ஏழை மக்களின் உணவுக்காக என் சரீரத்தைச் செருப்பா யுழைக்கவும் நான் தயாராக விருக்கிறேன். இந்த விஷயத்தில் மகாத்மா காந்தியாவது, மற்ற தேசத் தொண்டர்களாவது சம்மந்தப்படவில்லை, ஆகையினால் இது என்னுடைய சொந்த வேலை. வெகு நாட்களாக நடைபெறுகின்றது. உங்களுடைய பிறவியை இதுபரியந்தம் பாழ்படுத்தியது போல இனிமேல் இல்லாது நீங்களும் உய்யும் வழியைச் செய்துகொள்ளுங்கள். மலமும், ஜலமும், சீயும், ரத்தமும், மாமிசமும் கேவலமான அசங்கியப் பொருள்களடங்கிய பாழும் உடலைக் கண்டு மயங்காதீர்கள். அவைகள் அநித்யமானவையென்பதை இனியாவது அறிந்துகொள்ளுங்கள்.

உடனே பதிலளிக்கக் கோரும்
தேவதாசி குலத்தில் பிறந்த
அம்புஜா.

(நமது இராதாமணி என்ற புத்தகத்திலும் ருக்மிணிகாந்தனிலும் இந்த அம்புஜத்தின் தீர சாமர்த்தியங்களை அறியலாம்,—)

இந்தக் கடிதத்தைப் படித்த அங்குள்ள எனையோருக்கும் திடுக்கிட்டது. தேவதாசி குலத்தில் பிறந்த ஓர் மாது செய்த பல திறமையான வேலைகளைக் கேள்விப்பட்டது அவர்களுக்கு நினைவிற்கு வந்தது. அவர்கள் எல்லோரும் ஒன்றுமே தோன்றாது சற்று நேரம் திகைத்தார்கள், தாங்கள் ஏமார்ந்தது ஒருபுறம். தங்களுடைய அறியாமையை நன்றாகத் தெரிந்து கொண்ட வெட்கக்கேடு ஒரு புறம் பாதிக்கின்றது. இந்தக் கடிதத்தைத் திருப்பி பத்துதரம் படித்தார்கள். கந்தசாமியின் மனம் சற்று மாறுதலடையத் தொடங்கியது. ஏனெனில் தன்னுடைய பணம் முற்றும் புகழற்ற தன்மையில் செலவழிந்து விட்டதே! தனது செல்வம் இது பரியந்தம் லக்ஷக் கணக்கில் செலவாயதற்கு ஒருவிதமான நன் மதிப்பும் கவுரவமும் அற்றுவிட்டதே, என்ற எண்ணம் அப்போதே உதிக்கத் தலைப்பட்டது. தான் நன்மார்க்கத்தில் பணத்தைச் செலவிட்டிருந்தால் தனக்கு எவ்வளவு புகழ் கிடைத்திருக்கும், தன் பெயர் எவ்வளவு பரிமளித்திருக்கும். எல்லாம் போய்விட்டதே!" என்று சிந்தித்தவாறு "ராமா! என்ன எண்ணுகிறாய்! இக்கடிதத்திற்குப் பதில் என்ன விடுப்பது?" என்றான்.

இதுகேட்ட ராமன் ஒன்றுமே தோன்றாதவாறு சற்று விழித்தான். பிறகு பேசத் தொடங்கி "கந்தா! நாம் இதற்கு ஜாக்ரதையாக பதில் எழுதவேண்டும். ஏனெனில் நம்முடைய ரகஸியங்களையும் சூழல்களையும் வெளிக் கிளப்பாத வழியில் நடக்கவேண்டும்.

அனியாயமாய் நாம் இது காறும் பாழாகி விட்டோம். திருடனுக்குத் தேள்கொட்டியதுபோலத் தான் நாம் இருக்கவேண்டும். எதிராகச் சென்றால் சாக்கடைக்குப்பை எல்லாம் கிளம்பிவிடும். ஆகையினால் நாம் இன்னொரு ஐயாயிரம் ரூபாயையும் கூட வைத்து சந்தோஷமாக கொடுத்து விட்டுத் தப்பித்துக் கொள்ளும் வழியைப் பார்க்க வேண்டும். அதைவிட்டால் வேறு வழி இல்லை. பிறகு மற்றதை யோசிக்கலாம் என்று ஒருவருக்குள் ஒருவர் இரகஸியமாகத் தீர் மானித்துக் கொண்டு ஐயாயிரம் ரூபாயை ஓர் கவரில் வைத்து, "அம்மா! எங்களுக்குப் புத்தி கற்பித்துப் புத்துயிர் அளித்தற்காக வந்தனம். உங்களிஷ்டப்படியே செலவுசெய்யும்பொருட்டு இன்னும் ஐயாயிரம் ரூபாய் அனுப்பி இருக்கிறேன். பெற்றுக்கொள்ளவும். இங்ஙனம்"..........என்று வரைந்தனுப்பி விட்டார்கள்.

இவர்களுக்கு மனமே சரியாகவில்லை. பெருத்த குழப்ப மடைந்துவிட்டது. மனம் வைராக்யத்தையும், பாசியையும், மாறி மாறி அடைந்து கொண்டே இருப்பதால் ஒன்றும் தோன்றாமல் தத்தளித்தார்கள். ....யோசனை செய்து பார்த்தார்கள். சரி "கடற் கரைக்கேனும் சென்றுவிட்டு வருவோம்" என்று தீர்மானித்தார்கள். க்ருஷ்ணசாமிக்கு உள்ள வருத்தம் கூறத்திறமன்று. கைக்கெட்டிய கனி நழுவி விட்டதே என்று பெரும் வருத்தமுற்றான். பிறகு மோட் டாரில் கந்தன், ராமன் முதலியோர் ஏறிக்கொண்டார்கள். க்ருஷ்ண சாமி ஓட்டத்தொடங்கினான். க்ருஷ்ணசாமிக்கு பெருத்த நஷ்டம் ஏற் பட்டுவிட்டமாதிரியாகவும் ஏதோ மோசம் வந்துவிட்டது போன்றும் மனம் கலக்க மடைந்துக் குழம்பி விட்டதால் தன்னினைவு தனக் கின்றி வண்டியை ஓட்டிக் கொண்டே வந்தான்.

வழியில், கோயிலுக்குச்சென்று சுவாமி தரிசனம் செய்துவிட்டு வரும் கூட்டம் பெருத்திருந்த விடத்தில் தன்னினைவு அற்று வண்டி யோட்டியதால் திடீரென்று வண்டி ஓர் பெண்மணியின் மீது ஏறி விட்டது. "ஹா! வென்று சத்தமிட்டுக் கொண்டே அப்பாவை பூமி யில் வீழ்ந்தாள். உடனே வண்டியைச் சுற்றிக் கூட்டம் நிறைந்து விட் டது. வண்டியும் நின்றுவிட்டது. போலீஸார் உடனே வந்து விட் டார்கள். இத்தனை அமர்க்களம் நடக்கையில்தான் க்ருஷ்ணசாமி, தான் வண்டியை யார்மீதோ ஓட்டி விட்டோம் என்பதை உணர்ந்து திடுக்கிட்டான். உடனே இறங்கி விழுந்து கிடக்கும் பெண்மணியைக் கவனித்தான். அவ்வளவுதான் நடுக்கலுற்றான். அவள் தனது மனைவி ரங்கமணியாக விருக்கக் கண்டதும் இடிமுழக்கங் கேட்ட நாகம் போலப் பிரமித்து, இடிந்து போய்க் கல்லாய்ச் சமைந்து நின்று விட்டான்.

கையறு நிலை

1. பெற்றதா யொருத்தி யேனும் பிரிதொரு தாயே யாகி
உற்றபே ரன்பு கொண்டு ஓராண்டு முதலா யென்னைப்
பற்றுதலுடனே காத்துப் பரிவொடு வளர்த்த வென்றன்
நற்றவத்தாயே விண்ணை நாடி நீ சென்றிட்டாயே!

2. அன்னையை அறியா முன்னர் அன்னை அவ் வுலக மேகி
உன்னிட மென்னை விட்ட உண்மையை உணரா வாறு
அன்னைதான் நீயே என்று அகமகிழ்ந்திருக்கச் செய்த
அன்னையே உன்றன் அன்பை என்னவென் றுரைக்க வல்லேன்.

3. சிந்தையில் துயர மென்றும் சிறிதும் நான் அறியாவாறு
உந்தன் பேரன்பு காட்டி உழைத்திராப் பகலென் றறியா
நொந்த நோமும் நீ என்னை ஏந்தியே மடியிற்றூங்கி
சொந்தமாய் வளர்த்த அன்னாய் சொர்க்கம் நீ புகுந்திட்டாயோ

4. இனிய நற் சங்கீதத்தை இசையுடன் பாடக் கேட்கும்
தனிப் பெரும் ஆற்றல் பெற்ற தாயே அறிவுச்சுடரே!
இனியெவ ருன்போ லென்னை இனிமையாய் அழைக்க வல்லோர்
கனியினும் இனிய தாயே! காண்பனோ இனிமே லுன்னை!

5. கேட்ட பொரு ளனைத்து மீந்து கேடொன்று மணுகா வாறு
வாட்டமாய் வருத்த மற்று விளையாடும் வகையில் உன்றன்
நாட்டமும் விழியும் செல்ல நயந்துப சரித்துப் பின்னும்,
ஊட்டியே யென்னை வளர்த்த உத்தமத் தாயே போற்றி.

6. பிணிவாயிற் பட்ட காலை பிரிந்திடா தருகில் வீற்று
தணிவுடன் பாது காத்துத் தகைமையாய் மருந்தளித்துக்
கணமும் நித்திரையிலாழாக் கருத்துடன் அன்பு கொண்ட
குணமிகு தாயே! உன் போற் குவலயத்தி லொருவர் உளரோ?

7. கன்னியாக் குமரி முதலாய்க் கவின்பெறு மிமயஞ் சேர
நன்னத யாத்திரைகள், நத்தியே செய்து ஈசன்
தன்னயத் தரிசனங்கள் தாமுடனாற்றி தக்கோய்!
இன்புற மறுமைக்கே தான் ஈட்டினாய் புனிதம் எந்தாய்!

8. என்பத்தி யாறு ஆண்டும் இன்பவில் வாழ்க்கை தன்னில்
பண்புடன் செலுத்தி எம்மைப் பக்குவமாகக் காத்த
கண்மணித் தாயே! எங்கள் கற்பகச் செல்வமே நீ
விண்பதம் சேர்ந்திட்டாயோ விமலனைப் பணிந்திட்டாயோ!

9. கடுத்திடும் முகத்தைக் காட்டாக் களிப்புடன் அறிவை யூட்டிக்
குடித்தனப் பாங்கை யோதி கோதிலாக் குணங் கற்பித்து
மடத்தன மகலச் செய்து மமகாரப் பேயை யோட்டிப்
படித்துப தேசம் செய்த பாங்குடை அன்னாய் போற்றி

10. தாயொக்கு மன்பி லென்னுந் தகைமை சால் கம்பன் சொல்லும்
தாயொடு அறுசுவைபோ மென்ற தண்டமிழ்தாய்ச் சொல்லும்
வாய்மை யென் றுணர்ந்தேனின்றே வாக்கினோர் உயர்ந்த வற்றைத்
தாய் தனக் கிணையாக் கூறும் தகைமையு மறிந்திட்டேனே!

வை. மு. கோதைநாயகி

எனது அன்புமிக்க சகோதர சகோதரிகட்கு ஒரு விண்ணப்பம்.

என்னை ஈன்ற அன்னை வேறொருத்தி யென்பதை என்னை இன்பமுடன் வளர்த்த அன்னையின் வாயிலாக எனது 8வது பிராயத்திலேயே அறிந்தேன். என்னருமைத் தந்தையைப் பெற்றெடுத்த மகா புனிதவதியே என்னை எனது ஓராண்டு முதல் எடுத்து வளர்த்தாள். என் தாய் இறந்த செய்தியே யானறியாவாறு எனக்கு அவளே தாயாகப் பாலூட்டி வளர்த்த என் கண்மணித் தாய் சென்ற மாதம் விண்ணுலகம் சேர்ந்தாள். என்னை அன்புடன் வளர்த்த தாய், கண்மணி போன்று காத்த தாய், இணையிலா, அறிவு படைத்த இன்பத் தாய், உலகிற்கே ஏற்றமாயிருந்த உத்தமத் தாய், சங்கீதத்தில் வல்லமை பெற்ற சற்குணத் தாய், பக்ஷபாதமற்று எல்லோரையும் சமமாக எண்ணும் பத்தினித் தாய், எண்பத்தியாறு வருடம் ஏற்றமாயும், எதேச்சாதிகாரமாயும், கண்ணியமாயும் இல்லறம் புரிந்த எந்தெழில் தாய் என்னுயிருனுமினிய ஒப்பற்ற தாயார் பரமபதம் அடைந்துவிட்ட நிமித்தம் என் மனம் அடைந்த துயரத்தைக் கூறத் திறமன்று அந்த விஷயமாய் என் மனம் சிதறிக் கிடந்தமையினால் நமது மோகினிச் செல்வியை குறித்த நேரத்தில் அனுப்பத் தவறிவிட்டது. குறித்த கெடுவு தாண்டியபிறகு வாசகர்களுக்கு ஒரு பத்திரிகையை அனுப்ப இஷ்டமில்லாது 7—8 ஆகிய இரண்டு பத்திரிகைகளையும் ஒன்றாகச் சேர்த்து தயார் செய்து அனுப்புவதற்குப் பின்னும் காலதாமதமாகி விட்டது. என்னுடைய மேல் குறித்த காரணத்தினால் நேயர்கள் அனைவரும் மன்னிக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

நிற்க, சுதேசிக் கீர்த்தனை இன்னும் சொற்ப ப்ரதிகளே கைவசமிருக்கின்றபடியால் வேண்டுவோர் இரண்டரை அணா தபால் தலையனுப்பிப் பெற்றுக்கொள்ளவும். **தேசத் தொண்டே தெய்வத் தொண்டு** என்பது போல தேச சேவையில் நான் ஈடுபட்டிருப்பதால் அந்த விஷயமாக எனக்கு அடிக்கடி எதிர்பாராத வேலைகளும், கிராமப் பிரசாரங்களுக்குச் செல்லும்படியாயும் நேரிட்டு விடுகின்றது; அது காரணம் பற்றி நமது மோகினி குறித்த காலத்தில் வருவது தவக்கப்படாது; எனினும் ஒரு சமயம் சற்று தாமதமாகுமாயின் தேச பக்தியுடைய நேயர் அனைவரும் மன்னிக்க வேண்டுகிறேன்.

சென்ற ஆண்டின்

ஏழாவது இதழிலிருந்து ("சாமளநாதன்" ஆரம்பமுதல்) சேர்ந்த நண்பர்களின் சந்தா, இவ் வாண்டின் 6-வது இதழோடு (மே மீ) முடிந்து விட்டது. ஆயினும் அவர்களுக்கும் இந்த 7-8 இதழ்கள் அனுப்பி இருக்கிறோம். பாக்கி சந்தாவாகிய **அணா பன்னிரண்டை** சீக்கிரம் அனுப்பும்படிக் கோருகிறோம். அடுத்த ஆண்டின சந்தாவையும் இதோடு கூடச் சேர்த்தனுப்பினால் அவர்களுக்கு தபாற் செலவு மிகுதியாகு மென்பதைத் தெரிவிக்கின்றோம்.

தங்கள் சகோதரி

வை. மு. கோதைநாயகி.

சுதேசி லாக் கெட்டுகள்





1.	குரோஸ்	ரூ. 17—8—0
2.	,,	ரூ. 11—0—0
3.	,,	ரூ. 8—8—0
4.	,,	ரூ. 6—4—0

பாக்கிங், தபாற் செலவு பிரத்தியேகம். எட்டணு ஸ்டாம்பு அனுப்பினுல் மேற்கண்ட நான்கு வித ஸாம்பில்களும் அனுப்பப்படும்.

ஸாம்ஸன் கம்பெனி

திருவல்லிக்கேணி, சென்னை

பரிசுகளின் விவரம்.

6-வது சஞ்சிகைக்குப் பிறகு பணம் அனுப்பியவர்களில் கீழ்க் கண்டவர்களுக்கு பரிசுகள் விழுந்திருக்கின்றன.

சந்தா ந.

M. 16. Mr. C. Munisamy, Klang.

P. 95. Srimathi Padmavathi Ammal. Colombo.

மேற்கூறியவர்கள் தமக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

அடுத்த சஞ்சிகை வெளியாவதற்குள் சேரும் சந்தா நேயர்களுக்கும் 5-ரூபாயில் இரண்டு பரிசுகள் கொடுக்கப்படும்.

மானேஜர்

இந்தியாவில் பெரியதும்,
ஏனைய கம்பெனிகளை விட, மூலதனம் மிகுதியா யுள்ளதுமான ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியாகிய

"நியூ இந்தியா"

வில் இன்ஷியூர் செய்யுங்கள்.

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ், கட்டடங்கள், சரக்கு களுக்கு தீ விபத்தினல் நேரும் இன்ஷ்யூரன்ஸ், ஏற்றுமதி இறக்குமதியில் சரக்குகளுக்கு இன்ஷ்யூரன்ஸ்

மோட்டார் கார் முதலிய இன்ஷ்யூரன்ஸ்களை இக்கம்பெனியார் குறைந்த விகிதத்தில் செய்கிறார்கள்

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் வேலை ஆரம்பித்த இரண்டு வருஷங்களுக்குள்ளாக

ஒரு கோடியே 55 லக்ஷத்துக்கு புரோபோசல்கள் பெற்று 1 கோடியே 10 லட்சம் பெறுமான லைப் பாலிஸிகளைப் பூர்த்திசெய்து இந்தியாவில், ஏற்கனவே யுள்ள எல்லா லைப் இன்ஷியூரன்ஸ் கம்பெனி களையும் நியூ இந்தியா தோற்கடித்து விட்டது.

எமது வரவு செலவு திட்டத்துக் கெழுதித் தருவித்து எங்க ளிடம் இன்ஷியூர் செய்வதால் உங்களுக்கு ஏற்படும் ஏராள மான பாதுகாப்பை நீங்களே காணுங்கள்.

4/5, முதல் லைன் பீச்,
மதராஸ்.

கே. கே. ஸ்ரீனிவாஸன்,
பிராஞ்சு மானேஜர்.

கெட்டி சாயம்! உயர்ந்த உடை !! விலை நயம்!!;

உயர்தரமான பம்பாய் கெட்டிச் சாயமுள்ள

கலர் புடவைகள்

இவைகள் தினந்தோறும் தோய்த்து அணியத் தக்கவை. கெம்புரோஸ், ஆரஞ்சு, பச்சை, சாக்லேட் நிறங்களில் கிடைக்கும். பெண்மணிகளைத் திருப்திப்படுத்த பளபளப்பும் வசீகரத்தோற்றமும் கொண்ட இவ்வாடைகளை வாங்குவதே சரி.

அளவு 18 × 2¾ முழங்கள்.

முதல் ரகம் விலை ரூ. 5-0-0 **2-வது ரகம்** ரூ. 4-0-0

பூக்கொடிக்கரை நெய்து முந்தாணியில் பூவேலை செய்திருக்கும் உருப்படி 1-க்கு ரூ. 1-8-0 அதிகம்.

ஜர்மன் சில்க் புடவைகள்

சாதா: மயில் கழுத்து, பொன் வண்டு, மேகவர்ணம், மாந்தளிர், பச்சை, அரக்கு, கருப்பு முதலிய எல்லாக் கலர்களிலும் கிடைக்கும். பெங்களூர் முந்தாணி போட்டது. கலர் கெடாதது. மனோகரமான மழமழப்பு; பளபளப்பு மாறாதது. ரம்மியமான தோற்றமுள்ளது. நேர்த்தியான நெசவு கொண்டது. நீடித்து நிற்பது. உறுதியானது.

18 × 2¾ முழங்கள் விலை ரூ. 11-0-0

ரவிக்கை துண்டு 1-க்கு 0-11-0

கோட்டடி: கரைகளில் பேட்டு வைத்து உடலில் பவழக் கொடி, தந்திக் கம்பி, டில்லி தர்பார் முதலிய தினுசுகள்.

18 × 2¾ விலை ரூ. 11-4-0

ரவிக்கை 1 முழம் 0-12.0

மேற்படி பிளைன், கொட்டடி தினுசுகளில் ருத்திராக்ஷப் பேட்டு வைத்து தலப்பிலும் ஜரிகை (கருக்காதது) வேலை செய்ய உருப்படி 1-க்கு 3.0.0 அதிகம்.

குறிப்பு....உத்தம உடைகளுக்கு உத்தரவாதம். ஆகவே நல்ல சரக்குகளை இங்கேயே வாங்குங்கள். ஆர்டருடன் கால் பங்கு முன்பணமனுப்புக. தபால் கூலி வேறு.

ஒரே சமயத்தில் 100 ரூபாய் சரக்கு வாங்குபவர்க்கு 1 ரூபாய்க்கு 0-1-6 வீதம் குறைக்கப்படும்.

ஸிட்டி நெசவுச் சாலை,
65, அரமனைக்கார வீதி,
ஜி. டி. சென்னை.

ஏஜண்டுகள் தேவை.

210034

Published by V. M. Parthasarathy Iyengar,
for "JAGANMOHINI OFFICE"
PRINTED AT THE TATA PRESS, MADRAS.

" ஜகன்மோகினி " யில்
வெளிவந்த நாவல்கள்.

மலர் 1. ஸ்ரீமான் வடூவூர் கே. துரைசாமி அய்யங்கார் எழுதிய

மலர் 1.	காளிங்கராயன் கோட்டை ரகசியம் (2-பாகங்கள்)	ரூ.	4	0	0
மலர் II.	விலாஸவதி (2-பாகங்கள்)	ரூ.	3	0	0

ஸ்ரீமான் அ. முத்துகிருஷ்ணன் எழுதியவை

கனகசபை	ரூ.	1	8	0
கோகிலம்	ரூ.	0	6	0

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதியவை

மலர் III.	வைதேகி (2-பாகங்கள்)	.... ரூ.	2	8	0
மலர் IV.	பத்மசுந்தரன் (2-பாகங்கள்)	... ரூ.	2	8	0
மலர் V.	ராதாமணி (2-பாகங்கள்)	... ரூ.	2	8	0
மலர் VI.	நவநீதகிருஷ்ணன்	... ரூ.	2	0	0
மலர் VII.	சாருலோசனா (2-பாகங்கள்)	.... ரூ.	2	0	0
	ருக்மிணீ காந்தன்	.... ரூ.	2	0	0
	சண்பக விஜயம்	.... ரூ.	1	12	0
	கௌரீ முகுந்தன்	.... ரூ.	1	12	0
	சுகந்தபுஷ்பம்	.... ரூ.	1	0	0
	கோபால ரத்னம்	... ரூ.	0	14	0
	வீரவஸந்தா	.... ரூ.	0	8	0
	மாதவமணி	.... ரூ.	0	3	0

"ஜகன்மோகினி" சந்தாதார்களுக்கு குறைந்த விலை.

வைதேகி ...	... ரூ.	2	0	0
பத்மசுந்தரன்	.... ரூ.	2	0	0
ராதாமணி	.... ரூ.	2	0	0
சாருலோசனா	.... ரூ.	2	0	0
நவநீதகிருஷ்ணன்	.... ரூ.	1	12	0
ருக்மிணீ காந்தன்	.... ரூ.	1	12	0
சண்பகவிஜயம்	.... ரூ.	1	8	0
கௌரீமுகுந்தன்	.... ரூ.	1	8	0

" ஜகன்மோகினி " ஆபீஸ்

26, தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

இனும் தபாற்செலவு

ஒரு அணு ஸ்டாம்ப

போதிராயர் " "

நாவ

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் திவ்ய ஔஷதம்

40 வருஷங்களாக

"ஜகன்மோகினி" யாய் விளங்குவது

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

விலை அணா பத்து.

டிபோ,